


# நிலவும் சுடும்

சிறுகதைத் தொகுப்பு

சி. இராஜினிதேவி

# நிலவும் சுடும்

சி.இராஜினிதேவி

கரிகணன்,
யாழ்ப்பாணம்.

நிலவும் சுடும்

சிறுகதைகள்

© : சி.இராஜினிதேவி,
'பழமுதிர்சோலை'
உடுவில் கிழக்கு சுன்னாகம்

முதற்பதிப்பு : 2013 சித்திரை

பதிப்பு : கரிகணன், யாழ்ப்பாணம்

அட்டை ஒளிப்பட

அமைப்பு : பொ.ஐங்கரநேசன்

விலை : ரூபாய் 250/=

ISBN : 978-955-44400-0-5

எனது அருமந்த கணவர்
சிவாவுக்கு

## நன்றி

• சட்டநாதன் • வசந்தமாலா
• ஐங்கரநேசன் • சிவலிங்கம் • உதயன்
• கரிகணன்

• சுமை • அமைதிப்பூங்கா • நிலவும் சுடும்

• மெழுகுவர்த்திகள் • பொய்முகங்கள் • உதவும் கை

• நிறம் மாறும் மனிதர்கள் • ஏமாற்றம் • அன்பின் வலிமை

• கனவும் காலங்கள் • கல்லுக்குள் ஈரம் • தரையில் விழுந்த மீன்

# இராஜினிதேவியின் படைப்பு முகம்

சிறுகதை எனும் வடிவம் மேற்கிலிருந்து வந்த ஒன்றாகும். சிறுகதை என்பது - ஒரு சிறு சம்பவத்தை, வாழ்வின் ஒரு சரட்டை மையப்படுத்தி எழுதப்படுவதாகும். அது ஒருமை உணர்வைக் கதை நெடுகிலும் பேணுவதுடன், உருவ அமைதியையும் உள்ளடக்கக்கனதியையும் உடையதாக இருப்பது சிறப்பானதாகும். நல்ல சிறுகதைகள் இப்பண்புகளைக் கொண்டிருக்கும்.

சிறுகதைக்கு ஆரம்பம், நடு, முடிவு உண்டு என மரபு ரீதியான ஒரு விளக்கம் உண்டு. இச் சம்பிரதாயங்கள் இல்லாமலே நல்ல சிறுகதைகள் இப்பொழுது வெளிவருகின்றன. இத்தகைய கதைகள் திடீரென ஆரம்பித்து, உச்சம் பெற்று, அதிலேயே முடிந்துவிடுகின்றன. இன்னும் சில கதைகள் முடிந்தபின்னரும், வாசகமனதை வருடி, விரிவு கொள்ளும் தன்மையுடன் விளங்குகின்றன. சில கதைகள், கதையோட்டத்தின்போது, நிரம்பிய மௌன இடைவெளிகளைக் கொண்டு, வாசகமனதின் நீட்சியான தேடலைக் கோரி நிற்பதாகவும் உள்ளன.

பொதுவாகப் பல படைப்பாளிகள், யதார்த்தப்பாங்கான கதைகளையே படைக்கின்றனர். புறநடையாக, சில பரிசோதனைப் பிரியர்கள் மிகு கற்பனைக் கதைகளையும் மாய யதார்த்த வாதப் பண்புமிக்க கதைகளையும் எழுதுகிறார்கள்.

இந்தப் பின் புலத்தில் இராஜினிதேவி சிவலிங்கம் அவர்களது சிறுகதைகளைப் பார்ப்போம். இவரது கதைகள் எல்லாமே யதார்த்த நெறி நின்று இயங்குபவையாகவே உள்ளன.

இவரது கதைகளில் மனித உறவுகளின் அடிச்சரடான - அன்பின் நெகிழ்ச்சி, சகமனிதன் மீதான நேசம், நலிந்தவர்களுக்கு உதவும் பண்பு; வசதிபடைத்த வர்க்கத்தினரது வரட்டுக் கௌரவம்; அதனடியான வக்கிர விகசிப்பு எனப் பல விஷயங்கள், பரவலாக விரவி வருகின்றன. இந்த அம்சம் இவரது கதைகளை உள்ளடக்க ரீதியாக வலிமை மிக்கவையாக ஆக்கியுள்ளது.

எல்லாக் கதைகளையும் கதை சொல்லியே - உத்தி மாற்றம் ஏதுமில்லாமல்-சொல்வதும்; அத்துடன், கதைகளில் அடைசலான விடயங்கள் பலதை வழியவிடுவதும் கதைகளின் ஒருமைத்தன்மையைச் சிதைப்பதோடு, அழகியல் ரீதியான பிடிமானத்தையும் தளர்ச்சியடைய வைத்துவிடுகின்றன.

ஏலவே குறிப்பிட்டது போலக் கதைகள், மையப்படுத்திய விடயங்களான - மானிடமேன்மை, மனிதநேயம் என்பவற்றை வலியுறுத்தியபோதும்; எப்பொழுதுமே இவைகள் இலட்சியம், வாழ்வின் சரிவுகளிலிருந்து மனிதனை மீட்டெடுத்தல் பற்றியே பேசுகின்றன. இவை தவிர வேறுமாதிரியான விஷயங்கள், புத்தம் புதியதான கதைக்கருக்கள் இல்லையா என்ன..? இராஜினி இவை பற்றியும் கவனம் செலுத்துவது நல்லது.

'தமிழில் சிறுகதையின் சிகரத்தை அடைந்தவர் புதுமைப்பித்தன். அவர் லட்சிய வாதத்திற்கு முதுகைக் காட்டியபடி தலைகீழாக நிற்பவர்...' என்பார் மூத்த எழுத்தாளர் சுந்தரராமசாமி. இன்னும் சொல்வார், 'அவர்(புதுமைப்பித்தன்) ஒழுங்கில் அவநம்பிக்கையும் மீறல்களில் ஆவேசமும் கொண்ட கலைஞர்...' என்று.

புதுமைப்பித்தன் கையாண்ட சில கதைக்கருக்களை இராஜினியும் கையாளவேண்டுமென்பதல்ல எனது வாதம். நவீன மனிதனின் பலத்தையும் பலவீனத்தையும் புரிந்துகொண்டு - அமைப்பு ரீதியான அதிகார மையங்களால் அவன் பல்வேறு நெருக்குதல்களுக்கும் அழுத்தங்களுக்கும் உட்பட்டுக் கந்தல் சீலையாகிவிட்டான் என்பதை அறிந்துகொண்டு - தரிசன வீச்சுடன் அத்தகைய மனிதர்களில் ஓரிருவரையேனும் தனது கதைகளில் சிறைப்பிடிக்க இராஜினி

எத்தனித்திருக்கலாம். எனது இந்த ஆதங்கம் நியாயமானதாகவே எனக்குப்படுகிறது.

இத்தகைய மனிதர்கள் வரும் படைப்புகளை எதிர்காலத்தில் ஆசிரியர் தருவார் என்று நம்புகிறேன். அவரது படைப்பு நெறி அதைத்தான் உணர்த்தி நிற்கிறது.

கதைகளின் தரம் பற்றிக் கூறுவதாயின் - சுமை நல்ல கதை. அமைதிப்பூங்கா, நிலவும் சுடும், மெழுகுவர்த்திகள் என்பன சோடை போனவைஅல்ல. ஏனைய கதைகளும் படித்துப் பார்க்கக் கூடியன.

கதாசிரியனுக்கு - நிதானமாகக் கதை சொல்லும் பண்பும்; மொழி நடையின் துல்லியமும், கதை கூறிவரும்போது சம்பவங்களைக் கோர்வையாக வளர்த்து நகர்த்தும் பக்குவமும் இருக்கவேண்டும். அத்துடன் பொருத்தமான இடங்களில் கதாமாந்தரின் மன உணர்வுகளை வெளிக்கொணர உதவும் தன்னிலைக் கூற்றுக்களையும் அவன் பயன்படுத்தலாம். இந்தச் சீரிய ஆற்றல்களை இராஜினி கையகப்படுத்தி, நல்ல படைப்பாளியாக வருவேண்டுமென்பதே எனது விருப்பம்.

இவர் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார். உயர் வகுப்பு மாணவர்களை நெறிப்படுத்திப் பயிற்றுவிப்பதோடு நில்லாமல், பல்வேறு தேசிய கலை இலக்கியப் போட்டிகளிலும் - சிறுகதை, கவிதை, கட்டுரை, இலக்கிய விமர்சனம் - கலந்துகொண்டு பல சிறப்புகளைப் பெற்றுள்ளார். அவரது பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் முயற்சிகள் தொடர எனது வாழ்த்துக்கள்.

க. சட்டநாதன்,<br>
நல்லூர்,<br>
யாழ்ப்பாணம்.<br>
01-03-2013

# என்னுரை

சிறு வயது முதலே சிறுகதைகள் வாசிப்பதில் ஆர்வமுடைய எனக்குச் சுன்னாகம் நூலகத்தில் பெற்றுக்கொண்ட நூல்கள் ஆவலைத்தூண்டின. நாவல், சிறுகதைகளை வாசிக்கும்போது இரவிரவாக அதனை வாசித்து முடித்து விட்டே தூங்குவது வழக்கம். பரீட்சைக் காலங்களில்கூட எனது வாசிப்பு வழக்கத்தைக் கைவிடவில்லை. சிறுகதைகள், நாவல்களில் கிடைப்பதையெல்லாம் வாசிக்கும் ஆர்வம் இருந்தமையால் எனது மொழி வளத்திற்கும் அது உதவியாகவிருந்தது என நம்புகின்றேன். கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்றபோது வானொலியில் 'மாணவர் அரங்கு' நிகழ்ச்சியில் நாடகம் ஒன்றை எழுதி வானொலியில் ஒலிபரப்பக்கேட்டு மகிழ்ந்தது எனது எழுத்தாக்க முதன் முயற்சி.

ஆசிரியையாக தொழில் புரியத் தொடங்கியதன் பின்னர் நல்ல சிறுகதைகளைத் தேடி வாசிக்கும் ஆர்வத்தை வளர்த்துக்கொண்டேன். யா/கோப்பாய்க் கிறிஸ்தவ கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்ததன் பின்னர் எழுத்தாளர் திரு.க.சட்டநாதன் அவர்களும், எனது கணவர் திரு.சி.சிவலிங்கம் அவர்களும், திரு. மு. இராதாகிருஷ்ணன், திரு.இ.சகாதேவன் ஆசிரியர் ஆகியோர் நல்ல சிறுகதைகளைப் பற்றி உரையாடும்போது அதை ஆசிரியர்கள் தங்கும் அறையிலிருந்து செவி மடுத்திருக்கின்றேன்.

மல்லிகை, சுபமங்களா, நங்கூரம் போன்ற சஞ்சிகைகளை எனது கணவர் வீட்டிற்குக் கொண்டுவரும்போது நல்ல சிறுகதைகளை வாசித்ததோடு திரு.க.சட்டநாதன் அவர்களின் சிறுகதைகளை விருப்பத்தோடு வாசிப்பதுண்டு. எனது மாணவர்களுக்கும் வாசிக்கும்

ஆர்வத்தையும் ஊட்டி அவர்களையும் சிறுகதைகளை எழுதச் செய்ததுடன் தமிழ்த்தினப்போட்டிகளில் வலய, மாவட்ட, மாகாண தேசிய மட்டத்தில் பரிசு பெற வைத்துள்ளேன். 98, 99 காலப்பகுதியில் எனது ஆக்கங்கள் உதயன் பத்திரிகையில் வெளிவந்தன. அரச ஊழியர்களுக்கான ஆக்கத்திறன் போட்டியில் தேசிய மட்டத்தில் கிடைத்த வெற்றி, 'அகவிழி' நடாத்திய ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் கிடைத்த வெற்றி எனது எழுத்தார்வத்தை ஊக்குவித்தது.

எனது சிறுகதைகளில் நாம் அன்றாடம் தரிசிக்கும் மாந்தர்களின் வாழ்வியல் பிரச்சினைகளைக் கூறியிருக்கின்றேன். இவற்றில் பெரும் பாலானவை உதயன் பத்திரிகையில் வெளிவந்தவை. ஆசிரியையாகத் தொழில் புரிவதால் மாணவர்கள் தொடர்பான சிக்கல்களையும் தொட்டுக் காட்டியிருக்கின்றேன். சாதாரணமாக சமூகத்தில் காணப்படும் பிரச்சினைகள் கதையில் இடம்பெறுவது உண்மையில் நடைபெறும் நிகழ்வுகளாக வாசிப்பவர்களின் மனதைத் தொடும் என எண்ணுகின்றேன்.

எனது முதலாவது சிறுகதைத்தொகுதியான 'நிலவும் சுடும்' என்ற இப்படைப்பு எனது எழுத்து முயற்சிக்குத் தூண்டுதலாக அமையும் எனக் கருதுகின்றேன்.

சி. இராஜினிதேவி.

# சுவை

அன்று சனிக்கிழமை. பாடசாலை விடுமுறை. சனி, ஞாயிறு தினங்களிலே தான் வீட்டிலுள்ள வேலைகளைச் செய்யமுடியும். அதுகூட வீட்டிற்கு யாராவது விருந்தாளிகள் வந்தால் அல்லது ஆசிரியர் செயலமர்வு என்றால் அடுத்த சனி, ஞாயிறுவரை பிற்போடப்படும். இந்தச் சனி வீட்டு வேலைகளை முடித்துவிட்டு நானும் எனது கணவரும் முன் வராந்தாவில் போட்டிருந்த நாற்காலிகளில் அமர்ந்து பத்திரிகையில் மூழ்கி இருந்தோம். எங்களது வீட்டுவாசலில் ஒரு சிறுவன் சுமார் பதினான்கு வயதிருக்கும். சுமக்கமுடியாத ஒரு பையைச் சுமந்த வண்ணம்

"அம்மா செருப்பு வேணுமா?" என்றான். இந்தக் கொழுத்தும் வெயிலில் வந்த அவனைப் பார்த்தேன். ஒடிசலாய், சுள்ளி சுள்ளியாய் கால் கைகள்; ஒட்டி உலர்ந்த கன்னங்களையும் பார்த்தேன். பரிதாபமான அந்தக் கண்கள் என் மனதைக் குடைவதை உணர்ந்து "உள்ளுக்கு வாரும் தம்பி..." என்றேன்.

எனது குரலைக் கேட்டுக் கதிரையில் இருந்து பத்திரிகையைப் படித்தபடியே உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட என் கணவரும் எழும்பிவிட்டார். உள்ளே வந்த சிறுவனைப் பார்த்ததும் "தம்பி எங்கட வீட்டில சின்னப்பிள்ளைகள் இல்லை. செருப்பு வேண்டாம்; நீர் பக்கத்து வீட்டில கேளும்" எனது கணவர் சொல்வதற்குமுன் "ஐயா, அம்மாவுக்கும் அளவான செருப்பு இருக்கு ஒருக்காப் பாருங்கோவன்" சிறுவனின் கெஞ்சும் தொனி என் கணவரின் மனதையும் நெகிழச் செய்திருக்கவேண்டும்.

"சரி எடும் தம்பி பார்ப்பம்"... நான் சிறுவனுக்கு அருகில் வருகின்றேன். தன் பையில் வைத்திருந்த செருப்புகளை வெளியிலே எடுத்து வைத்த சிறுவன் "அம்மா இதைப் பாருங்கோ. இது வெளியில நல்ல நிகழ்ச்சிக்குப் போகப் போடலாம். இதைப் பாருங்கோ இது சாதாரணமாக எங்க போகேக்கையும்... போடலாம். வெறும் இருநூறு ரூபா தான்" "தம்பி இது சின்னனாய் இருக்கும்போல, எனக்கு ... 6ஆம் நம்பர் செருப்புத்தான் வேணும்". நான் கூறியதுதான் தாமதம்; என் கால்களில் செருப்பைக் கொழுவி எனது கால்களின் அளவைப் பார்த்த அந்த சிறுவனின் புத்திசாலித்தனத்தை நாம் இருவரும் ரசித்தோம்.

எனது கணவர் சிறுவனிடம் "தம்பி நீர் எந்த இடம்...? இந்தச் சின்ன வயதிலே வியாபாரம் செய்ய வந்திட்டீர், படிக்கிறனீரோ...?" என விசாரிப்பது காசு எடுப்பதற்காகச் சென்ற என் காதில் விழுந்தது. "ஐயா நாங்கள் இடம் பெயர்ந்து வந்தனாங்கள். எங்கட இடம் கிளிநொச்சி. நாங்கள் இடம்பெயர்ந்து வரேக்க செல் விழுந்து அப்பா செத்துப் போனார். அம்மாவுக்கும் ஒரு காலில்லை. எனக்கு ஒரு தம்பியும் தங்கச்சியும். நாங்கள் இப்ப அம்மம்மா வீட்டில இருக்கிறம். தம்பியும், தங்கச்சியும் படிக்கினம். என்னை ஒரு முதலாளியிட்ட எங்கட மாமா சேர்த்துவிட்டிருக்கிறார். அவர் செருப்புக்களை மொத்தமாக வாங்கி எங்களப்போல ஆட்களிட்ட கொடுத்து வீடு வீடாக விற்க விட்டிருக்கிறார்". சிறுவனின் கதையைக் கேட்டதும் நாங்கள் இருவரும் நெகிழ்ந்துவிட்டோம்.

திடீரென்று மனசு கனத்துத் துயருற்றது. கீறல்பட்டு இரத்தம் கசிந்தது. பெற்றோர்களை நச்சரித்து புது உடுப்பென்றும் சப்பாத்தென்றும் ஐஸ்கிறீம் என்றும் விரும்பியதெல்லாம் வாங்கி அனுபவிக்கவேண்டிய இச் சிறு வயதில் இப்படிப் பொறுப்பாக ... வீட்டில் என்ன தொல்லையோ ... இந்தச் சிறிய பையன் தலையில் குடும்ப பாரத்தைச் சுமக்கும் சுமையா? வயது முதிர்ந்த அம்மம்மா, ஊனமுற்றதாய், தம்பி, தங்கை இவனது கைகளையே நம்பி ...

மனதில் படர்ந்த பச்சாதாப உணர்வு மடை திறந்து கொண்டது. ஒரு சோடி செருப்புக்களை தெரிந்தெடுத்து அதற்கான பணத்தைக் கொடுப்பதற்கு எனது கணவரிடம் நான் காசைக் கொடுத்தபோது அவர் அந்தச் சிறுவனிடம் "தம்பி உனக்கு எவ்வளவு காசு ஒரு நாளுக்கு உனது முதலாளி தருவார்" எனக் கேட்டதும் சிறுவன் "ஒவ்வொரு

நாளும் பத்துச்சோடி செருப்பு விற்கவேணும் ஐயா; எனக்கு இருநூறு ரூபா முதலாளி தருவார்" என்று கூறினான். எனது கணவர் நான் எடுத்த செருப்பை விட மேலும் ஒரு சோடி செருப்பை எடுத்ததுடன் பையனின் கையில் மேலதிகமாக நூறு ரூபாத் தாளையும் கொடுத்து. "இதை நீ வைத்துக்கொள்" என்றார்.

"நன்றி ஐயா. என்னிடம் இரண்டு சோடி செருப்பு எடுத்ததே போதும். நூறு ரூபாவை நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்."

அவனது செயல் இது பிச்சையல்ல; தொழில் எனச் சொல்லாமல் சொல்லியது. செருப்புக்களைத் தனது பையில் அடுக்கிய சிறுவன் வெளிறிய துணித் தொப்பியைத் தலையிலும் நைந்துபோன செருப்பைக் கால்களிலும் அணிந்துகொண்டு சுமக்க முடியாத அந்தப் பையைச் சுமந்து கொண்டு வெளியேறினான்.

அக்கினியாய்க் கொதிக்கும் ஐந்து வயிற்றுக்கு அரையும் குறையுமாய் எதாவது கிடைக்கவேணும். அத்துடன் சகோதரங்களின் படிப்பு வேறு... அவனால் இழுத்துப் பறிக்கமுடியுமா? முடியும் என்ற தோரணை அவனில் தெரிந்தது.

அடுத்த சனிக்கிழமை மாலை சுமார் 5 மணியிருக்கும். அதே சிறுவன் கையில் சிறு கூடை, அதற்குள் வடை, கடலைச்சுருள்கள், மிக்சர்பைக்கட் என்பவற்றுடன் எங்களது கேற் வாசலில் "அம்மா வடை மிக்சர் எடுக்கிறீங்களா?" "வாரும் தம்பி. என்ன தொழிலை மாத்திப் போட்டீரோ?" வாஞ்சையுடன் சிறுவனை வரவேற்கின்றேன். சிறு புன்னகையுடன், "இல்லை அம்மா 5 மணி வரையும் செருப்பு விற்கிறனான். அதற்குப்பிறகு வீட்டில் இருக்கிற எல்லோரும் சேர்ந்து செய்த சாப்பாட்டுச் சாமான்களை விற்கிறனான் அம்மா."

சிறுவனின் பதிலில் எனக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் மனதிலே பொங்கியது. எவ்வளவு புத்திசாலித்தனமும் பொறுப்புணர்ச்சியும் உள்ள இவனது எதிர்காலம் மிகப் பிரகாசமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மனதில் பொங்கிய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு "5 வடைகளும், மிக்சர் பைக்கட்டும், 5 கடலைச்சுருளும் தா தம்பி" கண்களில் ஒளி பளிச்சிட, "அம்மா உங்களுக்கு 5 பிள்ளைகளா?" அவனை நோக்கி முறுவலித்த நான் எனக்குப் பிள்ளைகள் இல்லை. உனக்காகத்தான் இதனை வாங்குகின்றேன் என்று கூற முடியுமா? "ஆம்

எனக்கு 5 பிள்ளைகள்" என்று கூறி அவனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்தனுப்புகின்றேன். அந்தச் சிறுவன் எங்கள் பக்கத்து வீட்டில் வடை, மிக்சர் வேணுமா எனக் கேட்பது என் காதில் விழுந்தது. சுமார் ஆறரை மணியிருக்கும் எங்கள் பக்கத்துவீட்டுப் பரிமளம் எங்கள் வேலிக்கு அருகே வந்து "ரீச்சர் அந்தக் கச்சான் விக்கிற பெடியன் சரியான கள்ளன்போல இருக்கு. நீங்கள் கொஞ்சம் கவனமா இருங்கோ. உங்கள் வீட்டை அடிக்கடி வாறதால்தான் சொல்லுறன் ரீச்சர்." "ஏன் அவன் பாவம். கஷ்டப்பட்ட பையன் என்ன பிழை செய்தவன் பரிமளா?" எனப் பதற்றமாக வினவுகின்றேன். "50 ரூபா கொடுத்து 30 ரூபாவுக்குக் கச்சான் வாங்கின பிள்ளைகளுக்கு மிகுதிக் காசு 20 ரூபாவைத் தரல்ல பாருங்கோ ரீச்சர்; எவ்வளவு கள்ளக்குணம். இப்படியான ஆக்களை வீட்டுக்கு வர விடக்கூடாது." மனதில் ஏதோ தோன்ற பொறிதட்டிய உணர்வு. "பரிமளா உங்களுடைய பிள்ளையள் மிக்சர் வாங்கும்போது வேறு ஆட்களும் அந்தப் பெடியனிடம் மிக்சர், வடை வாங்கினார்களா?" பதற்றத்துடன் கேட்டேன். "ஓம் ரீச்சர் எங்கட மச்சாளின்ர பிள்ளைகள். பாமாவின்ர பிள்ளைகள் எல்லாரும் வாங்கினவை. ஏன் கேக்கிறியள்...?"

"சும்மாதான் கேட்டனான் எங்கட வீட்டில காசைக் கவனமாகக் கணக்குப் பார்த்துத்தான் தந்தான். அந்தப் பையன் நல்ல பிள்ளை. சரியான கஷ்டம்" பரிமளாவுடன் பேச மனமில்லாது வீட்டிற்கு வருகின்றேன். வீட்டில் என் கணவரிடம் நடந்த சம்பத்தைக் கூறுகின்றேன்.

"உந்தப் பிள்ளைகள் எல்லாம் சேர்ந்து அந்தச் சின்னப்பையனிடம் கச்சான் வாங்கியிருக்கும். கணக்கில் ஏதோ பிழை நடந்திருக்கும். பாவம் அந்தச் சின்னப் பையன். எவ்வளவு நேர்மையான பையன் என்பது எங்களுக்குத் தெரியும்" அவரது குரலிலும் அந்தச் சிறுவனுக்காகப் பச்சாதாபப்படும் உணர்வு.

எனக்கு நெஞ்சில் ஊசியால் குத்துவது போன்ற உணர்வு. பரிமளா அந்த ஏழைச்சிறுவனைக் கள்ளன் என்று கூறிய வார்த்தைகள் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. தன் குடும்பச் சுமையைச் சுமக்கும் அந்தச்சிறுவன்... நாங்கள் கொடுத்த பணத்தைக் கைநீட்டி வாங்கமறுத்த நேர்மை... அவனா இந்த அற்ப பணத்திற்கு ஆசைப்பட்டிருப்பான். நம்ப மறுத்த மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

சுமார் ஆறு மணியிருக்கும் பரிமளாவின் வீட்டு வாசலில் "அம்மா..." என்ற குரல் நிசப்தமான அந்த நேரத்தில். என் காதுகளை நம்பமுடியவில்லை. அந்த சிறுவனாக இருப்பானோ என் கணவரிடம் ஒன்றும் கூறாது பதற்றத்துடன் எங்கள் வாசலுக்கு விரைகின்றேன். எங்கள் வீட்டிற்கு மிக அண்மையில் பரிமளா வீடு இருப்பதால் அவர்களது வீட்டில் மெதுவாகக் கதைப்பதுகூடக்கேட்கும். நான் எங்கள் கேற்றைத் திறந்து வெளியே வரவும் பரிமளாவும் வாசலுக்கு வருவது தெரிகின்றது.

என்ன ஆச்சரியம்! அந்தச் சிறுவன் மிகவும் களைப்படைந்த நிலையில், மயங்கிவிழும் நிலையில், அங்கே நின்று கொண்டிருந்தான். பரிமளாவைக் கண்டதும் "அம்மா உங்கள் பிள்ளைகள் கடலைச்சுருள் வாங்கிப் போட்டு 50 ரூபா தந்தவை 30ரூபாவுக்கு வாங்கினவை; மிகுதி 20ரூபா நான் குடுக்கவேண்டும். அதற்கிடையில் மற்றச் சின்னப் பிள்ளைகளும் கச்சான், மிக்சர் வாங்கினதாலை கணக்குப் பிழைச்சுப்போச்சு. இப்ப காசு 20ரூபா கூட இருக்கு. உங்களின்ர பிள்ளையளுக்குத்தான் மிச்சக்காசு குடுக்காத நினைவு வந்தது. அதுதான் வந்தனான். இந்தாங்கோ 20ரூபா... கொஞ்சம் தண்ணியும் தாறீங்களே அம்மா தலை சுத்துது." காசைக் கை நீட்டி வாங்கிய பரிமளாவின் முகம் என்னைப் பார்த்ததும் பேயறைந்ததுபோல் மாறிவிட்டது.

சுயபச்சாதாபத்தில் பரிமளா வருந்துவது எனக்குப் புரிந்தது. "தம்பி நில்லுங்கோ ஓடி வாறன்..." பரபரப்பாக உள்ளே சென்ற பரிமளா கையில் தண்ணீருடன் ஓடிவந்து சிறுவனிடம் தண்ணீரைக் கொடுப்பதையும்; சிறுவன் என்னைப் பார்த்து முறுவலித்துவிட்டு "போட்டுவாறன் அம்மா. வீட்டில் என்னை எல்லோரும் பார்த்துக் கொண்டிருப்பினம். அம்மா சாப்பிடாமல் பார்த்துக்கொண்டிருப்பா..." வேகமாகத் தேய்ந்த அந்தச் செருப்புகளுடனும், அந்த வெளிறிய தொப்பியுடனும் செல்லும் அந்த இளம் குருத்தைப் பார்த்தவண்ணம் நெஞ்சம் கனக்க மனம் நெகிழ்ந்து பார்த்த வண்ணம் நான் எனது வாசலிலும், பரிமளா தன் வீட்டு வாசலிலும் நிற்கின்றோம். எனது மனதில் அந்தச் சிறுவன்மீது பரிதாபம் தோன்றினாலும் அவனைப் பற்றிப் பரிமளா கொண்ட சந்தேகம் நீங்கியது நிம்மதியாக இருந்தது. அந்தச் சிறுவன் எங்கள் இருவரின் நெஞ்சிலும் இமயமாக உயர்ந்தது மட்டும் உண்மை என்பதைப் புரிந்துகொண்டு எனது கணவரிடம் விடயத்தைக் கூற விரைகின்றேன் மனம் இலேசாகிவிட்ட உணர்வுடன்.

●

# அமைதிப் பூங்கா

**வா**னளாவிய கட்டடங்களுடன் அமைதியின் உறைவிடமாக இருக்கும் அமைதிப் பூங்கா என்ற பெயர் தாங்கிய அந்த முதியோர் விடுதி அன்று கலகலப்புடன் காணப்பட்டது. அங்கு தங்கியிருக்கும் முதியவர்கள் அனைவரின் முகங்களிலும் மகிழ்ச்சி கலந்த ஒரு எதிர்பார்ப்பு. ஆம் இன்று தம்மையெல்லாம் வாழவைக்கும் அந்த முகம் தெரியாத உருவத்தைத் தரிசிக்கப்போகும் ஆர்வம். இனம் புரியாத உணர்வலைகளில் சிக்குண்டிருக்கும் அந்த நெஞ்சங்கள் யாரை எதிர்பார்த்துத் துடிக்கின்றன.

அமைதிப் பூங்கா நிர்வாகத்தினர் அங்கு தங்கியிருக்கும் முதியோர் களுக்குப் பதிலளித்தே களைத்துவிட்டனர். "இப்போது நேரம் என்ன...?", "எத்தனை மணிக்கு ஐயா குடும்பத்தினர் வருவார்கள்?" என்று ஓயாது நச்சரித்த அந்த முதியவர்களின் ஆர்வத்துக்கு அணைபோட முடியவில்லை.

அவர்களையெல்லாம் தங்க வைத்துப் பராமரிக்கும் அந்தப் புனிதப் பூங்காவை - முதியோர் இல்லத்தை அமைத்து அதற்கான நிதியுதவியை வழங்கி, உறவுகளால் கைவிடப்பட்ட அந்த முதியோரைப் பராமரிக்கும் அந்த இல்லத்தின் நிர்வாகி இன்று அவர்களைப் பார்ப்பதற்கு அந்த இல்லத்துக்கு வருகை தர இருப்பதுதான் அவர்கள் மகிழ்ச்சிக்குக் காரணம்.

'அமைதிப் பூங்கா' என்ற பெயரில் காட்சிதரும் அந்த முதியோர் இல்லத்தை அமைப்பதற்கு நிதி உதவி வழங்கித் தொடர்ந்து அதனை நிர்வாகம் செய்வதற்கு உதவி வழங்கும் மோகனசுந்தரம் கனடாவில்

தனது குடும்பத்தவர்களுடன் வசித்து வருபவர். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகக் கனடாவில் வசித்துவரும் அவர் யாழ். மண்ணில் அடிக்கடி ஏற்படும் மோதல்களின்போது அகதிகளாகி ஆதரவு அற்றவர்களாகி அவதியுறும் மக்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்யவேண்டுமென்ற ஆர்வத்தில் தம்போன்ற தயாள குணமுடைய பலரிடமிருந்தும் உதவிகளைப் பெற்றுப் பிறந்த மண்ணில் அல்லற்படும் மக்களுக்குப் பணமாகவும் பொருளாகவும் அனுப்பிவைப்பார்.

யாழ்ப்பாணத்தில் விவசாயத்தைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்த மோகனசுந்தரத்துடன் தம்பி, தங்கையென உடன் பிறந்தோர் நால்வரையும் பராமரிப்பதற்குத் தந்தை பட்ட பாடுகள் மூத்த மகனாக இருந்த மோகனசுந்தரத்துக்குத்தான் தெரியும்.

பற்றாக்குறையும் வறுமையுமாகப் போராடிய தனது குடும்ப நிலையைச் சிந்தித்து "அப்பா நான் படிச்சது போதும். நானும் உங்களோடை தோட்டவேலை செய்தால் தம்பியவைக்குப் படிக்கிறதுக்கும் உதவியாக இருக்கும்" மகனின் வேண்டுகோளை ஏற்பதைத் தவிர தந்தைக்கு வேறு வழி தெரியவில்லை.

இரண்டு தங்கைகளைக் கரையேற்றவேண்டிய பொறுப்பு, தம்பிமார்களின் படிப்பு, நோயாளியாகிவிட்ட தந்தை என எல்லாமே மோகனசுந்தரத்தை நிலைகுலைய வைத்தன.

இந்தநிலையில் ஊரிலே இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கானமுயற்சிகளில்ஈடுபட்டபோதுதானும்வெளிநாட்டுக்குச் செல்வதன்மூலமே குடும்பத்தை ஓரளவுக்கேனும் உயர்த்த முடியும் என்று எண்ணினார். தாயிடம் "அம்மா நான் எப்படியும் வெளிநாட்டுக்குப் போய் உழைக்கவேணும். அப்படியெண்டால்தான் எங்களின்ர குடும்பத்தைக் கொஞ்சமெண்டாலும் நிமிர்த்தலாம்..." மகனின் ஆவலைப் பூர்த்தி செய்ய இரவுபகலாக யோசித்தாள் கண்மணி.

அவள் சகோதரர்களை ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள். எல்லோருமே வசதி படைத்தவர்கள். குறிப்பாக அவள் அண்ணன் பரமசிவம் ஊரிலேயுள்ள பெரும் பணக்காரர்களில் ஒருவர். அவரிடம் பணஉதவி கேட்க எண்ணியவளின் மனதில் அவர் அவளை அவமானப்படுத்திய சம்பவம் நினைவுக்கு வந்தது.

டாக்டரான தன் மகனுக்கு டாக்டரான மருமகள் கிடைத்த மகிழ்ச்சியில் ஊரே வியக்கும் வண்ணம் திருமணத்தை நடத்தினார் பரமசிவம். அன்புடன் தங்கையையும் பிள்ளைகளையும் அழைத்துச் சென்றவர் வீட்டிலே திருமண வேலைகளுக்கு எடுபிடி ஆள்களாக அவர்களைப் பயன்படுத்தினார். அவர்கள் யார் என்று கேட்டவர்களுக்கு "அவையெல்லாம் எங்களின்ர வீட்டில வேலை செய்யிற ஆக்கள். கொஞ்சம் கஷ்டப்பட்டதுகள். அதுதான் உதவி செய்ய எண்டு கூப்பிட்டிருக்கிறம்".

தனது அண்ணனின் அவமதிப்பைத் தாங்கமுடியாது தன் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வீட்டுக்கு வந்த கண்மணி அதன்பின் பரமசிவம் வீட்டின் படலையைக்கூட மிதிக்கவில்லை.

கணவரின் நோய், வறுமை, மகனை எப்படியும் வெளிநாட்டுக்கு அனுப்பவேண்டும் என்ற ஆவல் எல்லாம் சேர்ந்து கண்மணியை பரமசிவத்தின் வீட்டுக்குச்செல்ல வைத்துவிட்டன. மனதை ஓரளவு திடப்படுத்திக் கொண்டு தனது தோட்டக் காணி, வீட்டுக்காணி அவற்றின் உறுதிகளையும் கையில் எடுத்துக்கொண்டு அண்ணன் வீட்டை நோக்கி ஒரு வைராக்கியத்துடன் சென்றாள் கண்மணி.

வீட்டின் முன் வராந்தாவில் இருந்த பூமலர், கண்மணியைக் கண்டதும் ஒரு கணம் திகைத்துவிட்டவள், அடுத்த கணம் தன்னைச் சுதாரித்துக்கொண்டு ஒரு அலட்சியத்துடன் கதிரையை விட்டு எழும்பாது "அம்மா யாரோ உங்களைத் தேடி வந்திருக்கினம்". என்று உரத்த குரலில் கத்தினாள்.

சேலைத் தலைப்பில் கைகளைத் துடைத்துக்கொண்டு வெளியே வந்த மரகதம் கண்மணியைக் கண்டதும் முகத்தைத் திருப்பியவளாக "வாறன் அவரை வரச் சொல்லிறன்..." என்று கூறிவிட்டு விடு விடு என்று உள்ளே சென்றுவிட்டாள்.

ஏழைகளைக் கண்டால் அவளுக்குப் பிடிப்பதில்லை. கண்மணியையும் பிள்ளைகளையும் கண்டால் முகத்தைத் தூக்கி வைத்துக்கொள்வாள். கண்மணியின் ஏழ்மை அவள் ஏதாவது தங்களிடம் கேட்டுவிடுவாளோ என்ற அச்சம்தான் அதற்குக் காரணம்.

கண்மணி, பரமசிவத்தின் வாசலில் கால்கடுக்க நின்றவள், வாசலில் நின்ற மாமரத்தின் அடியில் இருந்துவிட்டாள். வீட்டின் உட்புறத்தில் நின்று தனது வேலையாள்களுக்குக் கூறவேண்டிய

விடயங்களையெல்லாம் தனது காரியதரிசியிடம் கூறிவிட்டு வெளியே வந்த பரமசிவம் மாமரத்தின் அடியில் இருந்த கண்மணியைக் கண்டுவிட்டார்.

ஒரு கணம் தன் அண்ணனின் முகம் ஓடிக் கறுத்துவிட்டதைக் கண்டுகொண்டாள். அவர் அவளை அங்கு எதிர்பார்க்கவில்லை. அவரது மனைவியும் அவள் வந்திருக்கும் செய்தியைக் கணவரிடம் கூறவில்லை என்பதைப் புரிந்துகொண்டவள் எப்படியோ காரியமானால் சரி என்று எண்ணியவளாக விடு விடு என்று பரமசிவத்துக்கு அருகில் நெருங்கிச் சென்றாள்.

என்ன விஷயம் என்பதுபோல் அவளை ஏறிட்டு நோக்கினார் பரமசிவம். "அண்ணை இவருக்கும் சுகமில்லை. குடும்பம் நடத்தச் சரியான கஷ்ட மாயிருக்கு. அதுதான் தம்பியையும் வெளிநாட்டுக்கு அனுப்பினாற்தான் எங்களின்ர குடும்பம் கொஞ்சமெண்டாலும் முன்னுக்குவரும். அதுதான் எங்களின்ர வீட்டுக் காணியையும், தோட்டக் காணியையும் ஈடாக வைச்சுக்கொண்டு எங்களுக்கு இரண்டு லட்சமாவது தாருங்கோ. ஒரு வருசத்துக்கிடையில நாங்கள் மீண்டிடுவம். எப்படியும் இந்த உதவியைச்செய்யுங்கோ" காலில் விழாத குறையாகக் கெஞ்சினாள் கண்மணி. "உனக்கென்ன பைத்தியமே? என்னட்டை வந்து திடீரென்று இரண்டு லட்சம் கேட்டால் நான் எங்கை போறது...?

இரண்டு கல்யாணத்திலும் எக்கச்சக்கமாக காசு போட்டுது. அப்படியென்றால் உன்ரை மகனை என்னோடை வேலைக்கு விடு. அவன் உழைச்சால் கஞ்சி எண்டாலும் ஊத்துவான்தானே. உன்ரை புருஷனுக்கு ஏலாதெண்டால் இப்ப நல்ல முதியோர் விடுதியெல்லாம் கட்டியிருக் கிறாங்கள். அதிலை கொண்டுபோய் அந்தாளை விடுங்கோ." ஏதோ பெரிய அறிவுரை சொன்ன திருப்தியோடு நிமிர்ந்தவர் தன் தங்கை கேற்றைத் தாண்டி விரைவதைக் கண்டு "திமிரைப் பாரன். இவ்வளவு கெட்டலைஞ்சும் புத்தி வரேலை" என்று தனக்குள் கூறிக்கொண்டார்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு கண்மணி பரமசிவத்தைக் கண்ணால் கூடக் காணவில்லை. "உன் புருஷனை முதியோர் விடுதிக்கு அனுப்பு", "உன்ரை மகனை வேலைக்கு விடு" அவர் கூறிய இந்த இரு வார்த்தைகளும் அவள் காதுகளில் நாராசமாக ஒலித்துக்கொண்டேயிருந்தன.

கண்மணியின் விடாமுயற்சி, அவளது நண்பி கமலம் குடும்பத்தினரின் உதவி எல்லாம் சேர்ந்து மோகனசுந்தரத்தை வெளிநாடு செல்லவைத்தது.

தன் குடும்பத்தின் வறுமையைப் போக்கும் தீவிரத்துடன் நீண்டகாலம் கடினமாக உழைத்தான் மோகனசுந்தரம். ஈட்டிலிருந்த காணியை மீட்டான். வீட்டைத் திருத்தினான். தன் தங்கைகள் இருவருக்கும் நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்தான்.

தந்தையின் இழப்பு, தாயின் வேண்டுகோள், ஏன் கண்மணியின் நீண்ட நாள் ஆசை என்று கூடக் கூறலாம். காணி ஒன்று வாங்கப்பட்டு அமைதிப் பூங்கா என்ற பெயரில் ஒரு முதியோர் இல்லம் அமைக்கப்பட்டது. ஆறு மாதங்களாவது தம்முடன் வந்து தங்குமாறு பிள்ளைகளின் நச்சரிப்பைத் தாங்கமுடியாது கண்மணி கனடா பயணமானாள்.

ஆறு மாதம் முடிந்ததும் பிள்ளைகள் தம்முடன் தாயைத் தங்கவைப்பதற்குக் கையாண்ட முயற்சி பயனளிக்காததால் மோகனசுந்தரமும் தன் மனைவி, பிள்ளைகளுடனும் தாயையும் அழைத்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டுவிட்டார். தான் பிறந்த மண்ணையும் உறவுகளையும் பார்க்கவேண்டும் என்ற ஆவல் ஒரு புறம். தன்னால் உருவாக்கப்பட்ட அமைதிப் பூங்காவான முதியோர் இல்லத்தைப் பார்க்கவேண்டும் என்ற தணியாத தாகம் மறுபுறம் அவரிடத்தில் இருந்தது.

வாழ்க்கையில் வறுமையும் செல்வமும் சுழலும் சக்கரம். கண்மணி கனடாவுக்குச் சென்ற மூன்றாவது மாதம் பரமசிவத்தின் மகள் பூமலரின் கணவர் மாரடைப்பால் காலமானார். பூமலரின் பிள்ளைகளின் நாகரிக மோகம், மகனை லண்டனுக்கு படிக்க வைக்க பரமசிவம் கொடுத்த பணம் எல்லாம் முகம் தெரியாத ஒருவரிடம் போய்ச்சேர்ந்தன. மனைவியின் இழப்பு, பிள்ளைகளால் அநாதரவாக விடப்பட்ட நிலை பரமசிவத்தை நிலைகுலையச் செய்தது. மகள் பூமலர் தந்தையை அமைதிப் பூங்கா என்ற முதியோர் விடுதியில் விட்டுவிட்டுத் தனது பிள்ளைகளுடன் கொழும்புக்குச் சென்றுவிட்டாள்.

பரமசிவமும் அமைதிப் பூங்காவுக்கு வந்து ஆறுமாதங்களுக்கு மேலாகிவிட்டது. இப்போது அவரது மனம் தெளிவாக இருந்தது. பிள்ளைகளை, பேரப்பிள்ளைகளை அவர் மறந்தேவிட்டார். அவருக்கு

இருக்கும் ஒரேயொரு ஆசை அமைதிப் பூங்காவை ஆக்கியளித்த அந்த மானிட தெய்வத்தைக் கண்ணை மூடுவதற்கு முன் ஒரு தடவையேனும் பார்த்துவிட வேண்டும் என்பதே.

அமைதிப் பூங்காவுக்கு வருகை தந்த மோகனசுந்தரத்தின் குடும்பத்தினரைப் பார்த்த அனைவரும் வியந்து நின்றனர். நெடிதுயர்ந்த தோற்றம். கண்களில் கண்ணாடி, காதோரங்களில் இளநரை ஒளிரக் கம்பீரமாகக் காட்சியளித்த மோகனசுந்தரம் சாதாரண வெள்ளை வேட்டியும் வெள்ளை சேட்டும் அணிந்திருந்தார். வெளிநாட்டிலிருந்து வருவோரிடம் சாதாரணமாகக் காணப்படும் பந்தா சிறிதுமில்லாமல் மிக எளிமையாகக் காட்சியளித்தார். அமைதிப் பூங்கா நிர்வாகிகளுடன் அன்பாகவும் அன்னியோன்யமாகவும் உரையாடினார்.

அவர் மனைவியும் ஆடம்பரமில்லாத சாதாரண உடையுடனும் அமைதியான பெண்ணாகவும் காணப்பட்டாள். இரு பிள்ளைகளும் கலகலப்பாகத் தூய தமிழில் பேசியது எல்லோரையும் கவர்ந்தது. முதியோர்கள் தங்க வைக்கப்பட்ட மண்டபத்துக்குச் செல்வதற்கு முன்னர் நிலைய நிர்வாகி மோகனசுந்தரத்திடம் அங்கு தங்கியிருப்போர் பற்றிக் கூறினார்.

அவர்களை நேரிலே பார்க்கவென ஒவ்வொருவர் அருகிலேயும் மோகனசுந்தரம் சென்று நின்று அவதானித்தார். சுகம் விசாரித்தார். எல்லோரின் பார்வையிலும் ஆவல், அன்பு. அந்தப் படுக்கையிலே இருந்த அந்த முதியவரும் தன்னைப் பார்ப்பதற்கு மோகனசுந்தரம் வந்திருக்கிறார் என்பதைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் எழுந்தவர் தடுமாறி மோகனசுந்தரத்தின் காலில் விழுந்துவிட்டார். "ஐயா உங்களை ஒரு தடவையேனும் பார்த்துவிட வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்தனான். நீங்கள் மனித தெய்வம் ஐயா..." என்றபோது அவரை வாஞ்சையோடு வாரித்தூக்கிய மோகனசுந்தரம் அவர் முகத்தை உற்றுநோக்கினார்.

ஒரு கணம் அவர் கண்களை அவரால் நம்பமுடியவில்லை. "நீங்கள் பரமசிவம் மாமாதானே. ஐயோ என்ன மாமா... நீங்கள் இப்படி...சொல்லுங்கோ...என்ன நடந்தது..." அவரின் வார்த்தைகள் தடுமாறின. தான் காண்பது கனவா. ஒரு கணம் உலகமே சுற்றியது மோகனசுந்தரத்துக்கு.

பரமசிவத்தின் நிலை மிகவும் தர்மசங்கடமானதாயிருந்தது. தன்னை "மாமா" என்று பாசத்துடன் அழைத்த உருவத்தைக் கண்கொட்டாது வியப்புடன் பார்த்தார். "மாமா நான்தான் உங்கள் மருமகன் மோகனசுந்தரம். உங்களுடைய தங்கச்சி கண்மணியின் மகன். என்னைத் தெரியேல்லையோ மாமா? வடிவாய்ப் பாருங்கோ..." தன் மாமனாரின் கரங்கள் இரண்டையும் இறுகப் பற்றிய வண்ணம் கண்ணீர் மல்கக் கூறினார் மோகனசுந்தரம்.

செய்தியை அறிந்து அவர் இருக்கும் இடத்துக்கு விரைந்துவந்த கண்மணி "அண்ணா" என்று அலறிக் கொண்டு பரமசிவத்தின் கைகளைப் பற்றி ஓவென அழத் தொடங்கிவிட்டாள். அவளை அன்புடன் அணைத்துக்கொண்டவர். "கண்மணி... என்னை மன்னிச்சிடம்மா. பணத் திமிரில உன்னையும் பிள்ளைகளையும் அவமானப்படுத்திப் போட்டன். உன்ரை கணவரை முதியோர் விடுதிக்கு அனுப்பு எண்டன். இண்டைக்கு நானே முதியோர் விடுதிக்கு வந்திட்டன்" எனத் தழதழத்த குரலில் கூறியவரை அன்புடன் தழுவிக்கொண்டார் மோனசுந்தரம்.

ஏற்கனவே பலவீனப்பட்ட இதயம் திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியால் மேலும் பாதிக்கப்பட்டிருக்கவேண்டும். மோகனசுந்தரத்தின் கரங்களை இறுகப்பற்றியவர் "தம்பி... நீதான்... எனக்கு... கொள்ளி..." மேலே பேச முடியாது தடுமாறிய அவர் தலை சாய்ந்தது. அண்ணா என்றலறிய கண்மணியின் கதறலும், மாமா என்றலறிய மோகனசுந்தரத்தின் அலறலும் அமைதிப் பூங்காச் சுவர்களில் மோதி எதிரொலித்தன. ●

# நிலவும் சுடும்

கண்ணுக்கெட்டிய தூரம்வரை பரந்திருக்கும் நீலக்கடல். மாலை நேரம்; சூரியன் மேற்குத் திசையில் மறையும் நேரம். கடலின் கரையிலே பரந்திருக்கும் வெண்மணலில் கால்கள் இரண்டையும் மடக்கி, முகத்தை அதில் பதித்த வண்ணம் அமைதியாக இருந்த கடலை வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்தாள் பிலோமினா.

எத்தனையோ மக்களை வாழவைக்கும் கடலன்னை எவ்வளவு அமைதியாக இருக்கின்றாள். தன் அலைக்கரங்களால் தன் பிள்ளைகளை அன்புடன் அரவணைப்பவளா அன்று சீற்றம்கொண்டு அத்தனை உயிர்களையும் காவுகொண்டாள். நம்பமுடியவில்லை. ஆனாலும் நம்பித்தானே ஆகவேண்டும். கண்முன்னே சுனாமிப் பேரலை புரட்டி எடுத்ததனால் இருந்தஇடமே தெரியாமல் உருக்குலைந்துபோன குடிசைகளும்; சேதமடைந்தும், மீண்டும் புனரமைக்கப்படாத மாதாகோவிலும் நடந்துமுடிந்த அவலத்தைப் பறைசாற்றி நிற்கின்றன.

அமைதியை நாடிக் கடற்கரைக்கு வந்தவளின் மனம் கடல் அலைகளைப்போல் கொந்தளித்தது. அன்று காலையில் நடந்த சம்பவம் மனதில் ஒரு கணம் நிழலாடியது.

மரியதாஸ் சம்மாட்டியாரின் வாடியிலே அவரது மகன் பீற்றர் அவளிடம் கூறிய வார்த்தைகள் மீண்டும், மீண்டும் நினைவுக்கு வந்து அவள் மனதை அலைக்கழித்தது.

“பிலோமினா உன்னோடை தங்கச்சி யூலியட் லீவுக்கு வந்திருக்கிறா போல. உன்னைப்போலவே உன்ரை தங்கச்சியும் நல்ல அழகாத்தான்

இருக்கிறா. நீதான் அந்தநேரம் என்னை மறுத்திட்டாய். இப்பவாவது யூலியட்டை எனக்குக் கட்டி வைச்சா உங்க இரண்டு பேரையும் நான் நல்லா வைச்சிருப்பன். இப்படி இஞ்சை வந்து கஷ்டப்பட்டு, மீனுக்கு உப்புப் போட்டு காயவைக்கிற வேலைக்கு வரவும் தேவையில்லை..." அவன் சொல்லி வாய் மூடுவதற்கு முன் அவனை முறைத்துப் பார்த்தாள் பிலோமினா.

அவளை அலட்சியப்படுத்திய பீற்றர் "பிலோமினா இண்டைக்கு இரவு வீட்டிற்கு வருவன். நல்ல முடிவாய்ச் சொல்லு..." கூறிவிட்டு விரைவாக வாடியை விட்டு வெளியேறிய பீற்றரின் முதுகை வெறித்துக் பார்த்தவாறு செயலற்று நின்றாள் பிலோமினா.

பீற்றர் ஒன்றை நினைத்தால் அதனை அடையும் வரை ஓயமாட்டான். எந்தக் குறுக்கு வழியையும் கையாளுவதற்குப் பின்னிற்கமாட்டான் என்பதை நன்கு அறிந்து கொண்டவள் பிலோமினா.

அவளது வாழ்க்கையில் புயல் வீசுவதற்கும் காரணமாக இருந்தவன் பீற்றரே. அவளது கணவன் விக்ரரும், பீற்றரும் நல்ல நண்பர்கள். அந்தக் கிராமத்தின் அழகிய தேவதையாக வலம் வந்த பிலோமினா மீது அங்குள்ள இளைஞர்களுக்கு ஒரு கண். அதிலும் குறிப்பாகப் பீற்றர் எப்படியும் அவளைத் தனக்குரியவளாக்கிக் கொள்ளவேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தான்.

பிலோமினாவின் தந்தையும், மரியதாஸ் சம்மாட்டியாரும் நல்ல நண்பர்கள். இருவரும் அந்தக் கிராமத்தில் வசதியாக வாழ்ந்ததுடன் ஊர் மக்களின் மதிப்பையும் பெற்றுக் கொண்டவர்கள். தன் மகன் பீற்றர் தன் நண்பரின் மகளை விரும்புகின்றான் என்பதைத் தெரிந்தும் அவனது குண இயல்புகளை நன்கு தெரிந்தவராதலால் பிலோமினாவிடம் "பிலோமினா என்ர மகன் பீற்றர் உன்னை விரும்புறான் போல இருக்கு. ஆனா அவன்ர குணம்தான் உனக்குத் தெரியுமே, நீ என்னம்மா சொல்லுறாய். உன்ரை விருப்பத்தைச் சொன்னா நான் உன்ரை அப்பாற்ரக் கேட்கலாம்..." அன்புடன் கூறினார் சம்மாட்டியார்.

"அங்கிள்! எனக்குப் பீற்றரைப் பிடிக்கேல்ல அவரின்ட நண்பர் விக்ரரைத் தான் பிடிச்சிருக்கு நீங்கள் தான் அப்பாட்டைச் சொல்லி எங்களைச் சேர்த்து வைக்கவேணும்..."

தன்னிடம் மனந்திறந்து பேசிய பிலோமினாவிடம் "பிலோமினா உன்ர அப்பாவோட கதைச்சு உங்கன்ர கலியாணத்தை நானே நடத்தி வைப்பன் அம்மா..." கூறியவர் உடனே காரியத்தில் இறங்கிவிட்டார்.

தன் எண்ணம் நிறைவேறாததோடு தன் நண்பனையே தான் உயிரிலும் மேலாக விரும்பிய பிலோமினாவிற்குத் திருமணம் செய்து கொடுப்பதற்குத் தன் தந்தையே தீவிரமாக நிற்கின்றார் என்பதை அறிந்துகொண்டவன் "அப்பா நான் பிலோமினாவை எவ்வளவு விரும்பிறேன் எண்டது உங்களுக்குத் தெரியும் தானே... அவளின்ர மனதை மாத்த நினைக்காமல், கலியாண வேலையில முழ்முரமாக இறங்கியிருக்கிறீங்க... ஒருத்தரையும் நிம்மதியா வாழ விடமாட்டன்" எனக் கூறியவன் கோபமாக வெளியேறிவிட்டான்.

மரியதாஸ் சம்மாட்டியார், பிலோமினாவின் தந்தையான சூசையுடன் கதைத்து அவளுக்கும், விக்ரருக்கும் தானே முன்னின்று திருமணத்தையும் மிக விமரிசையாக நடத்தி முடித்தார். திருமணத்தை நடாத்தி முடிக்கும் வரை அவரது மகனால் ஏற்பட்ட இடையூறுகள் கொஞ்சமல்ல. ஆனால் அதை எல்லாம் முறியடித்து திருமணத்தை நடாத்தியும் முடித்துவிட்டார்.

"அப்பா என்ரை ஆசையில மண்ணை அள்ளி போட்டிட்டீங்கள். நான் இந்த ஊரை விட்டே போறன். ஆனால் இதற்கான பலனை அனுபவிப்பீங்கள்..." என்று கூறியவன் அன்றே அந்தக் கிராமத்தை விட்டுச் சென்றவன் அதன் பின்னர் அவன் எங்கிருக்கின்றான்? என்ன செய்கின்றான்? என்பது எவருக்கும் தெரியாது.

பிலோமினாவும் விக்ரரும் மகிழ்ச்சியான இல்லற வாழ்வில் திளைத்தனர். ஆறு மாதங்கள் அன்புடன் நடாத்திய குடும்ப வாழ்வில் பீற்றர் மீண்டும் அந்த ஊருக்கு வந்ததும் புயல் வீச ஆரம்பித்தது.

நடந்த சம்பவங்கள் அனைத்தையும் மறந்தவன் போலவும், திருந்தியவன் போலவும் தன்னைக் காட்டிக் கொண்ட பீற்றர், விக்ரரைத் தேடி வந்தான். "விக்ரர் உன்னுடைய திருமணத்திற்கும் நான் நிற்கேலாமல் போச்சு என்னை நீங்கள் மன்னிக்க வேணும்..." என்று கூறியவன் திருமணப் பரிசென்று கூறி ஒரு மணிக்கூட்டையும் பரிசாக வழங்கினான்.

பிலோமினா உட்பட அனைவரும் அவன் மனம் மாறிவிட்டதாக எண்ணி மகிழ்ந்தனர். ஆனால் அடிக்கடி விக்ரரை அழைத்துச் செல்லும் நாட்களில் மது போதையில் வீட்டிற்குத் திரும்பும் விக்ரர் பிலோமினாவுடன் பல விடயங்களில் முரண்படத் தொடங்கினான்.

அவனைத் திருத்துவதற்குப் பிலோமினா கையாண்ட வழிகள் அனைத்தும் பயனற்றுப்போனதுடன் விக்ரர் அவளை அடித்துத் துன்புறுத்தும்போது அவளிடம், "எனக்கு உன்ரை ஆட்டக் குணம் தெரியாமல் போச்சு. உன்னைப் பற்றி நல்லாத் தெரிஞ்சதால்தான் சம்மாட்டியார் தன்ர மகனுக்கு உன்னைச் செய்யாமல் என்ர தலையில கட்டியிருக்கிறார். பீற்றர் சொல்லித்தானே எனக்கு இப்ப விஷயம் தெரிஞ்சுது..." போதையில் அவன் உளறியபோதுதான் பீற்றர் எவ்வளவு தூரம் தன் வாழ்க்கையில் விளையாடுகின்றான் என்பது பிலோமினாவிற்குப் புரிந்தது.

மறுநாள் கடலுக்கு மீன் பிடிப்பதற்குப் புறப்பட்ட விக்ரர் மதுபோதையிலிருந்ததுடன் நடக்கமுடியாமல் தள்ளாடியவாறு செல்வதைக் கண்டவள் "நீங்கள் இந்த நிலையில் கடலுக்குப் போகவேண்டாம். தயவு செய்து நான் சொல்துறதக் கேளுங்கோ. போகாதேங்கோ..." தன்னிடம் கெஞ்சியவளைத் தள்ளிவிட்டான்.

"உன்னோடை வீட்டில இருக்கிறதவிட செத்துப்போறது மேல்..." எனக்கூறியவன் அவள் பேச்சை உதாசீனப்படுத்திவிட்டுச் சென்றான். செய்வதறியாது கதிகலங்கி நின்றாள் பிலோமினா.

இரவு முழுவதும் தூங்காமல் விழித்திருந்தவள் அதிகாலையில் கண்ணயர்ந்தாள். அவளது வீட்டுப்படலையில் "பிலோமினா... பிலோமினா..." என அழைக்கும் குரல் கேட்டுப் பரபரப்பாக எழுந்து ஓடி வந்தவள், தன் தந்தை சூசையும் அவள் அண்ணன் அல்போன்ஸ்சும் அங்கே நிற்பதைக் கண்டு பதட்டத்துடன் படலையைத் திறந்தாள்.

"என்ன அப்பா... ஏன் இவ்வளவு காலையிலையே வந்திருக்கிறீங்க? என்ன விஷயம் அப்பா...?" படபடப்பாக வினவினாள் பிலோமினா.

"நாங்கள் சொல்லிறதக் கேட்டுப் பதற்றப்படாத பிலோமினா. மனதைத் திடப்படுத்திக்கொள்ளம்மா. நீ ஒருக்கா கடக்கரைக்கு வா..." கூறியவர் பேசமுடியாது விம்மினார்.

பிலோமினாவிற்குப் புரிந்துவிட்டது. தனது கணவனுக்குத்தான் ஏதோ ஆபத்து நடந்துவிட்டது என்பதை எண்ணியவள், தன் தந்தையின் கால்களைப்பற்றிக் கதறியவளாக முதல் நாள் இரவு நடந்த சம்பவத்தையும் கூறினாள்.

பிலோமினாவின் கணவன் அவளைவிட்டுப் பிரிந்து மூன்று மாதங்களாகி விட்டன. அவன் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற போது

அவனுடன் பீற்றரும் சேர்ந்து சென்றதாக அவனைக் கண்டவர்கள் பிலோமினாவிடம் கூறினர். எனவே, கணவனின் மறைவுக்குப் பீற்றரே காரணம் என்பதைப் புரிந்துகொண்டாள் பிலோமினா. ஆனாலும் ஆதாரமில்லாமல் அவன்மீது எவ்வாறு குற்றம் சுமத்தமுடியும்?

அவளும், அவள் தங்கை யூலியட்டுடன் தன் தந்தை வீட்டில் அடைக்கலமடைந்தாள். யூலியட் கல்வி கற்பதில் ஆர்வமுடையவளாதலால் நகரப்புறப் பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்காகப் பிலோமினா சென்ற நேரம் அவளின் கிராமத்தைச் சுனாமிப் பேரலை காவுகொண்ட அவலச் செய்தி அவளை நிலைகுலையச் செய்தது.

அவளைப்போல நிர்க்கதியாகிய பலருக்கு அடைக்கலம் கொடுத்தவர் தேவாலயத்தின் பங்குத்தந்தை லோறன்ஸ் அடிகளார் எனலாம். மக்கள் தமது தொழிலைத் தொடரவும், வீடுகளை அமைப்பதற்கும் அவரே தன்னாலான உதவிகளைச் செய்தார்.

மரியதாஸ் சம்மாட்டியார் தனது தொழிலில் நொடித்துப் போனாலும் ஓரளவு தன்னைத் திடப்படுத்தித் தொழில்செய்ய ஆரம்பித்தார். தனது நண்பரின் பிள்ளைகளான பிலோமினாவும், யூலியட்டும் அநாதைகளாக்கப்பட்டமைக்கு வருந்தி அவர்களுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்ய முன்வந்தார்.

அந்தக் கிராமத்து மக்களில் பெரும்பாலானவர்கள் அவரிடமே தொழில்புரிந்தனர். அவரது மகன் பீற்றர் மீன்பிடித்தொழிலில் தீவிரமாக ஈடுபட்டுக் குறுகியகாலத்தில் பெரிய முதலாளியாக மாறினான். மீன்களைக் காயவைத்துக் கருவாடாக்கி வேறு இடங்களுக்கு அனுப்பி வியாபாரம் செய்யும் தொழிலில் தந்தையுடன் சேர்ந்து ஈடுபட்டான்.

சம்மாட்டியார் உதவி செய்வதை விரும்பாத பிலோமினா அவரிடம் "அங்கிள் உங்கன்ர வாடியில மீன் காயப்போடுற வேலை செய்ய நான் வாறன். எங்களுக்கு நீங்கள் வேலை தந்தாலே போதும் நான் என்ரை தங்கச்சியையும் படிப்பிக்க அது உதவியாயிருக்கும்..." என உறுதியாகக் கூறினாள்.

பணம் கையிலே புரளத் தொடங்கியதும் பீற்றரின் மிருகக் குணம் விசுவரூபமெடுத்தது. தங்களது வாடியிலே வேலை செய்கின்ற அநாதரவான பெண்களை தன் விருப்பத்திற்கு இணங்க வைக்கும் ஆயுதமாகப் பணத்தைப் பயன்படுத்தினான்.

வாழ வழியின்றித் தவித்த பெண்கள் பீற்றரை எதிர்த்தால், அவனது நடத்தை பற்றிக் குற்றம் சாட்டினால், தமது வேலை பறிபோய்விடுமோ என்றெண்ணி அவனது நடத்தை பற்றித் தெரியப்படுத்தாது வாழ்ந்தனர். பிலோமினா இதனை நன்கு அறிந்திருந்தாள். அவளது நண்பிகள் அவளிடம் பீற்றரைப் பற்றிக் கூறியிருந்தனர்.

இந்த நிலையில் கல்லூரியில் படித்து முடித்துக் கிராமத்திற்கு வந்திருந்த யூலியட் "அக்கா நானும் உன்னோடை வேலைக்கு வாறன். நானும் வந்தால் உனக்கு உதவியாயிருக்கும்..." பிடிவாதமாக நின்ற யூலியட்டை அழைத்துக் கொண்டு சம்மாட்டியாரிடம் சென்றவள்:

"அங்கிள் யூலியட் தன்ரை றிசல்ட் வரும்வரையும் வேலை செய்யப்போறாவாம்..."

தான் உதவி செய்வதை அவர்கள் விரும்பமாட்டார்கள் என்பதைப் புரிந்துகொண்ட சம்மாட்டியார் "சரியம்மா யூலியட்டும் இங்க வேலை செய்யட்டும்..." எனக்கூறினார்.

யூலியட் வேலைக்குச் சேர்ந்து ஒரு மாதமாகிவிட்டது, எந்தப் பிரச்சினையும் இல்லாது பிலோமினாவும், அவளும் மகிழ்ச்சியுடன் வேலைக்குப் போய்வந்தனர்.

வியாபார விஷயமாகக் கொழும்பிற்குச் சென்றிருந்த பீற்றர் அன்று மதியம் தான் வீட்டிற்கு வந்திருந்தான். வந்தவன் வாடியில் வேலை செய்வதைப் பார்வையிட வந்த இடத்தில் பிலோமினாவிற்கு அருகில் இருந்து வேலை செய்து கொண்டிருந்த யூலியட்டைக் கண்டுவிட்டான்.

சிறுவயதிலே அவளைக் கண்டவன் இன்று அவளைக் கண்டதும் திகைத்துவிட்டான். அழகே உருவாக இருந்த யூலியட்டின் தோற்றம் அவனை மிகவும் வசீகரித்தது.

"அட யூலியட்டா? என்ன ஆளே அடையாளம் தெரியாமல் மாறிவிட்டாய்..." எனக் கூறியவாறு அவளையே கண்கொட்டாமல் பார்த்தவாறு அசட்டுச்சிரிப்புடன் நின்றவனை வெறுப்புடன் உறுத்துப் பார்த்தாள் யூலியட்.

இரண்டு நாட்களாகத் தூக்கத்தை மறந்து பரிதவித்தாள் பிலோமினா. காமுகனான பீற்றரிடமிருந்து எப்படி யூலியட்டைக் காப்பாற்றுவது என்பதைப் பற்றிய எண்ணமே அவளது தூக்கத்தைப் போக்கடித்து விட்டது.

மூன்றாவது நாள் காலையில் வாடியில் பிலோமினாவைத் தனியே சந்தித்துத் தன் எண்ணத்தை வெளிப்படுத்தினான் பீற்றர்.

அவனின் கண்களில் தெரிந்த வெறி அவளைத் திகிலடைய வைத்தது. தன்னால் ஏற்பட்ட தோல்விக்கே தன் வாழ்க்கையை நிர்மூலமாக்கியவன், எத்தனையோ பெண்களின் வாழ்க்கையைச் சீரழித்தவனாகிய அவனுக்கு என்ன பதிலைக் கூறுவது - சிந்தனை வசப்பட்டவளாக கடற்கரை மணற்பரப்பிலமர்ந்து கடலையே வெறித்துப் பார்த்தவண்ணம் இருந்தவள், ஒரு முடிவுக்கு வந்தவளாக எழுந்தாள்.

வீட்டிற்கு வந்தவள் "யூலியட் உன்னுடைய உடுப்பு பாக்கை எடுத்துக் கொண்டு என்னோட வா...?" எனக் கூறினாள். பிலோமினாவின் முகத்தை ஏறிட்டுப் பார்த்த யூலியட் "ஏன் அக்கா இந்த நேரத்தில எங்க போறதுக்கு வரச் சொல்லுறீங்க...?" எனக் கேட்டாள். பிலோமினாவின் முகத்தில் தெரிந்த இறுக்கத்தைப் பார்த்ததும் மறு பேச்சின்றி அவள் பின்னால் தன் உடுப்பு பாக்குடன் புறப்பட்டாள்.

தன் சகோதரி படும் துன்பங்களையும், அவள் தனக்காகத் தன்னைப் படிக்கவைக்க எவ்வளவு தூரம் தன்னை வருத்துகின்றாள் என்பது யூலியட்டுக்கு நன்கு தெரியும். துணிச்சல் மிக்க தன் சகோதரி தனக்காகவே ஏதோ காரியத்தில் இறங்கியிருக்கின்றாள் எனப் புரிந்துகொண்டவள் எதுவும் பேசாது மௌனமாக பிலோமினாவின் பின்னால் சென்றாள்.

தன் தங்கையுடன் தேவாலயத்தை அடைந்த பிலோமினா பாதர் லோறன்சிடம் "பாதர் என்ர தங்கச்சி யூலியட்டை உங்கன்ர கைகளில் ஒப்படைக்கிறன். அவளை எப்படியும் கொன்வென்டில சேர்த்து விடுங்கோ. அவளுக்கு பெரிய ஆபத்து வந்திருக்குது. அவளுக்கு எப்படியும் நீங்கள்தான் பாதுகாப்புத் தரவேணும். பாதர் என்னைப் பற்றி கவலைப்படவேண்டாம்..." எனத் தழுதழுத்த குரலில் கூறியவள், யூலியட்டைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்.

"அக்கா ... என்னை விட்டிட்டு போகாதேங்கோ..." எனக் கதறி அழும் யூலியட்டின் கரங்களை விடுவித்துக் கொண்டு, வேகமாக நடந்தாள் பிலோமினா.

வீட்டிற்குள் நுழைந்தவள் தன் கணவனின் புகைப்படத்தை ஒரு கணம் உற்றுப் பார்த்தவள் உறுதியான மனத்துடன் வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே வந்தாள்.

பக்கத்துவீட்டு றோசலினிடம் "றோசலின் பீற்றர் என்னைத் தேடிவந்தா கடற்கரையில அவருக்காகக் காத்திருக்கிறன் எண்டு சொல்லு..." என்று மெல்லிய புன்முறுவலுடன் கூறிவிட்டுச் செல்லும் பிலோமினாவை அதிர்ச்சியுடன் பார்த்த றோசலின்.

'இந்தப் பிலோமினாவுக்கு என்ன நடந்தது?... ம் ...எல்லாம் காலமாற்றம் தான். அவளின்ர நடையும், மினுக்கலும் குலுக்கலும்... நல்லா பீற்றரின்ர வலையில விழுந்திட்டாள்போல..., எனத் தனக்குள்ளே பேசிக்கொண்டாள்.

பிலோமினாவின் வீட்டிற்கு வந்த பீற்றர் அவளது வீட்டுப்பட்லை பூட்டப்பட்டிருப்பதைப் பார்த்துத் திகைத்துநின்றான். அவனைக் கண்டதும் விரைவாக நடந்து வந்த றோசலின் "பீற்றர் பிலோமினாவுக்கு என்ன சொக்குப்பொடி போட்டனி அவ உனக்காக கடற்கரையில காத்திருக்கிறாவாம் வரட்டாம்..." எனக் கூறி நகர்ந்தாள்.

அவள் கூறியதைக் கேட்டு இன்ப அதிர்ச்சியடைந்த பீற்றர் விரைவாகக் கடற்கரையை அடைந்தான்.

கடற்கரை மணற்பரப்பில் அமர்ந்திருந்த பிலோமினா புன்முறுவலுடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள். தன்னருகில் அமரும்படி கைகளைக் காட்டினாள். அவளது அழகிய முகம் பூரண சந்திரனைப் போல பிரகாசித்தது. அவளையே பார்த்த வண்ணம் தடுமாறி அவளருகில் அமர்ந்துகொண்டான் பீற்றர்.

"பீற்றர் ... ஏன் விலகி இருக்கிறீங்க. கிட்டவாங்க ... நடந்த சம்பவங்களையெல்லாம் நான் மறந்திட்டன் இனி நாங்கள் சந்தோஷமாயிருப்பம்... உங்கன்ர மகிழ்ச்சிதான் எனக்கு முக்கியம் எண்டதை நான் உணர்ந்திட்டன்..." என்று கூறியவளை நெருங்கிய பீற்றர் அவளின் இரு கரங்களையும் பற்றிக்கொண்டான்.

"பிலோமினா... உன்ரை காதலுக்காக நான் தவமிருந்தனான். எனக்குக் கிடைக்காத உன்னை எவரோடும் வாழக்கூடாதெண்டுதான் நான் மிருகமா மாறினனான். எனக்கு நீயே போதும். இந்த உலகத்தில எதுவும் வேண்டாம்." எனக் கூறியவன் அவள் கரங்களை நெஞ்சில் பதித்து ஒரு வித மயக்கத்தில் மணல் மீது சாய்ந்தான்.

அவன் கரங்களிலிருந்து தன் கரங்களை விடுவித்துக் கொண்டு அவனைக் குறும்பாகப் பார்த்து "உங்கன்ர வீட்டில உங்கன்ர அப்பாவிடமும் விஷயத்தைச் சொல்லுங்கோ..." எனக் கூறினாள்.

கண்களை மூடியவண்ணம் "கட்டாயம் அப்பாவிட்டைச் சொல்லிறன்..." எனக்கூறியவன் அடுத்த கணம் ஐயோ... அம்மா... எனக் கதறுவது கடலலைகளின் இரைச்சலுடன் சேர்ந்து எதிரொலித்தது.

தனது இடுப்பிலே தயாராக வைத்திருந்த கத்தியை இழுத்தெடுத்து கண்மூடிப் படுத்திருந்த பீற்றரின் நெஞ்சிலே ஓங்கிக் குத்தியவள் "பாவி பொம்பிளையள் எண்டா அவ்வளவு கேவலமாய் போச்சாடா உனக்கு... இனியாவது இந்தக் கிராமத்தில பொம்பிளையளோட ஒரு தரும் சேட்டை விடாமல் இருக்கவேணும்..." எனக் கூறியவள் அவனது மூக்கினருகில் குனிந்தாள். அவனது மூச்சு அடங்கியிருந்தது.

சுற்றுமுற்றும் பார்த்தாள், கடற்கரை வெறிச்சோடிக் கிடந்தது. நெஞ்சில் சொருகிய கத்தியை எடுத்துக் கடலில் வீசி எறிந்தாள். அவனது உடலைத் தன் பலங்கொண்ட மட்டும் உருட்டிக் கடலுக்குள் தள்ளியவள், நிம்மதியுடன் தேவாலயத்தை நோக்கி நடந்தாள். நிதானமாக நடந்தவளின் மனதிலே ஒரு அரக்கனை அழித்த திருப்தியே நிறைந்திருந்தது. பாதர் லோறன்சிடம் பாவமன்னிப்புக் கேட்கவிரையும் அவளை வரவேற்பது போல் தேவாலய மணி ஓசை ஓங்கி ஒலித்தது. ●

# மெழுகுவர்த்திகள்

**வா**னதி எதிர்பார்க்கவில்லை.

அந்த மகிழ்ச்சியான செய்தியை சுமந்துகொண்டு அவள் உயிர் நண்பி வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்து கூறிய வார்த்தைகள் அவளை மட்டுமல்ல, படுத்த படுக்கையாகப் பாயோடு பாயாகப் படுத்திருக்கும் அவள் அப்பா சுந்தரம், அம்மா கமலா, தம்பி, தங்கை என்ற எல்லோரையுமே குதூகலப்படுத்தியது. க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அவள் மாவட்ட மட்டத்தில் இரண்டாவது நிலையில் சித்தியடைந்திருந்தாள்.

உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன. பாடசாலைக்கு முடிவுகள் வரும்வரை காத்திருக்கும் பொறுமை எந்த மாணவருக்கும் இருப்பதில்லை. "இன்ரநெற்றிலை றிசல்ட் வெளியாகி விட்டுதாம். போய்ப் பார்த்துக்கொண்டு வரலாம். வானதி நீயும் வாறியா?" தர்சிகா கேட்ட உடனேயே தானும் சென்று பார்க்கவேண்டும் என்ற ஆவல் இருந்தாலும் அதனை அடக்கிக் கொண்டாள் வானதி.

காலையிலே அப்பாவிற்கு மருந்து வாங்குவதற்கே அம்மா காசில்லாமல் காதில் போட்டிருந்த தோட்டை பாக்கியம் மாமியிடம் அடைவு வைத்ததை கண்ணால் பார்த்த அவள் எப்படி அம்மாவிடம் காசு கேட்க முடியும்.

வானதியின் நிலையை நன்றாகப் புரிந்து கொண்டவள் தர்சிகா. அவளின் உயிர் நண்பியாக இருப்பதைப் பெருமையாக நினைப்பதுடன், அவளின் நிலையை அறிந்து அவ்வப்போது உதவி செய்பவளும் அவள்தான். தனது பரீட்சை முடிவுகளைப் பார்ப்பதிலும், தனது

நண்பியின் பரீட்சை முடிவுகளே அவளுக்குப் பெரிதாக இருந்தது. எனவே, அவளது பரீட்சைச் சுட்டெண்ணையும் மறக்காமல் வாங்கிச் சென்றாள் தர்சிகா.

வானதியும் தர்சிகாவும் கோப்பாயில் உள்ள பிரபலமான கல்லூரியில் உயர்தர வகுப்பில் கல்வி கற்பவர்கள். சிறு வகுப்புமுதல் இருவரும் ஒன்றாக ஒரே வகுப்பில் கற்பதனால் இருவருக்கும் இடையில் நெருங்கிய நட்பு இருந்ததோடு உரும்பிராயில் இருவரது வீடுகளும் அருகருகே இருந்ததனால் இரு குடும்பங்களுக்குமிடையில் நெருங்கிய உறவும் இருந்தது.

வகுப்பில் வானதி எப்போதும் முதலாம் பிள்ளையாகவே வருவாள். பாடங்களிலும், இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் அவள் சிறந்து விளங்கியதால் ஆசிரியர்கள் மத்தியில் அவளுக்கு எப்போதும் மதிப்பிருந்தது.

க.பொ.த.உயர்தர பரீட்சையில் வானதி மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெறுவாள் என்பது கல்லூரியின் எதிர்பார்ப்பாக இருந்தது. கலைத்துறையைத் தெரிவுசெய்த அவள் தமிழ், வரலாறு, இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்திருந்தாள். அவளது கடின முயற்சிக்குப் பலன் கிடைத்துவிட்டது. மூன்று பாடங்களிலும் A பெறுபேறு கிடைத்த துடன், மாவட்டத்தில் இரண்டாவது நிலை கிடைத்ததும் எதிர்காலத்தை நோக்கி அவளது சிந்தனை சிறகடிக்கத் தொடங்கியது. அதனை சற்றே ஒதுக்கிவிட்டு கடந்த காலத்தை எண்ணிப் பார்க்கத்தொடங்கினாள் வானதி.

வானதியின் பெற்றோர்களின் சொந்தஇடம் தெல்லிப்பளை. பெற்றோர்களின் எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இருவரும் விரும்பித் திருமணம் செய்தமையால் இரு குடும்பத்தவர்களும் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. துணிவுடன் தமது வாழ்க்கைப் பயணத்தை தொடங்கிய சுந்தரம் - கமலா இருவரும் வாழ்க்கையில் எதிர்கொண்ட பிரச்சினைகள் கொஞ்சநஞ்சமல்ல.

ஓரளவு வசதிபடைத்த குடும்பத்தைச் சேர்ந்தவள் கமலா. வேலை எதுவுமேயில்லாத சுந்தரத்தை நம்பி வீட்டைவிட்டு வெளியேறிவிட்டாள். வாழ்க்கையில் எதிர்நீச்சல் போடக் கற்றுக்கொண்ட இருவரும் உரும்பிராயில் தெரிந்த நண்பன் ஒருவனின் உதவியுடன் சிறிய வீடொன்றை வாடகைக்கு எடுத்து வாழத் தொடங்கினார்கள்.

தன் நண்பனின் பலசரக்குக் கடையில் விற்பனை செய்யும் தொழிலாளியாகச் சேர்ந்த சுந்தரத்திற்கு குடும்பத்தை நடத்துவது சிரமமாகவே இருந்தது. கமலா தன் பெற்றோர்கள் வசதியாக இருந்தும் தன்னையும் தன் கணவனையும் உதாசீனப்படுத்தியதை எண்ணி வைராக்கியத் துடன் தங்களது வருமானத்திற்கு ஏற்றவகையில் வாழத்தொடங்கினாள்.

வானதி முதற்குழந்தையாகப் பிறந்ததும் அவர்கள் இருவரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. குடும்பம் ஓரளவு கஷ்டமின்றிச் செல்லவேண்டும் என்பதற்காகத் தமது வீட்டிற்கு அருகிலுள்ள தேநீர்க் கடைக்கு கமலா பலகாரங்கள் செய்துகொடுத்து ஓரளவு வருமானத்தைப் பெற்றுக்கொண்டாள்.

இயந்திரமாகப் போய்க்கொண்டிருந்த வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற இலக்கே சுந்தரம் - கமலா இருவருக்கும் இருந்தது. அவர்களின் சோர்ந்த மனதிற்கு இதம் தரும் தென்றலாக விளங்கியவர்கள் வானதியும், அவளுக்குப்பின் பிறந்த சுமனும், செல்வியும்தான்.

பிள்ளைகளை நன்றாக வளர்க்க வேண்டும், அவர்களைக் கல்வியில் முன்னேற்ற வேண்டும் என்ற தீவிரம் இருவருக்குமே இருந்தது. சிறு வயதுமுதல் மூன்று பிள்ளைகளும் நன்றாகப் படித்ததும் அவர்களுக்கு நம்பிக்கை தருவதாக அமைந்தது. காலம் விரைந்தோடியது. நண்பனின் மகள் தர்சிகாவுடன் கோப்பாயில் உள்ள கல்லூரியில் மகள் வானதியையும் தரம் ஆறில் சேர்த்தான் சுந்தரம். சுமனையும், செல்வியையும் வீட்டிற்கு அருகிலுள்ள பாடசாலைகளில் சேர்த்தான்.

மூன்று பிள்ளைகளும் பாடங்களில் திறமை காட்டியதுடன் விளையாட்டு, தமிழ்த்தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகளிலும் பங்குபற்றிப் பரிசில்கள் பெறுவதும்; ஆசிரியர்களால் பாராட்டப்படுவதும் பெற்றோர்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

க.பொ.த.சாதாரண தரத்தில் மிகச்சிறந்த பெறுபேறாக 8A, 2B பெற்ற வானதி தனது பெற்றோர்களின் பொருளாதார நிலையை அறிந்து, தான் கல்விகற்ற கல்லூரியிலேயே தொடர்ந்து கல்விகற்க விரும்பினாள்.

தமிழ்மீது கொண்ட பற்று, மொழியிலே அவள் காட்டிய ஆர்வம் தமிழ்த்தினப் போட்டிகளில் கட்டுரை, சிறுகதை திறனாய்வு போன்றவற்றில் கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் அவள் பெற்ற வெற்றி அனைத்தும் அவளைக் கலைத்துறையைத் தேர்ந்தெடுக்கச்

செய்தது.

பெற்றோர்களும் அவளது விருப்பதிற்குக் குறுக்கே நிற்கவில்லை. கல்லூரி அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டலில் பாடங்களில் அதிக அக்கறையுடன் இரவு - பகல் பாராது கடுமையாக தன்னை வருத்திப் படித்தாள் வானதி.

நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல், பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலையேற்றம் என்பவற்றால் சுந்தரத்தின் குடும்பம் நிலை தடுமாறியது. பிள்ளைகளின் தேவைகளையும் படிப்புச் செலவுகளையும் பூர்த்திசெய்ய முடியாது இருவரும் நிலைதடுமாறினர்.

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பதற்கிணங்க கடைக்குத் தன் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சுந்தரத்தை வேகமாக வந்த மினிபஸ் ஒன்று தட்டிவிட்டது. இரத்தம் பெருகிய நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சுந்தரத்தின் நிலை பரிதாபகரமாக இருந்தது.

செய்தியை அறிந்து கமலாவும் பிள்ளைகளும் வைத்தியசாலைக்கு விரைந்தனர். சுந்தரத்தின் நிலைகண்டு கமலாவும் பிள்ளைகளும் கதறி அழுதனர். விபத்தினால் இடுப்பிற்குக் கீழேஉள்ள பகுதிகள் இயங்க முடியாது என்பதை அறிந்த கமலா துடி துடித்துப் போனாள்.

"அப்பா அப்பா" என்று கதறித்துடிக்கும் பிள்ளைகளை அணைத்துக் கண்ணீர் பெருக்கினான் சுந்தரம்.

சுந்தரத்தின் குடும்பத்தைத் துன்பம் வரும் போதெல்லாம் கைகொடுத்து உதவும் அவன் உற்ற நண்பன் கனகுவும், அவன் மனைவி பார்வதியும், கமலாவையும் பிள்ளைகளையும் ஆறுதல் படுத்தினர்.

வீட்டிற்கு அழைத்து வரப்பட்ட சுந்தரம் படுத்த படுக்கையானான். அவனுக்கு வாழ்க்கையே கசந்துவிட்டது.

செய்தியை அறிந்து கமலாவின் பெற்றோர்கள் வந்தனர். கமலாவைப் பார்த்ததும், அவளின் தாய் மீனாட்சி "கமலா! பெற்றதாய் தகப்பன்ரை மனதில நெருப்பைக் கொட்டினால் என்ன நடக்கும் என்பதை இப்ப புரிஞ்சிட்டியா? இனியெண்டாலும் உவனை நம்பாமல் எங்களோட பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டுவா" என்று கூறியதுதான் தாமதம்; கமலா பத்திரக்காளியாக மாறினாள்.

"அம்மா ஒரு நிமிசம்கூட நீயும் அப்பாவும் இந்த வீட்டில நிக்கக்கூடாது! என்ர பிள்ளைகளையும் அவரையும் எப்படி பாதுகாக்கிறதெண்டு எனக்குத் தெரியும். நீங்கள் இந்தப்பக்கம் எங்களைப் பார்க்க வராமல் இருந்தால் போதும்." கோபத்தோடு கத்தினாள் கமலா. "மீனாட்சி, நீ வா! உந்த நாய் எக்கேடு எண்டாலும் கெட்டுப்போகட்டும்" என்று மனைவியை அழைத்துக்கொண்டு, காரில் புறப்பட்டுவிட்டார் கமலாவின் தந்தை முத்தையா.

புயல் ஒன்று அடித்து ஓய்ந்துவிட்ட அமைதி. வீட்டிலே உள்ள ஒருவரும் பேசவில்லை. கண்ணீர் பெருக, பேசமுடியாது பாயில் படுத்திருந்து பரிதவிக்கும் தன் கணவனைக் குழந்தைபோலத் தடவிக்கொடுத்து ஆசுவாசப்படுத்தவேண்டும் போல் இருந்த மனத்தை அடக்கிக்கொண்டாள் கமலா.

குடும்பத்தின் சுமை தன் தலைமீது மலையாகச் சுமத்தப்பட்டு விட்டதை உணர்ந்துகொண்டாள் கமலா. சுந்தரத்தால் வந்த வருமானம் கூட நின்றுவிட்டது. என்ன செய்வதென்று அறியாது நிலை தடுமாறியவளுக்குக் கனகுவின் குடும்பம்தான் கைகொடுத்தது.

தனது தாயின் நிலை கண்டு தவித்துப் போனாள் வானதி. "அம்மா எனக்குப் படிப்பு வேண்டாம். என்ரை O/L றிசல்டோட ஏதாவது ஒரு சின்ன வேலை எண்டாலும் நான் பார்த்தா வீட்டில உள்ள கஷ்டத்தை ஓரளவுக்கெண்டாலும் போக்கலாம். சொல்லுங்கோ அம்மா" மன்றாடினாள் வானதி.

"கனகு மாமாவின்ர கடையில கணக்கு எழுத, பில் போட எண்டாலும் நான் போறன் அம்மா. மாமாவைக் கேளுங்கோ."

தன் மடியில் தலைபுதைத்துக் கதறிஅழும் தன் மகளின் முதுகைத் தடவிக் கொடுத்தவண்ணம் தீவிர யோசனையில் ஆழ்ந்தாள் கமலா. 'உயர்தரப் பரீட்சைக்கு இன்னும் மூன்று மாதங்களே இருக்கின்றன. அதற்கிடையில் வானதியின் கல்வியைக் குழப்புவதா? அவளது எதிர்கால நம்பிக்கை சிதைவடைவதா? கூடாது. என்ன கஷ்ட வந்தாலும் என்ர பிள்ளைகளின் கல்வியைக் குழப்பக்கூடாது'.

மனதைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்தாள் கமலா. தந்தைக்கு விபத்து நடந்த நாள் தொடக்கம் வானதி பாடசாலைக்குச் செல்லவில்லை. வானதியின் வகுப்பாசிரியர் வானதியின்மீது மிகுந்த அன்புள்ளவர். ஏனைய பாடங்களைக் கற்பிப்பவர்களும் அவள்மீதும்

அன்பும் நம்பிக்கையும் கொண்டிருந்தனர். அவர்கள் கல்லூரியின் அதிபருடன் கதைத்து, வானதியின் குடும்ப நிலையை எடுத்துக்கூறி; பரீட்சைக் கட்டணங்களை அறவிடாததுடன், பழைய மாணவர் சங்கங்களூடாகப் பெறும் நிதிமூலம் புலமைப்பரிசில் வழங்கி, எந்தவிதப் பிரச்சினைகளுமின்றிப் பாடங்களைப் படிப்பதற்கு வசதிகளையும் செய்துகொடுத்தார்கள்.

உயர்தர வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் வானதிக்கும், ஏனைய மாணவர்களுக்கும் மேலதிக வகுப்புக்களை எடுத்துப் பரீட்சைக்குத் தயார்ப் படுத்துகின்றார்கள். வானதியைக் கல்லூரியின் நம்பிக்கை நட்சத்திரமாகக் கருதும் அவர்களின் நம்பிக்கையைத் தகர்ப்பதா? கமலா ஒரு தீர்மானத்திற்கு வந்தாள்.

எப்போதும் தாங்கள் கஷ்டப்படும்போதெல்லாம் உதவி செய்யும் கனகுவின் வீட்டிற்குச் சென்றாள். தனக்கு ஒரு தையல் மிஷின் ஒன்றைக் கடனாக எடுத்துத் தரும்படியும், தான் தைக்கும் உடுப்புக்களை விற்பனை செய்வதற்கு உதவும்படியும் உருக்கமாக வேண்டினாள். கனகுவும் அவன் மனைவியும் அதற்கான ஒழுங்குகளை உடனடியாக மேற்கொண்டனர்.

கனகுவின் மனைவி பார்வதி தனது நகைகளை வங்கியில் வைத்துப் பணத்தைக் கொடுக்கவே, கமலா தையல் வேலையைத் தொடங்கினாள். வானதியின் கல்விக்கு எந்தவித இடஞ்சலும் வராமல் அந்த அன்புத்தாய் தன்னை வருத்தி இரவுபகல் பாராது தையல் இயந்திரமாக மாறினாள். பிள்ளைகளின் படிப்பு, வீட்டுச் செலவு, கணவனின் வைத்தியச் செலவு எனத் தன்னை அழுத்தும் சுமைகளைக் கூடச் சுகமான சுமையாக எண்ணித் தன்னை உருக்கினாள் கமலா. அந்த மெழுகுவர்த்தி தன்னை உருக்கி, தன் வீட்டிற்கு ஒளிகொடுக்க எண்ணியது; அதன் இலட்சியம் முழுக்க வானதியை ஒரு விரிவுரையாளராக உருவாக்கவேண்டும் என்பதே.

வானதியும் தன் தாயின் இலட்சியத்திற்காகவே இரவுபகல் பாராது விழித்திருந்து படித்தாள். அதன்பலன் இப்போது கிடைத்துவிட்டது. அவளது மனதிற் பல பட்டாம் பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன. எதிர்காலம் இன்பமாகத் தெரிந்தது. இந்த மகிழ்ச்சியான செய்தியைத் தன்னை ஆளாக்கிய, அறிவூட்டிய ஆசான்களிடம் பறந்துசென்று பகிர்ந்துகொள்ளத் துடிக்கும் மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு

அப்பா, அம்மா இருவருடனும் தன் மகிழ்ச்சியைப் பரிமாறிக்கொண்டு கனகு வீட்டை அடைந்தாள் வானதி.

அவளை அன்புடன் வரவேற்ற கனகு மாமாவின் கால்களிலும், பார்வதி மாமியின் கால்களிலும் விழுந்து வணங்கிய வானதி "மாமா, மாமி என்னை ஆசீர்வதியுங்கள், நீங்கள் இல்லையெண்டால் நான் இந்த நிலைக்கு வந்திருக்கேலாது. அம்மாவும் அப்பாவும் உங்களின் ஆசீர்வாதம் தான் என்னை உயரவைக்கும் எண்டு நம்புகினம். மாமா நானும் அதை முழுசா நம்பிறன்" என்று தழதழத்த குரலில் கூறியவள், உணர்ச்சிப் பெருக்கால் அழுதுவிட்டாள்.

அவளை அன்போடு அணைத்த பார்வதி "வானதி உன்னுடைய நல்ல மனதிற்கு உயர்ந்த நிலைக்கு வருவாய். உன்னாலதான் உன்ர அம்மா அப்பா பட்ட கஷ்டமெல்லாம் தீரும்" என்று அன்புடன் கூறினாள். வானதியின் குரலைக்கேட்டு வெளியே வந்த தர்சிகா "வானதி நீ பாஸ் பண்ணினது நான் பாஸ் பண்ணினது மாதிரி எனக்குச் சந்தோஷம். நாங்கள் இந்த சந்தோஷமான செய்தியை முதல் வேலையாய் பள்ளிக்கூடத்தில சொல்லவேணும். பிரின்சிப்பலும் இதை அறிஞ்சிருப்பார். எங்களின்ர மிஸ்சுக்கும் முதலில் போய் சொல்லுவம் வா."

"ஓம் தர்சி. நான் ஸ்கூலுக்குப் போக றெடியாத்தான் வந்ததனான்." என்று தர்சிகாவிற்கு கூறியவள்.

"மாமா, மாமி நாங்கள் ஸ்கூலுக்கு ஒருக்காப் போட்டு வாறம்" என்று கூறி விடைபெற்றாள்.

இருவரையும் மகிழ்ச்சியுடன் அனுப்பிவைத்தனர் கனகு தம்பதியர்.

தர்சிகாவின் சைக்கிளின் பின்கரியரில் அமர்ந்த வானதியின் மனம் இறக்கைகட்டிப் பறந்தது. எதிர்காலம், ஒளிமயமாகத் தெரிவதை உணர்ந்தாள் அவள்.

அன்பான பெற்றோர்கள், அறிவைப் புகட்டிய நல்லாசிரியர்கள், ஆதரவாக இருந்து வழிகாட்டிய கனகுமாமா குடும்பம் உற்ற நண்பியாக இருந்து இன்பத்திலுலும் துன்பத்திலும் அவளின் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்ட ஆருயிர்த் தோழி தர்சிகா - இவர்களையெல்லாம் மனதில் நிலை நிறுத்தி மண்டியிட்டவளுக்கு, மனமெல்லாம் மகிழ்ச்சியும் நம்பிக்கையுமே மேலோங்கி நின்றது. உலகத்தை வெல்லும் உணர்ச்சியில் தோய்ந்தாள் வானதி.

•

# பொய் முகங்கள்

"அம்மா போட்டு வாறன் ..." அம்மா கட்டித் தந்த இடியப்பப் பார்சலுடன் தண்ணீர்ப் போத்தல், புத்தகங்கள் எல்லாவற்றையும் சைக்கிள் கூடைக்குள் வைத்தபடி அம்மாவிடம் விடை பெற்றாள் வசந்தி.

சேலைத் தலைப்பில் கைகளைத் துடைத்தபடி கேற்றடி வரையும் வந்தாள் கனகம். சைக்கிளில் ஏறிய வசந்தி "அம்மா நான் இண்டைக்கும் பாடசாலையால வர கொஞ்சம் நேரமாகும். என்னைப் பார்க்காமல் சாப்பிடுங்கோ. உமா ரீச்சரின்ரை பிள்ளைக்குப் பிறந்த நாள்; நான் அங்க போட்டுத்தான் வருவன்" "சரி சரி கவனமாகக் போ வசந்தி" தாயின் குரலைக் காதில் வாங்கிக்கொண்டு சைக்கிள் பெடலை ஊன்றி மிதித்தாள்.

உரும்பிராய்ச் சந்தியில் வழக்கமாக அவளை முந்திச்செல்லும் கொடிகாமம் பஸ் அப்பொழுதுதான் பிரயாணிகளை ஏற்றுகிறது. கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் ஏழே கால். சைக்கிளைப் பலமாக மிதித்தாள். காற்றுப் பலமாக வீசியதால் சைக்கிள் ஓடுவது கஷ்டமாக இருந்தது.

கிருஷ்ணன் கோயிலடியைத் தாண்டினால் கோப்பாய்ச் சந்தி, தூரமில்லை. 8மணிக்கு முன்னர் ஆசிரியர்கள் வந்துவிடவேண்டும் என்பது புதிய அதிபரின் கண்டிப்பான உத்தரவு.

தவணை ஆரம்பமாகியவுடனேயே அதிபர் கூறிய வார்த்தைகள் அவள் காதில் தினமும் ஒலித்துக்கொண்டிருக்கும். "ஆசிரியர்கள்

நேரத்துக்கு வரவேண்டும். மாணவர்களின் ஒழுங்கு, வகுப்பறை வெளிப்புறச் சுத்தம் என்று எல்லா மேற்பார்வையும் செய்வது ஒவ்வொரு ஆசிரியரினதும் கடமை. நீங்கள் நேரத்துக்கு வந்தால்தான், பிள்ளைகளும் நேரத்துக்கு வருவார்கள்." அதிபர் கூறுவதற்கு அமைவாக அவள் பாடசாலைக்கு எப்பொழுதும் பிந்துவதில்லை.

உரும்பிராய் அவளது பிறந்த ஊர். ஒரு கலைப்பட்டதாரி. ஆசிரிய நியமனம் இந்த ஆண்டுதான் அவளது கிராமத்திற்கு அருகிலுள்ள கல்லூரியில் கிடைத்தது. அவளது தாய்க்கும் அது மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆண்களும், பெண்களும் இணைந்து கற்கும் அப்பாடசாலையில் தரம் ஆறின் வகுப்பாசிரியை வசந்தி. அன்பால் சிறுவர்களின் மனதைக் கவர்ந்தவள். வசந்தி ரீச்சர் மாணவர்களின் ஒழுக்கத்திலும் கண்டிப்பானவள்.

கிருஷ்ணன் கோயில் கழிந்து, இராசவீதியைக் கடந்து, சைக்கிளை மிதித்த வசந்தியின் மனதில் வகுப்பறையில் நடந்த சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. தரம் ஆறு தொடக்கம் க.பொ.த. உயர்தரம் வரையுள்ள அந்தக் கல்லூரியில், புதிதாக வந்துசேரும் மாணவர்கள் - கல்லூரிக்கு சப்பாத்து, ஸொக்ஸ் என்பன அணியவேண்டும். தரம் ஆறாம் வகுப்பு ஆசிரியை என்ற வகையில் தனது வகுப்புப் புதிய மாணவர்களுக்கு இதை அறிவுறுத்தியிருந்தாள்.

பாடசாலை தொடங்கி இரண்டு வாரங்களாகிவிட்டன. வசந்தி ரீச்சரின் வகுப்பிலிருந்த தாரணி ஸொக்ஸ் வாங்கவில்லை. தாரணியை அருகில் அழைத்து ஸொக்ஸ் வாங்காத காரணத்தைக் கேட்டதுடன் "நாளை ஸொக்ஸ் வாங்கி அணியவேண்டும்" எனக் கண்டிப்புடன் கூறினாள். இன்றைக்கு எப்படியும் தாரணியின் குடும்ப நிலைபற்றிக் கேட்கவேண்டும் என எண்ணிய வசந்திக்கு அன்று அந்தப் பிஞ்சு முகத்தின் கண்களில் விரிந்த சோகம் நினைவுக்கு வந்தது. மறுநாள் வகுப்பில் "நீங்கள் எல்லோரும் நான் சொன்னபடி ஸொக்ஸ் போட்டுக் கொண்டு வந்திட்டீங்கள். தாரணி மட்டும்தான் போட்டுக்கொண்டு வரேல்லை. தாரணி இஞ்சை வாரும் ஏன் ஸொக்ஸ் போடேல்ல..."

"ரீச்சர், அம்மா நாளைக்கு வாங்கித் தாறதெண்டு சொன்னவ..." கண்களில் கண்ணீர் மல்கத் தன் முன்னால் நின்ற அந்தப் பிஞ்சு முகத்தை அவளால் மறக்கமுடியவில்லை. நெஞ்சில் ஒரு மூலையில் வலி தோன்றுவது போன்ற உணர்வு.

வசந்தி ரீச்சரின் அருகிலுள்ள வகுப்பில் பாடம் எடுத்துக் கொண்டிருந்த உமா ரீச்சர் தனது பாடத்தை நிறுத்தி வசந்திக்கு அருகில் வந்தாள். "வசந்தி உதுகள் எங்கட வீட்டுக்குப் பக்கத்திலதான் இருக்குதுகள். தகப்பன், தாயை விட்டிட்டு எங்கேயோ போட்டார். தாய் கூலி வேலை எதாவது செய்துதான் உந்தப் பிள்ளையையும், உதின்ரை தம்பியையும் வளர்க்கிறா. ஆனால் உந்தப் பிள்ளையை ஒரு வேலையும் செய்ய விடமாட்டா. அவவுக்குச் சரியான திமிர். நான் எங்கட பிள்ளையோட விளையாட விடுங்கோ எண்டு சொன்னாலும் பிள்ளை படிக்குது எண்டுதான் சொல்லுவா. அப்படித் திமிர்க்கதை கதைப்பா. பிள்ளைக்கு ஸொக்ஸ் வாங்கிக் குடுக்கலாம்தானே; வாங்கிக் குடுக்கக் கஷ்டம் எண்டால் பக்கத்தில் வேற சின்ன ஸ்கூலுக்கு விடலாம்தானே" படபடவெனக் கூறி முடித்தாள் உமா ரீச்சர்.

உமா ரீச்சர் தன்னைப் பற்றிக் கூறியதைக் கேட்டு வசந்தியைப் பரிதாபமாகப் பார்க்கும் தாரணியை, இரக்கத்துடன் பார்த்தாள் வசந்தி. "தாரணி அம்மாவை நாளைக்கு இங்க கூட்டிக்கொண்டு வாரும்....." வசந்தி முடிப்பதற்குள்.

"ரீச்சர் அம்மாவுக்கு நாலுநாளா காய்ச்சல் ரீச்சர். அவ படுக்கையால் எழும்ப முடியாம கிடக்கிறா ரீச்சர்.

"நான் நாளைக்கு கட்டாயம் ஸொக்ஸ் வாங்கிறன் ரீச்சர்" விம்மலுடன் கூறிய தாரணியை வாஞ்சையுடன் தடவிய வசந்தியை வெறுப்புடன் பார்த்தாள் உமா. "வசந்தி நாளைக்குப் பிள்ளைக்குப் பிறந்த நாள். நான் லீவு. நீரும் நாளைக்கு வீட்டுக்கு வாரும்" சொல்லிவிட்டு தன் வகுப்பறையை நோக்கி விடுவிடெனச் செல்லும் உமா ரீச்சரை வியப்புடன் பார்த்தாள் வசந்தி.

முதல் நாள் நடந்த சம்பவம் அனைத்தையும் மனதில் எண்ணியவளாகப் பாடசாலைக்கு வந்தவள், வகுப்பறையைச் சுத்தம் செய்யும் மாணவிகளை அவதானித்தபோதும் தாரணியின் வரவை எதிர்பார்த்து மனம் துடிப்பதை அவள் உணர்ந்தாள். உமா ரீச்சரின் வார்த்தைகள் அந்தப் பிஞ்சு மனதை எவ்வளவு தூரம் வருத்தியிருக்கும். தாய்க்குக் காய்ச்சல் என்று சொன்ன பிள்ளைக்கு ஸொக்ஸ் வாங்கக் காசு எவ்வாறு கிடைக்கும்? சொல்லொணா மன வேதனையில் உள்ளம் துடித்தது.

தாரணியுடன் சேர்ந்துவரும் மயூரிகாவைக் கண்டவள் "என்ன மயூரிகா உம்மோட வாற தாரணி ஏன் வரேல? உமக்குத் தெரியுமோ..." மயூரிகாவைக் கேட்டாள் வசந்தி. "ரீச்சர் தாரணியின்ர அம்மாவுக்கு காய்ச்சல் விடேல்ல. ஸொக்ஸ் போடாம இங்க வந்தா எல்லோரும் பேசுவினம். ஸொக்ஸ் வாங்கின பிறகு வாறன் எண்டு சொன்னவ ரீச்சர்..." பிள்ளையின் உண்மையான பின்னணியை அறியாது அந்தப் பிஞ்சு மனதை நோகடித்து விட்டோமா என்ற குற்ற உணர்வு மனதை உறுத்தியது. "மயூரிகா! தாரணி வீடு உமா ரீச்சர் வீட்டுக்குப் பக்கத்திலா? நான் இண்டைக்கு உமா ரீச்சர் வீட்டை போறன். தாரணி வீட்டுக்கும் ஒருக்காப் போகத்தான் உம்மைக் கேட்டனான்". "ஓம் ரீச்சர்! உமா ரீச்சர் வீட்டுக்குப் பக்கத்து வீடுதான் தாரணி வீடு".

மயூரிகாவின் பதிலைக் கேட்டவளுக்கு மனதில் தாரணியின் நினைவே நிழலாடியது.

அன்று வசந்தி வகுப்பறையில் கற்பித்தபோதும் மனம் ஒன்றித்த கற்பித்தலாக அது இருக்கவில்லை. தலையிடி மண்டையைப் பிளந்தது. கன்ரீனில் பனடோல் வாங்கிப்போட்ட பின்னர்தான் தலையிடி குறைந்தது. அவளைப் பார்த்த ஆசிரியர் எல்லாரும் "என்ன ரீச்சர் டல்லா இருக்கிறியள்" என்று கேட்டபோது சிரித்து "ஒன்றுமில்லை" என்று சமாளித்தாள்.

கடைசிப் பாடம் முடிந்து மாணவர்கள் அனைவரும் சென்றதன் பின்னரே பாடசாலையிலிருந்து புறப்படும் வசந்தி, விரைவாகவே சைக்கிளில் உமா ரீச்சர் வீட்டுக்கு விரைந்தாள். குறுக்குப்பாதையால் சென்றால் விரைவாகச் செல்லலாம் என எண்ணியவாறு ஒழுங்கைவழியாக விரைந்தாள். கல்லூரியின் ஏனைய ஆசிரியர்களிலும் பார்க்க நெருங்கிப் பழகுபவர் உமா ரீச்சர்தான். இருவரும் தரம் ஆறு வகுப்பாசிரியர்கள். ஆனாலும் உமா ரீச்சர் மாணவர்களுடன் நடந்துகொள்ளும் முறையை வசந்தியின் மனம் ஏற்றுக்கொள்வதில்லை.

உமா ரீச்சரின் வீட்டுக்கு இரு தடவைகள் சென்றதால் அந்த வீட்டின் பின்புறப்பாதையும் வசந்திக்குத் தெரியும். மகளின் முதலாவது பிறந்த நாள் ஆகையால் உமா ரீச்சரின் வீடு கலகலப்பாக இருந்தது. அதனை ஆடம்பரமாகச் செய்யப் போவதாகக் கூறியிருந்தாள். சக ஆசிரியர்களுக்கு ஏனோ கூறவில்லை. வசந்தியை மட்டும் அழைத்திருந்தாள்.

உமா ரீச்சரின் வீட்டின் பின்புறத்திலும் ஒரு வாசல் இருந்தது. அதன் அருகிலிருந்த கிணற்றுத் தொட்டியைக் கடந்துதான் உள்ளே செல்லவேண்டும். இப்போதும் அந்தப் பாதையால் சைக்கிளை உருட்டிக் கொண்டு தொட்டிக்குக் கிட்டவந்த வசந்தியின் கண்கள் ஒரு கணம் நிலைகுத்தி நின்றுவிட்டன. அவளால் நம்ப முடியவில்லை. அவளின்பார்வையின்பக்கம்முதுகைக்காட்டியவண்ணம்தொட்டியில் போடப்பட்ட பாத்திரங்களைத் தன் பிஞ்சுக் கரங்களால் மினுக்கியபடி குந்தியிருந்த அந்த உருவம் தாரணியேதான். ஒரு கணம் தடுமாறிய வசந்தியின் மனம் பதறித் துடித்தது. தாரணி என்று உரத்த குரலில் கத்தவேண்டும்போல் உதடுகள் துடித்தன. அடக்கிக்கொண்டாள். இந்த நிலையில் தாரணி என்று அழைத்தால் அந்தப் பிஞ்சு மனம் எவ்வளவு வேதனைப்படும். அந்தப் பிள்ளையினுடைய மனம் நொருங்கிவிடுவதை அவளால் தாங்கிக்கொள்ள முடியாது. அப்பொழுதுதான் உமா ரீச்சரின் கபட நோக்கம் அவளுக்குப் புரிந்தது. அதேநேரம் பின்புறத்தால் வரும் வசந்தியைக் காணாத உமா ரீச்சரின் தாய் உமாவிடம் கூறுவது வசந்தியின் காதில் தெளிவாக விழுந்தது.

"உமா அந்தச் சின்னன் வடிவாப் பாத்திரங்களை மினுக்க மாட்டுது. உனக்குத் தேவையில்லாத வேலை. தாய்க்குக் காய்ச்சல் எண்டால் அந்தப் பிள்ளையை ஏன் வேலைக்கு வரச் சொன்னனி?" என்ற தாயின் வார்த்தைகளைத் தொடர்ந்து உமாவின் பதிலைக் கேட்டு வசந்தி ஒரு கணம் நிலைகுலைந்து போனாள்.

"அம்மா உங்களுக்குத் தெரியாது. நான் ஏன் இந்தச் சின்னப்பெட்டையை வேலைக்கு வரச் சொன்னனான் எண்டு. தாய்க்கும் காய்ச்சல், பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில ஸொக்ஸ் போடச் சொல்லினம். ஸொக்ஸ் வாங்கக் காசும் இல்லை. தாய் சுகமா இருக்கேக்க நான் எத்தனை நாள் கேட்டனான் பள்ளிக் கூடத்தால வந்து என்ர பிள்ளையைக் கொஞ்ச நேரம் பராக்காட்டச் சொல்லி; அதற்கு அவ "இல்லை ரீச்சர். பிள்ளை படிக்கவேணும்" என்று பெரிய திமிர்க்கதை கதைச்சவ. நான் நேற்றுப்போய் "உனக்கும் காய்ச்சல். தாரணியை அனுப்பினாலும் சும்மா பாத்திரங்களை மினுக்கித் தந்தாலும் நான் காசு தருவன்தானே. அதில ஸொக்ஸ் வாங்கிப் பள்ளிக்கூடம் போகலாம்... எண்டு சொல்லித் தாரணியை வரப் பண்ணிப் போட்டன்" என்று இறுமாப்பாகப் பேசும் உமாவைப் பாராட்டிய அவள் தங்கை ஷோபா "அக்கா உனக்கிருக்கிற புத்திசாலித்தனம் எங்களுக்கில்லை" என்று

கூறுவது கேட்டது. ஒரு கணம் தடுமாறிய வசந்தி உமா ரீச்சரின் சுயரூபத்தை இப்பொழுதாவது தெரிந்துகொண்டேனே என்று எண்ணியவளின் மனம் வெறுப்பால் கொதித்தது.

"ஒருவரும் தன்னைக் காணாமல் விட்டதும் நல்லதுக்குத்தான்" சைக்கிளைத் திருப்பிய வசந்தி உறுதியான மனதோடு சைக்கிளின் பெடலை மிதிக்கத் தொடங்கினாள். "தாரணிக்குத் தன்னாலான உதவியைச் செய்யவேண்டும். ஸொக்ஸ் வாங்கிக் கொடுப்பதுடன் ஐந்தாம் வகுப்பு புலமைப்பரிசில் சித்தியடைந்த அவளுக்கு அந்தக் காசும் கிடைக்கவில்லை. அதிபரிடம் கதைக்கவேண்டும். தாரணியைப் போன்று கல்வி கற்பதற்கு ஆர்வமுள்ள வசதி குறைந்த மாணவர்களுக்குப் பழைய மாணவர் சங்கத்தினூடாக நிதியுதவி பெற்றுக்கொடுக்கவேண்டும். பொய் முகங்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து ஒதுங்கி வாழவேண்டும்.

ஆசிரியத்தொழிலின் புனிதத்தைப் போற்றிச் சேவையாற்ற வேண்டும்" என்ற உறுதியுடன் சைக்கிளைச் செலுத்திய வசந்தியின் மனம் காற்றைப் போல் இலேசாவதை உணர முடிந்தது. •

## உதவும் கை

"அம்மா எனக்கு வருஷத்துக்குப் புதுச்சட்டை வாங்கித் தரமாட்டியா? சுதா, வாணி எல்லாரும் தங்கட புதுச்சட்டையளை எனக்குக்காட்டினவை. நான் அவையளுக்கெல்லாம் சொல்லிப்போட்டு வாறன். என்ர அம்மா இண்டைக்கு எனக்குச் சட்டை எடுத்துத்தருவா எண்டு. சொல்லம்மா எனக்குப் புதுச்சட்டை எடுத்துத் தருவியா...?" இரண்டு வயதுக் குழந்தை தனது சேலையைப் பற்றிக் கேட்க, ஆசையைப் பூர்த்தி செய்ய முடியாமலிருக்கும் தன் அவல வாழ்க்கையை எண்ணிப் பரிதவித்தாள் துளசி.

புத்தாண்டு பிறப்பதற்கு இரண்டு நாள்களேயிருந்தன. தனது குழந்தைகளான எட்டு வயதேயான மதுராவுக்கும், இரண்டு வயது நிறைவடைந்த உமாவுக்கும் புது உடுப்புக்கள் வாங்கவேண்டும் என்ற நினைவோடு இருந்தவளுக்கு அயல் வீடுகளிலெல்லாம் புத்தாண்டுக் கொண்டாட்ட ஆயத்தங்களும் பட்டாசுகளின் சத்தமும் காதுகளை அடைத்தன.

மதுரா இயற்கையாகவே அமைதியான சுபாவம். ஆதலால் புது உடுப்பைப்பற்றிக் கேட்கவில்லை. ஆனால் உமாவின் நச்சரிப்பைத் தாங்க முடிய வில்லை.

"அம்மா ... அம்மா அவைக்கெல்லாம் அப்பாதான் உடுப்புகள் எடுத்துக் குடுத்தவராம். எங்களுக்கு அப்பா இருந்தால் புது உடுப்பு எடுத்துத் தருவார்தானே? எங்கட அப்பா எங்கையம்மா...?"

மடியில் முகம் புதைத்துக் கேவி அழும் குழந்தையின் முதுகைத் தடவியவள் "உமாக்குட்டி உனக்கும், அக்காவுக்கும் கட்டாயம் புது உடுப்பு வாங்கித் தருவன். இப்ப ஓடிப்போய் விளையாடுங்கோ" மகளைச் சமாதானப்படுத்தி அனுப்பியவளுக்கு மகள் கூறிய வார்த்தைகளே காதில் ஒலித்தன.

"அப்பா இருந்தால் புது உடுப்பு எடுத்துத் தருவார்தானே! எங்கட அப்பா எங்க அம்மா...?"

அப்போதுதான் உமா வயிற்றில் உருவாகியிருந்த நேரம். மனைவி துளசிக்கும், மகள் மதுராவுக்கும் புது உடுப்புக்கள் வாங்கி வருவதற்குச் சென்ற மாதவன் அதன்பின் வீட்டுக்கு வரவேயில்லை. எங்கே போனான்? என்ன நடந்தது? என்பது இன்றுவரை புரியாத புதிர்தான்.

துளசி; உறவினர் வீடுகள், நண்பர்கள் வீடுகள் என எங்கு தேடியும் அவன் கிடைக்கவில்லை. காணாமல் போனோர் பட்டியலில் அவன் பெயர் இடம்பெற்றதுதான் மிச்சம்.

ஒரு வருடம் எப்படியும் மாதவன் வந்துவிடுவான் என்ற நம்பிக்கையுடன் வாழ்க்கையை நடத்தியவளின் நம்பிக்கையும் சிதறிப் போனது.

இளவயதில் இரண்டு குழந்தைகளுடன் கணவன் இல்லாமல் வாழும் அவல வாழ்க்கையை அனுபவ ரீதியாகக் கண்டுகொண்ட துளசி, உறவினர் என்று சொல்லி உறவு கொண்டாடுபவர்களிடமிருந்து ஒதுங்கி வாழவே விரும்பினாள்.

கூலிவேலை செய்தாவது தனது பிள்ளைகளை வளர்க்க எண்ணியவள், தனக்குத் தெரிந்த நம்பிக்கைக்குரிய வீடுகளில் வீட்டு வேலைகளுக்கு ஒத்தாசை செய்து தனது இரு பிள்ளைகளையும் பராமரித்தாலும், அவர்கள் கொடுக்கும் சம்பளம் அவர்களின் அரைவயிறு, கால் வயிற்றுக்குத்தான் போதுமாயிருந்தது.

இந்தநிலையில் புதுவருடத்துக்கு எல்லோரும் புது ஆடைகளை அணியும்போது தனது குழந்தைகள் இரண்டும் ஏக்கம் கொள்வதைப் பொறுக்கமுடியாது; தான் துன்பப்படும்போது தனக்கு உதவி செய்யும் சுமதி ரீச்சர் வீட்டை நோக்கி விரைந்தாள்.

சுமதி ரீச்சரின் பிள்ளைகள் துளசியைக் கண்டதும் "அம்மா... அம்மா...! துளசி அன்ரி வாறா" என ஆரவாரமிட்டனர்.

தன்னை அன்புடன் அவர்கள் துளசி அன்ரி என்று கூறியதால் மனம் நெகிழ்ந்த துளசி; "சுமதி ரீச்சரை ஒருக்கா வரச் சொல்லுங்கோ ஜனனி" எனக் கூறி முடிப்பதற்குமுன் வெளியே வந்தாள் சுமதி. "துளசி இப்பதான் உம்மைப்பற்றிக் கதைச்சனாங்கள். உமக்கு நூறு வயது உள்ளுக்கு வாரும்" அன்புடன் அழைத்த சுமதியின் பின்னால் தயங்கி நடந்தாள் துளசி.

"ரீச்சர், நான் உங்களிட்ட ஓர் உதவிக்கு வந்தனான். வருஷத்துக்கு இன்னும் இரண்டு நாள்தான் இருக்கு. பிள்ளையள் இரண்டும் பாவங்கள். அதுகள் புது உடுப்பு கேக்குதுகள். நான் என்ன செய்யிறது? அதுதான் என்ர காதில இருந்த தோட்டைக் கழட்டிக்கொண்டு வந்தனான். இதை வைச்சுக் கொண்டு ஒரு ஆயிரத்து ஐநூறு ரூபா தாருங்கோ ரீச்சர்..."

தழதழத்த குரலுடன் சுமதியின் கைகளில் தனது தோடுகளை சுற்றியிருந்த பேப்பரைத் திணித்தாள் துளசி.

தோடுகளைத் தன் கைகளில் திணித்த துளசியின் கரங்களில் மீண்டும் தோடுகளை வைத்த சுமதி "துளசி முதலில உள்ளுக்கு வந்து ஆறுதலா இரும். பிறகு தோடுகளை வைப்பதைப்பற்றி யோசிப்பம்" எனக் கூறியவள் "ஜனனி ... துளசி அன்ரிக்கு ஒரு ரீ கொண்டுவாரும்" மகள் ஜனனிக்கு உத்தரவிட்டவள் துளசியின் அருகில் அமர்ந்துகொண்டாள். ஆதரவற்ற நிலையில் தன்னிடம் உதவி கேட்க வந்திருக்கும் துளசியின் முகத்தை உற்றுநோக்கினாள் சுமதி.

தான் கேட்ட உதவியை செய்யமுடியாது என்பதனால்தான் சுமதி தன் கைகளில் திரும்பவும் தோட்டை வைத்திருக்கவேண்டும் என்று எண்ணி, மனம் குழம்பிய நிலையில் கண்களில் நீர் ததும்பப் பரிதவித்துத் தலை குனிந்திருந்தாள் துளசி.

தான் செய்யும் வேலைக்குரிய கூலியை மட்டும் பெற்றுக்கொள்ளும் இயல்பும், எதையும் வாய் திறந்து கேட்காத குணமுடையவள் இன்று உதவி என்று கேட்டு மன உளைச்சலுடன் இருப்பது சுமதிக்கு நன்கு புரிந்தது.

தேநீருடன் வந்த மகளிடம் "ஜனனி! துளசி அன்ரிக்கெண்டு எடுத்து வைத்ததைக் கொண்டுவந்து குடு" தாயின் ஆணைக்குக் காத்திருந்ததுபோல ஜனனி ஓடிச்சென்று பெரியதொரு பையைச் சுமக்க முடியாமல் சுமந்துவந்து துளசிக்கு அருகில் வைத்தாள்.

அதிர்ச்சியுடன் நிமிர்ந்த துளசியை அன்புடன் அணைத்த சுமதி "துளசி இது முழுக்க முழுக்க ஜனனியின் விருப்பம். அவ சோதினை பாஸ் பண்ணினதை மாமன்மாருக்கு அறிவிச்சவா. அவை மருமகளுக்கு ஏதாவது விரும்பினதை வாங்கச் சொல்லி காசு அனுப்பியிருக்கினம். ஆனால் ஜனனியின்ரை விருப்பம், துளசி அன்ரி குடும்பத்துக்கு உடுப்பு எடுக்க வேணும் எண்டுதான். அதுதான் நேற்றுப் போய் எல்லாம் எடுத்தனாங்கள்" கூறியவள் பையிலே மடித்து வைக்கப்பட்ட உடுப்புக்களை வெளியே எடுத்தாள். மதுராவுக்கும் உமாவுக்கும் அழகான விலை உயர்ந்த இரண்டு புதுச் சட்டைகள், துளசிக்கு ஒரு சேலை, சேலைக்குப் பொருத்தமான பிளவுஸ்துணி. இவற்றைப் பார்த்து திகைத்து நின்ற துளசியின் கைகளில் ஆயிரம் ரூபாத்தாள் ஒன்றையும் வைத்த சுமதி, "துளசி காதில தோட்டைப்போடும். பிள்ளையளுக்கு ஏதாவது பலகாரம் செய்து குடும். உம்மையும் பிள்ளையளையும் நாங்கள் எங்களின்ர உடன் பிறப்புக்களாத்தான் நினைக்கிறம்" என்று அன்புடன் கூறினாள். அவளின் அன்பு மழையில் நனைந்தவள் சுமதியின் கரங்களைப்பற்றிக் கண்களில் ஒற்றியதுடன் அருகிலிருந்த ஜனனியை அன்புடன் அணைத்தவள், "ஜனனி நீ நல்லாயிருப்பாயம்மா! உன்ரை நல்ல மனதுக்கு ஆண்டவன் உனக்கு நல்ல வழிகாட்டுவான்..." என மனதார வாழ்த்தியவள், மன நிம்மதியுடன் வீட்டை நோக்கி நடந்தாள்.

அவள் மனதில் சுமதியும் அவள் குடும்பத்தினரும் இமயமாக உயர்ந்து நின்றனர்.

# நிறம் மாறும் மனிதர்கள்

அரேபிய நாட்டின் கொடூர வெயில் அக்கினியாகச் சுட்டெரிக்க, மனதிலே கொளுந்துவிட்டெரியும் அக்கினியும் சேர்ந்து கண்ணனின் உடலெங்கும் பற்றி எரிவது போன்ற உணர்வு. இதுவரை அவன் தன் குடும்பத்தை விட்டுப் பிரிந்து இருந்ததில்லை. மகள் சுரபிக்கு ஏழு வயது. மகன் ஆதவனுக்கு நாலு வயது. கடைக்குட்டி நிலாவுக்கு இரண்டு வயது. பிள்ளைகளின் நினைவு வந்ததும் நெஞ்சில் வலிப்பது போன்ற உணர்வு.

ஆறு மாதங்களுக்கு முன்பு தான் கண்ணன் சவுதி அரேபியாவுக்கு வந்தான். அவனுடன் சேர்ந்து சுமார் இருநூறு பேர் அந்தக் 'காம்ப்' இல் தங்கியிருந்தனர். வரும்போது 'ரைவர்' ஆக வேலை செய்வதற்கு சவுதி அரேபியாவுக்கு அனுப்புவதாகக் கூறிய ஏஜென்சியின் வார்த்தையை நம்பி அவனும் அவனைப் போன்ற பலரும் அங்கே வந்திருந்தனர்.

ஆனால் இங்கு வந்ததன் பின்னர்தான் தாம் ஏஜென்சியினால் ஏமாற்றப்பட்டதை அறிந்து கொண்டார்கள். எல்லோரும் ஏதோ ஒரு வகையில் காணிகளை ஈடு வைத்தோ, விற்றோ தான் ஏஜென்சிக்கு காசு கட்டினார்கள். இங்கு வீதி திருத்தும் வேலைதான். அதற்குச் சம்பளமும் மிகக் குறைவு. என்ன செய்வது கொளுத்தும் வெயிலில் உடலை வருத்தவேண்டிய நிலை.

இன்று அதிகாலையிலிருந்தே மனதை ஏதோ பாரம் அழுத்துவது போன்ற உணர்வு. தலையிடி மண்டையைப் பிளந்தது. - ரூமுக்கு வந்த கண்ணன் குளிர்ந்த நீரில் குளித்தால் தான் உடல் அலுப்புத்தீரும் என்று எண்ணியவாறு குளியலறைக்குச் சென்றான்.

"கண்ணன் உனக்கு வீட்டில் இருந்து பார்சலும், கடிதமும் வந்திருக்கு..." மோகன் உரத்த குரலில் கத்துவது பாத்ரூமிலே குளித்துக்கொண்டிருந்த கண்ணனின் காதுகளில் விழுந்தது. வீட்டிலிருந்து பார்சல் என்றதும் குளியலை நிறுத்தி விட்டு ஓடி வரவேண்டும் என மனது பரபரத்தாலும் தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தியவனாய் நிதானமாகக் குளித்து முடித்து, வெளியே வந்தான் கண்ணன்.

தனது கட்டிலின் மேலிருந்த பார்சலையும் கடிதத்தையும் கையிலெடுத்தான். அவனது ரூம் நண்பர்களான மோகன், பாஸ்கர், தயாளன், காந்தன் ஆகியோர் அவன் முகத்தை ஆர்வத்தோடு பார்த்தனர்.

ஆறு மாதங்கள்தான் ஆகிறது ஊரிலிருந்து சவுதி அரேபியாவுக்கு வந்து. அதற்கிடையில் வீட்டிலிருந்து பார்சலும், கடிதமும் வந்திருக்கின்றன என்பது ஆச்சரியமாக இருந்தாலும், கடிதத்தில் என்ன எழுதியிருக்கிறது என்பதை அறியும் ஆர்வத்தைவிட அவனது நண்பர்களின் ஆர்வம் பார்சலைப் பிரித்துப் பார்ப்பதிலேயே இருந்தது.

"கண்ணா! கடிதத்தை முதலில் உடைச்சு வாசி; என்ன பார்சல் எண்டு கடிதத்தில் எழுதியிருப்பினம் தானே..." மோகன் கூறியது சரியாகப்பட்டது.

கடிதத்தை அவன் மனைவி சகுந்தலா தான் எழுதியிருந்தாள். அவனது சுகம் பற்றி விசாரிப்பு, தனது பிள்ளைகளது சுகநலம் எழுதியபின், அவன் அனுப்பிய காசு கிடைத்ததாகவும் அவர்கள் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலே இருக்கும் பாபு வருவதாகவும் அவரிடம் பார்சலும் கடிதமும் கொடுத்து விடுவதாகவும் எழுதியிருந்தாள்.

தொடர்ந்து கடிதத்தை வாசித்த கண்ணன் தலையிலே கை வைத்து இருந்துவிட்டான். "என்னடா கண்ணன் என்ன? என்ன விஷயம்? ஏன்... என்ன பிரச்சினை...? கடிதத்தில் என்ன எழுதியிருக்கு...?"

நண்பர்கள் கண்ணனைச் சூழ்ந்துகொண்டார்கள். முகம் எல்லாம் சிவந்து கண்கள் கலங்கத் தன் கைகளிலே இருந்த கடிதத்தை மோகனின் கைகளில் திணித்தான் கண்ணன்.

"மோகன் கடிதத்தை உரத்துவாசியடா..." தயாளன் கத்தினான்.

"வேண்டாமடா. கண்ணன்ரை குடும்ப விஷயம். நாங்கள் அவன்ர கடிதத்தை வாசிக்கவேண்டாம்..." பாஸ்கர் ,கடிதத்தை வாசிக்கவேண்டாம் என்று மோகனைத் தடுத்தான்.

"பாஸ்கர் மோகனைத் தடுக்காதேங்கோ. உங்கள் எல்லோருக்கும் தெரியவேணும்; மோகன் நீ வாசியடா..." கண்ணன் கூறியதும் மோகன் கடிதத்தை வாசிக்கத் தொடங்கினான்.

சகுந்தலா கடிதத்தில் எழுதிய சுகம் விசாரிக்கும் பகுதிகளைத் தவிர்த்து மிகுதியை வாசித்தான் மோகன்.

"நீங்கள் அனுப்பிய காசு கிடைத்தது. ஒரு மாதச் சம்பளம் 1லட்சம் ரூபா எண்டால் இரண்டு மூன்று மாதத்தில முழுக்கடனும் தீர்த்துப் போடலாம். மகளின்ர பிறந்தநாள் ஒரு காலமும் நாங்கள் பெரிசாச் செய்யேல்ல. இந்த முறை நீங்களும் காசு அனுப்பியிருக்கிறீங்கள். அதனால் வீடியோ எல்லாம் பிடிச்சு வடிவாச் செய்திருக்கிறன். காணி ஈடு வைச்ச காசை வாற மாதம் நீங்கள் அனுப்ப நான் கட்டிப்போடுவன். அண்ணி இருபத்தையாயிரம் ரூபா வாங்கினவ. ஒரு மாதத்தில தாறன் எண்டு சொன்னவ. குடுத்திருக்கிறன். எனக்கும் பிள்ளையளுக்கும் உடுப்பு எடுத்தனான்.

மோகனைத் தொடரவிடாமல் இடைமறித்தான் கண்ணன். "நாங்கள் கஷ்டப்படேக்க ஒருத்தரும் திரும்பியும் பார்க்கேல்ல. சகுந்தலாவின்ர அண்ணை நல்ல வசதியாயிருந்தவர். ஆனால் எங்களுக்கு ஒரு உதவியும் செய்யேல்ல. நான் காணி ஈடு வச்சுத்தான் சவுதிக்கு வந்தனான். இப்ப அவைக்கு காசு குடுத்திருக்கிறாளடா" ஆதங்கத்தில் குரலடைக்கக் கூறினான் கண்ணன்.

"எனக்கு மூன்று பிள்ளையள். அதோடை என்ரை அம்மா, இரண்டு தங்கச்சியையும் நான்தான் பராமரிக்கவேணும். இரண்டு பேருக்கும் நல்ல இடத்தில திருமணம் செய்து குடுக்கவேணும். இதையெல்லாம் யோசிச்சுத் தானடா நான் காணியை ஈடு வைச்சு இங்கை வந்தனான். இங்க நினைச்சு வந்த வேலையுமில்லை, சம்பளமும் குறைவு. ஊருக்கும் திரும்பி போகேலாதெண்டுதான் உங்கள் எல்லோரதும் ஒவ்வொரு மாதச் சம்பளத்தையும் சேர்த்து அனுப்பிக் கடனைத் தீர்க்கலாம் எண்டு நினைக்க இதென்னடா புதுக்குழப்பம்..." விரக்தியாகக் கூறினான் கண்ணன்.

"கண்ணா நீ உன்ரை வீட்டுக்காரர் ஒருத்தருக்கும் மாதம் எவ்வளவு சம்பளம் எடுக்கிறம் என்பதை சொல்லேல்லையோ?" நண்பனிடம் கவலையோடு கேட்டான் பாஸ்கர்.

"நான் எவ்வளவு சம்பளம் எண்டு சொல்லேல்ல; ஆனா சம்பளம் சரியான குறைவு. நாங்கள் நினைச்சு வந்த வேலையும் இல்லை. சம்பளமும் இல்லை எண்டு தான் சொன்னனான்" நண்பர்களுக்குத் தன் நிலையை விளக்கினான் கண்ணன்.

"அதுதான் கண்ணன் வந்த பிழை. நீ குறையச் சம்பளம் எண்டு சொன்னனியே தவிர இலங்கைக் காசு நாலாயிரம் ரூபாதான் மாதச்சம்பளம் எண்டு சொல்லியிருக்கவேணும். ஆனால் நீ உண்மையைச் சொல்லாததால தான் இவ்வளவு பிரச்சினையும்..." மோகன் கூறியதை பாஸ்கரும் ஆமோதித்தான்.

"டேய்! நாங்கள் எல்லோரும் எங்களின்ர நிலையை வீட்டுக்குத் தெரியப்படுத்தவேணும். அப்பிடித் தெரியப்படுத்தாமல் இருந்தால் எங்களுக்கும் வீடியோக் கசட்டும், பலகாரப் பார்சலும் தான்ரா வரும்" காந்தன் நகைச்சுவையாகக் கூறியதைக் கேட்டு அங்கே நிலவிய இறுக்கம் சிறிது தளர்ந்தது.

"நாங்கள் எல்லோரும் சேர்ந்து எடுத்த முடிவை எங்களின்ர வீட்டுக்குச் சொல்லவேணும். எங்களின்ர சம்பளம் குறைவு. அதனால் நாங்கள் எல்லோருமாகச் சேர்ந்து ஒவ்வொரு மாதமும் ஒவ்வொருத்தருடைய கடனை அடைக்க சம்பளத்தைச் சேர்த்து அனுப்பிறம்; இந்தக் காசைக் கடன் தீர்க்க மட்டும் பயன்படுத்துங்கோ எண்டு சொல்லவேணுமடா..." தயாளன் உறுதியாகக் கூறினான்.

"நான் சகுந்தலாவுக்கும், எடுத்துச் சொல்லப்போறன். நாங்கள் எல்லோரும் சேர்ந்து எங்கள் ஒவ்வொருத்தருடைய மாதச் சம்பளத்திலேயும் ஒரு தொகையைச் சேர்த்துத்தான் உங்க கடன் கட்ட காசு அனுப்பினனான். இனி இப்போதைக்கு காசு அனுப்பமுடியாது. ஆறு மாதத்துக்குப் பின்னர்தான் சம்பளம் அனுப்புவன் எண்டு சொல்லப்போறன்..." கண்ணன் திடமாகக் கூறினான்.

"நாங்கள் உழைக்கிற காசை முழுவதும் ஊருக்கு அனுப்பக் கூடாது. அதிலை ஒரு தொகையை இங்க வைச்சுக் கொண்டு மிகுதியைத்தான் அனுப்பவேணும். எங்களின்ர குடும்பத்துக்கெல்லாம் நாங்கள் இங்க படுகிற கஷ்டம் எங்க தெரியப்போகுது. அவையள், நாங்கள் அனுப்பிற காசை செலவழிச்சுப்போட்டு கணக்கை எழுதி வைச்சுக்காட்டுவினம்..." தயாளன் யதார்த்தத்தைக் கூறினான்.

வேறு வேறு இடங்களைச் சேர்ந்தவர்களானாலும் ஒத்த இயல்பும் புரிந்துணர்வும் நிறைந்த நண்பர்கள் தனக்கு கிடைத்ததையிட்டு மனம் மகிழ்ந்தான் கண்ணன்.

குடும்பச் சுமையோ எதிர்காலம் பற்றிய பயமோ அவனுக்கு இல்லை. எதனையும் எதிர்கொள்ளும் மனோபலமும், எத்தகைய சோதனை வந்தாலும் அதனை எதிர்கொண்டு அந்தப் பிரச்சினைகளை யெல்லாம் தீர்ப்பேன் என்ற உறுதி அவன் மனதிற்குப் புதிய பலத்தைத் தந்தது.

எதிர்காலத்தின் பயமில்லாது அமைதியான மனநிலையுடன் அவனது கண்கள் உறக்கத்தை நாடின. ஆனால் தன் மனைவி தன் அண்ணிக்குப் பணம் கொடுத்த சம்பவத்தை நினைத்தவுடன் தூக்கம் பறந்துவிட்டது.

சகுந்தலாவின் அண்ணன் விவேகானந்தன். ஆஸ்திரேலியாவிலிருந்து வந்திருந்த நேரம். கண்ணனுடைய தங்கை சியாமளாவுக்குத் திருமணம் நிச்சயமாகியிருந்தது. சீதனப் பணத்திற்கு ஐம்பதாயிரம் ரூபா அவசரமாகத் தேவைப்பட்டது. எனவே தன் மனைவியிடம் "சகுந்தலா உன் அண்ணாவிடம் ஒரு ஐம்பதாயிரம் ரூபா வாங்கித்தா; எப்பிடியும் தம்பி ஒரு கிழமைக்கிடையில் காசு அனுப்புவான். நான் அதை எடுத்துத் தாறன். விஷயத்தை அண்ணனிடம் சொல்லிக் கேட்டுப்பார். தங்கச்சியின் கலியாண விஷயம்; அவர் கட்டாயம் உதவி செய்வார்..." எவ்வளவு நம்பிக்கையுடன் சகுந்தலாவை விவேகானந்தன் வீட்டிற்கு அனுப்பினான்.

தம்பியின் பணம் உரிய நேரத்திற்கு வந்து சேராததோடு அவன் விபத்தில் உயிரிழந்த அவலச் செய்தியும் தங்கையின் திருமணம் நின்றுபோனதும் கண்ணனின் நெஞ்சில் அனலை அள்ளிக்கொட்டியது. இந்தத் துயரங்களிலிருந்து விடுபடவும் குடும்பச் சுமையைக் குறைக்கவுமே அவன் தான் குடியிருக்கும் காணியையும் தோட்டக் காணியையும் ஈடு வைத்து சவுதிக்கு வந்தான்.

விவேகானந்தன் குடும்பத்துடன் எந்தவித உறவும் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதில் உறுதியாக இருந்ததோடு, சகுந்தலாவையும் அவர்களுடன் உறவாட அவன் அனுமதிக்கவில்லை. தாங்கள் துன்பத்தில் இருந்தபோதும், கஷ்டப்படும்போதும் உதவி செய்யாதது மட்டுமல்ல தன் தங்கையின் வாழ்க்கை சிதைவடையவும் காரணமாக

இருந்தவர்கள் என்ற எண்ணம் மனதில் ஆழப்பதிந்திருந்தமையால் விவேகானந்தன் குடும்பத்தவரை வெறுத்தொதுக்கினான் கண்ணன்.

தான் வீட்டிற்கு கடனடைக்க அனுப்பிய காசில் விவேகானந்தனின் மனைவிக்கு உதவி செய்த சகுந்தலா மீது மிகுந்த கோபமும் தம்மிடம் வசதிகள் வந்ததும் ஒட்டி உறவாட வரும் விவேகானந்தனின் மனைவியின் இயல்பும் கண்ணனுக்கு வெறுப்பையும் கோபத்தையும் ஏற்படுத்தின. நிறம் மாறும் மனிதர்களின் இயல்புகளிலிருந்து முற்றிலும் மாறுபாடான தன் நண்பர்களின் உயர்ந்த உள்ளத்தை உணர்ந்து கொண்டவன் அந்த நிம்மதியில் எதிர்கால நம்பிக்கையுடன் உறக்கத்தை நாடினான். கட்டிலில் கிடந்த பார்சல் அவனைப் பார்த்துச் சிரித்தது.●

# ஏமாற்றம்

"சரசு! உரல், உலக்கை எல்லாம் மறந்திடாம 'ட்றக்ரர்' பெட்டிக்க போட்டனியா பிள்ளை...?" வாசலில் பொல்லை ஊன்றிக்கொண்டு நின்று சாமான்கள் ஏற்றுவதை மேற்பார்வை செய்துகொண்டிருந்த முத்தாச்சி, உரத்த தொனியில் மகளைப் பார்த்துக் கேட்டாள்.

"எல்லாம் போட்டாச்சு. கொஞ்ச நேரம் வாயை மூடிக்கொண்டு சும்மா இரணை..." சலிப்படைந்த குரலில் கூறினாள் சரசு.

"ஏதோ வெளிநாட்டுக்குப் பயணப்படுகிற மாதிரி ஆர்ப்பாட்டம் போட்டுக் கொண்டிருக்கிறா..." முணுமுணுத்தவாறு வீட்டை மறுபடியும் ஒரு தடவை சுற்றிப் பார்த்தவள்; தட்டுமுட்டுச் சாமான்கள் எல்லாம் எடுக்கப்பட்டு, வீடு வெறிச்சோடியிருப்பதைப் பார்த்தவளுக்குத் தாங்க முடியவில்லை, வாயில் சேலையைப் பொத்தி 'ஓ' எனப் பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள்.

ட்றக்ரரில் சாமான்களை ஒழுங்குபடுத்தி அடுக்கிக்கொண்டிருந்த சின்னையாவும், மகன் மணியமும் சரசுவின் அழுகுரலைக் கேட்டு வீட்டிற்குள் ஓடிவந்தனர்.

வெறிச்சோடியிருந்தது வீடு. குசினியின் வாசலிலே குந்தியிருந்து தாங்கமுடியாத வேதனையோடு வாய்விட்டுக் கதறி அழும் சரசுவின் நிலையைப் பார்த்ததும் பேச நாவெழாது செயலற்று நின்றனர் இருவரும்.

கணவனையும், மகனையும்கண்டவள் "ஐயோ! பாவியள்நல்லாயிருப் பாங்களா? ஏழையளை நம்ப வச்சு மோசம் செய்திட்டாங்களே!

பணக்காரப் புத்தியை காட்டிப் போட்டாங்களே! இப்ப என்ர பிள்ளை குட்டியோட எங்க போய் ஆறுவம்? ஏமாந்திட்டமே..." ஓலமிடும் சரசுவைச் சின்னையா சமாதானப்படுத்தினான்.

"சரசு, என்ன செய்யிறது? நாங்கள் இப்படியெல்லாம் நடக்குமெண்டு எதிர்பார்த்தனாங்களே? எங்களின்ர கஷ்டகாலம். ஐயாவுக்கும் இப்படி நடந்துபோச்சு".

"அவங்களின்ர காணி; எழும்பச் சொன்னா எழும்பத்தானே வேணும். அழாத எழும்பு. கண்ணைத் துடைச்சுப்போட்டு வெளிக்கிடு..." மனைவியின் கைகளைப் பற்றித்தூக்கினான் சின்னையா.

"அம்மா எழும்பணை...நாங்கள் இருக்கிறம் நீ கவலைப் படாதையணை... கொட்டில்ல இருந்தாலும் எங்கையாவது போய் நிம்மதியாயிருப்பம்..." மணியம் தாயின் நிலையறிந்து ஆதரவாகக் கூறினான்.

"சாமான்களையெல்லாம் 'ட்றக்ரர்' பெட்டியில ஏத்தியாச்சு... வெயிலுக்கு முன்னம் போனால்தான் நல்லது. பிள்ளையளை வெய்யிலுக்க கொண்டு போகேலாது. அவங்கள் காணிக்குள்ள இறங்கிறதுக்கு முந்தி நாங்கள் போயிட வேணும்..." கூறிய சின்னையாவுடன் சரசுவும், மணியமும் இணைந்துகொண்டனர்.

வீட்டிற்கு வெளியிலே அயலவர்கள் திரண்டிருந்தனர். சின்னையாவினுடைய தந்தை இரத்தினத்தின் காலம் தொடக்கம் அந்தக் காணியிலதான் அவர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். சின்னையா பிறந்ததும் இதே இடத்திலதான். அயலவர்களுடன் அன்பாகப் பழகுவதிலும் அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதிலும் சின்னையாவின் குடும்பத்தவர்கள் பின்னிற்பதில்லை.

சரசு, தன் அயல் வீட்டுக்காரர்களைக் கண்டதும் விம்மி அழத்தொடங்கினாள். இராசாத்தி, செல்லம், கனகம்மா எல்லோரும் அவளின் கரங்களை இறுகப்பற்றினர். அவர்களாலும் அவளது குடும்பத்தவர்கள் பிரிந்து செல்வதைத் தாங்கமுடியவில்லை. "சரசு, விதானையார் உயிரோடை இருந்தா உங்களுக்கு இந்த நிலை வந்திராது. என்ன செய்யிறது? உங்களின்ர கஷ்டகாலம். சீமான் போய்ச் சேந்திட்டார்... இப்ப நீங்கள் எங்க இருந்தாலும் நாங்களெல்லாம் வந்து பாப்பம்தானே..." இராசாத்தி சரசுவின் கரங்களைப்பற்றிக் கூறினாள். அவளின் கண்களும் கலங்கியிருந்தன.

சின்னையாவின் பிள்ளைகளான மணியம், மலர் வெண்ணிலா, துரை ஆகியோரும் தமது நண்பர்களிடம் கூறிவிட்டு வாகனத்தில் ஏறினர்... எல்லோரது மனங்களும் கனத்திருந்தன.

இதுவரையில் திடமான மனத்துடன் இருந்த முத்தாச்சி "பிள்ளையள், நாங்கள் போட்டுவாறம். என்ரை சாவீட்டுக்கு எல்லோரும் வந்திடுங்கோ..." கூறியவள். தாங்கமுடியாது பெருங்குரலெடுத்து அழ ஆரம்பித்தாள்.

இதுவரை பொறுமையோடிருந்த சின்னையா 'ட்றக்ரர் றைவர்' ரிடம் "தம்பி மெசினை எடும் வெய்யிலுக்கு முன்னம் நாங்கள் வளலாய்க்குப் போயிடவேணும்..." 'ட்றக்ரர்' மெதுவாகப் புறப்பட்டது.

ஒரு கணம் தன் வீட்டையும், காணியையும் பார்த்த சின்னையாவின் கண்களில் நீர் திரையிட்டது. தோளிலிருந்த துவாயால் கண்களைத் துடைத்துக்கொண்டவர். வாகனத்திலேறிப் பிள்ளைகளுடன் அமர்ந்துகொண்டார்.

சின்னையாவின் தந்தை இரத்தினம்; விதானையார் மாசிலாமணியின் தந்தையான பரஞ்சோதி வாத்தியாரின் தோட்டத்தில் வேலை செய்தவர். தனது நம்பிக்கைக்குரிய தொழிலாளியான இரத்தினத்திற்குத் திருமணத்தை நடாத்தி, அவனது குடும்பத்தைத் தன் காணியிலே குடியமர்த்திவிட்டார் பரஞ்சோதி வாத்தியார். இரத்தினமும், அவன் மனைவி பூரணமும் தமது முதலாளியின் தோட்டத்தில் அயராது பாடுபட்டனர். அவர்களுக்குச் சின்னையா மகனாகப் பிறந்ததும், அவர்கள் இருந்த சிறிய குடிசையைக் கொஞ்சம் பெருப்பித்துக் கொடுத்தார் பரஞ்சோதி.

சின்னையாவிற்குப் பின்னர் தவம், கணேசு, சோதி ஆகியோர் பிறந்ததும் இரத்தினத்தின் குடும்பச் சுமையும் அதிகரித்தது. பரஞ்சோதி வாத்தியாரின் ஒரே மகன் மாசிலாமணி விதானையாகியவுடன் தந்தை பரஞ்சோதி மரணமடையும்போது இரத்தினத்தின் குடும்பத்திற்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டபடியே தன்னாலான உதவியைச் செய்தார்.

இரத்தினமும், அவர் மனைவியும் இறந்துவிடவே, மாசிலாமணியின் தோட்டத்தைப் பராமரிக்கின்ற பொறுப்பை ஏற்றுக்கொண்ட சின்னையா தன் சகோதரர்கள் இருவருக்கும் திருமணம் செய்து

கொடுத்தார். அவர்கள் மனைவியர்களின் இடத்திற்குச் சென்றுவிடவே தன் சகோதரி சோதியையும் வளலாயில் திருமணம் செய்து கொடுத்தார்.

தன் சகோதரிமீது பாசமுடையவர். ஆதலால் சோதி தன் அண்ணனையும் தன்னுடன் வந்து தங்கும்படி கேட்டும் சின்னையா சம்மதிக்கவில்லை. மாசிலாமணியின் தோட்டத்தையும், அங்கு தன் தந்தை கட்டிய வீட்டையும் விட்டு வருவதற்கு அவர் விரும்பவில்லை.

சின்னையாவின் முறைப்பெண்ணான சரசுவிற்குத் தானே முன்னின்று திருமணத்தையும் நடாத்திமுடித்த விதானையார், அவளின் தாய் முத்தாச்சியையும் இரத்தினம் கட்டிய அந்த வீட்டிலே குடியமர்த்திவிட்டார்.

சின்னையாவிடம் "சின்னையா; இந்த வீட்டில நீ இருந்து, இந்தத் தோட்டத்தையும் இதுகளையெல்லாம் பராமரி, உனக்கு ஒரு இரண்டு பரப்புக் காணியெண்டாலும் நான் எழுதித்தருவன்..."

"என்ன ஐயா, எனக்கு உங்களின்ர குணம் தெரியாதே? நான் உங்களை விட்டிட்டு ஒரு இடமும் போகமாட்டன்..." சின்னையா உணர்ச்சி வசப்பட்டுக் கூறுவார்.

விதானையாரின் ஒரே மகளான சுகந்தி விடுதியில் தங்கிப் படிப்பதனால் அவளுக்குத் தான் இருக்கிற சூழல் அவ்வளவாகப் பிடிப்பதில்லை. மகன் கோபியையும், சுகந்தியையும் மேற்படிப்பிற்காக லண்டனுக்கு அனுப்பிவிட்டார் மாசிலாமணி.

சின்னையாவின் பிள்ளைகளான மலர், மணியம், வெண்ணிலா, துரை ஆகியோர் விதானையார் வீட்டிற்குச் சென்றாலும் கோபிக்கும், சுகந்திக்கும் அவர்களைப் பிடிக்காது.

படிக்கிற காலங்களில் விடுமுறையில் வீட்டிலே அவர்கள் நிற்கும்போது மலரும், மணியமும் விளாம்பழம், மாம்பழம் ஆகியவற்றைக் கொண்டு சென்று கொடுத்தாலும்; சுகந்தி "சீ எதற்கு இந்தப் பழங்களைக் கொண்டு வந்தாய்? எனக்கு இதெல்லாம் பிடிக்காது..." எனக் கூறி மலரின் கண் முன்னேயே அதனை வீசி எறிவாள்.

விதானையார் மலரின் முகம் வாடுவதைத் தாங்கமுடியாது "மலர் சுகந்திக்கு விளாம்பழம் எப்போதுமே பிடிக்காது. அதுதான் அவ திருப்பி எறிஞ்சிருக்கிறா... நீ அதை எடுத்துக்கொண்டு வா எனக்கு விளாம்பழம் எண்டா நல்ல விருப்பம்..."

அவளின் மனம் வாடிவிடக்கூடாது என்பதற்காகக் கூறும் விதானையார்; மலர் சென்றவுடன் மகளைக் கண்டிப்பது வழக்கம். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் மனைவியும், மகன் கோபியும் சுகந்திக்குச் சார்பாகக் கதைப்பார்கள்.

தன் பிள்ளைகள் இருவரும் ஏழைகளான சின்னையாவின் குடும்பத்தவர்களை வெறுப்பதற்குக் காரணம் தன் மனைவி வாசுகியே என்பதைப் புரிந்துகொண்ட விதானையார் "வாசுகி எங்களின்ர அப்பாவின்ர காலம் தொடக்கம் சின்னையாவின்ர குடும்பம் எங்களுக்காக மாடா உழைக்குதுகள். அவன்ர பிள்ளையள்கூட நல்ல பண்பான பிள்ளையள். நாங்கள் குடுக்கிறதைத்தான் வாங்குங்கள். இவ்வளவு விசுவாசமுள்ள அந்தக் குடும்பத்தின்ர அருமை உங்களுக்கு விளங்கேல்ல..."

கணவன் கூறுவது சரிபோல இருந்தாலும் சின்னையாவின் குடும்பத்தவர்களை அவர் உயர்வாகப் பேசுவதைப் பொறுக்கமுடியாது, "சரி... சரி... சின்னையா வீட்டுப் பெருமை பாடியது போதும். போய் உங்களின்ர வேலையைப் பாருங்கோ..." அவருக்கு முகத்திலடித்ததுபோல் பேசி விடுவாள் வாசுகி.

பிள்ளைகள் இருவரும் மேற்படிப்பிற்கென்று லண்டன் சென்றவர்கள் அங்கே தொழில் வாய்ப்புப்பெற்று அங்கேயே செற்றிலாகிவிட்டார்கள். மகன் கோபி தன்னுடன் வேலை பார்க்கும் பெண்ணை விரும்புவதாகத் தாயிடம் கூறியதைக் கேட்ட விதானையார் மகனை ஊருக்கு வரும்படி கேட்க, "அப்பா எங்களின்ர கலியாண வீட்டை இங்கு நடத்த ரூபியின் அப்பா, அம்மா விரும்பினம். அவை குடும்பமா இங்கதான் இருக்கினம். நீங்களும், அம்மாவும் இங்க வரலாம்தானே...?" அவன் பேசி முடிவதற்குமுன் ரெலிபோனைத் துண்டித்துவிட்டார் விதானையார்.

அதன் பின் மகன் கோபியுடன் அவர் கதைப்பதை விட்டுவிட்டார். வாசுகி மட்டும் அடிக்கடி மகனுடன் கதைத்துக் கொள்வாள். மகள் சுகந்தி பெற்றோரின் விருப்பப்படியே ஊருக்கு வந்ததால் அவளுடைய திருமணத்தை ஊரே வியக்கும் வண்ணம் விமரிசையாக நடாத்தினார் விதானையார்.

திருமண வேலைகளில் விதானையாருடன் பக்கபலமாக நின்று செயற்பட்டவர்கள் சின்னையா குடும்பத்தவர்கள்தான்.

சரசுவும், மகள் மலரும் வீட்டுவேலைகள் அனைத்தையும் செய்தனர். விதானையார் மனைவி வாசுகியும், மகள் சுகந்தியும் அவர்களை வருத்தி வேலைவாங்கினர்.

திருமணத்திற்கு ஆடைகள் வாங்கும்போது விதானையார், சின்னையாவின் குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எடுக்கவேண்டும் எனக் கூறிவிட்டார். சரசுவிற்குத் தான் உடுத்த சேலை ஒன்றைக் கொடுப்பதாகக் கூறிய வாசுகியின் வாயையும் அடக்கிவிட்டார் விதானையார்.

திருமணம் முடிந்த மறுவாரமே சுகந்தியும் அவள் கணவரும் லண்டனுக்குப் புறப்பட்டுவிட்டனர்.

அடிக்கடி தனக்கு நோயென்று சாட்டுக் கூறிப் படுத்துவிடும் வாசுகி "சரசு ஒருக்கா மலரை இங்க அனுப்பிவிடு. எனக்கு ஏலாமல் இருக்கு. வீட்டுவேலைக்கு அவள் வந்தா கொஞ்சம் உதவியாயிருக்கும்..." வாசுகி வருத்தமென்று நடிக்கின்றாள் என்பது சரசுவிற்குப் புரிந்தாலும் "சரி அம்மா, நான் மலரை அனுப்பிவிடுகிறன்....." எனக் கூறிவிட்டுச் செல்வாள்.

சின்னையாவின் பிள்ளைகளான மணியத்திற்கும், வெண்ணிலா விற்கும்; தங்கள் தாயும், சகோதரி மலரும் அடிமைகள் போல விதானையார் வீட்டிலே வேலைசெய்வது பிடிக்காது. ஒருமுறை வெண்ணிலா "அப்பா அக்காவை வாசுகி அம்மா வீட்டிற்கு வேலை செய்யவிடாதேங்கோ. அவ அக்காவைக் கொண்டு எல்லா வேலையும் செய்விக்கிறா. நீங்களும் அம்மாவும் வேணுமெண்டா வேலை செய்யுங்கோ..." எனக் கோபத்தோடு கூறினாள்.

சின்னையாவும் அவளின் தலையை அன்போடு தடவியவனாக "வெண்ணிலா, விதானையாற்ற அம்மாவுக்கு உண்மையாகச் சுகமில்லாமல் இருக்கும். அவைக்கும் எங்களை விட்டா வேற யாருடைய உதவியிருக்கு? நாங்கள் காலாகாலமா அவையளை நம்பித்தானே இருக்கிறம். ஐயாவுக்காக நாங்கள் பொறுமையோட இருக்கவேணும் அம்மா..."

இதன் பின்னர் வெண்ணிலா இது சம்பந்தமாகப் பேசுவதை நிறுத்திவிட்டாள். பேசினாலும் பயனில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

வெளிநாடு சென்ற சுகந்தி கர்ப்பமுற்றிருக்கின்றாள் என்ற செய்தியை அறிந்து விதானையார் குடும்பம் மகிழ்ச்சியடைந்ததுபோலவே, சின்னையா குடும்பமும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தது.

மகளுக்கு விருப்பமான பொருட்களைச் சரசுவையும், மலரையும் கொண்டு செய்வித்து அனுப்பிவைப்பாள் வாசுகி.

பிரசவத்திற்குத் தாயை வரும்படி சுகந்தி கூறவே, வாசுகியும் லண்டன் பயணமானாள்.

தந்தையையும் தம்முடன் வந்துவிடுமாறு பலமுறை கேட்டும் விதானையார் தான் பிறந்து வளர்ந்த மண்ணைவிட்டு வரமுடியாது என மறுத்துவிட்டார்.

சுகந்தியும் “அப்பா நீங்கள் உங்க இருக்கிற காணி, வீடு வளவு எல்லாத்தையும் வித்துப்போட்டு இங்க வாங்கோ... நானும் வேலைக்குப் போறதெண்டதால பிள்ளையைப் பார்க்க அம்மா இங்க இருக்கவேணும்...” கூறியவள் தந்தை பதிலளிக்காமல் இருக்கவே ரெலிபோனைக் கட் பண்ணினாள்.

விதானையாரையும், வீட்டையும், காணிகளையும் பராமரிக்கின்ற பொறுப்பு சின்னையாவின் குடும்பத்தவரின் தலையில் விழுந்தது.

ஒரு நாள் தோட்டத்தில் வேலைகள் நடைப்பதைப் பார்த்துக்கொண்டு நின்ற விதானையார் திடீரென மயக்கமடைந்து விழுந்துவிட்டார். இதைக்கண்டு பரபரப்புடன் ஓடிவந்த சின்னையா தண்ணீரை அவர் முகத்தில் தெளித்து “ஐயா...ஐயா... என்ன செய்யுது, எழும்புங்கோ! கண்ணைத்திறந்து பாருங்கோ...!” எனப் பதட்டத்துடன் கூறினான்.

விதானையார் கண்கள் திறக்காமல் இருக்கவே “மணியம் ஓடிபோய் ஒரு ஓட்டோ பிடிச்சுக்கொண்டுவா. ஐயாவை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவேணும்...” அவன் சொல்வதற்கிடையில் சைக்கிளை எடுத்துக்கொண்டு ஓட்டோ பிடிப்பதற்கு விரைந்தான் மணியம்.

மருத்துவமனையில் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட விதானையாரைக் கண்ணுங்கருத்துமாகப் பார்த்தனர் சின்னையாவும் மணியமும். லண்டனில் உள்ள வாசுகிக்கும், சுகந்திக்கும் செய்தி அறிவிக்கப்பட்டது. சின்னையாவிடம் “சின்னையா ஐயாவைக் கவனமாகப் பார். நான் விரைவாய் உங்க வந்திடுவன். அடிக்கடி எடுத்து ஐயாவின்ர நிலமையைச் சொல்லு...” பதட்டமாகக் கூறினாள் வாசுகி.

“அம்மா நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ. நாங்கள் ஐயாவைக் கவனமாய்ப் பாப்பம்...” கூறியவன் உணர்ச்சி மிகுதியாய் டெலிபோனைக் கட் பண்ணினான்.

இரண்டு நாட்களின்பின் கண்விழித்த விதானையார் கண்களிற் சின்னையாவின் ஆவல் நிறைந்த முகமே தென்பட்டது. அவனை நன்றியுடன் பார்த்துப் புன்னகைத்தவர் அருகில் வரும்படி அழைத்தார்.

கண்களில் மல்கிய கண்ணீருடன் அருகில் வந்தவன், “ஐயா எங்களை நல்லாப் பயப்பிடித்துப் போட்டியள். அந்த முருகன்தான் உங்களைக் காப்பாற்றியிருக்கிறான்...” தழுதழுத்த குரலிற் கூறிய சின்னையாவை அணைப்பதற்கு கைகளைத் தூக்கியவரின் வலது கை அசைக்க முடியாதிருந்தது.

கால்களை அசைக்க முயன்றார், வலதுகாலும் செயலிழந்திருந்தது.

“சின்னையா, என்னடா நடந்தது என்ர காலுக்கும் கையுக்கும்? அசைக்கமுடியேல்லயடா. இயங்கேலாமல் போச்சுதா...? என்னண்டு சொல்லுங்கோ...?” பேசமுடியாது விம்மினார் விதானையார்.

“ஐயா இப்ப நீங்கள் அமைதியாய் ஓய்வெடுங்கோ. எல்லாம் சுகமாகிவிடும். நாங்கள் கையெடுக்கிற முருகன் உங்களைக் கைவிட மாட்டார்.

நன்றியுடன் அவனைப் பார்த்தவரின் கண்களில் நீர் திரையிட்டது.

நான்கு நாட்களாக விதானையாரைத் தன் பெற்ற தந்தைபோலப் பராமரித்தான் சின்னையா. அவனின் மகன் மணியமும் அவனும் மாறி மாறி வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் என்று அலைந்தனர். ஐந்தாவது நாள் வீட்டிற்கு விதானையாரை அழைத்துவந்தனர்.

வீட்டிற் படுத்தபடுக்கையாகக் கால் கை வழங்காது படுத்திருக்கும் விதானையாருக்குத் தேவையான பணிவிடைகளை சின்னையாவின் குடும்பத்தவர்கள் மனங்கோணாது செய்தனர்.

விதானையாரின் உடல் நிலை பற்றி அடிக்கடி எடுத்து விசாரிக்கும் வாசுகி விரைவில் வருவதாகக் கூறினாள்.

சின்னையாவைத் தன் அருகில் இருக்கும்படி கூறிய விதானையார் ஒரு கையால் ரெலிபோனை வாங்கிக் காதிற் பொருத்தியவண்ணம் “வாசுகி, எனக்கு ஒரு காலும், கையும் வழங்காமல் போச்சு. எனக்குப் பெத்த பிள்ளையள் செய்யிற உதவியிலும் பார்க்க, கூட

உதவியாயிருக்கிற சின்னையாவின்ர குடும்பத்துக்கு நாங்கள் நன்றிக்கடன் செலுத்தவேணும்..." மறுமுனையில் வாசுகி எதுவும் பேசாதிருக்கவே

"வாசுகி நீ உடனே புறப்பட்டுவா! அதுகளுக்கு நாங்கள் தாற எண்டு சொன்ன இரண்டு பரப்புக் காணியை எழுதிக் குடுக்கவேணும். எனக்கு ஏதாவது நடந்தா அந்தக் குடும்பம் அலைஞ்சு போடும்..."

தழுதழுத்த குரலில் மனைவியிடம் கெஞ்சினார் விதானையார். மறுமுனையில் வாசுகி ஏதோ மறுத்துக் கூறியிருக்கவேண்டும்.

"எடி பாவி! நன்றி கெட்ட நீயும் உன்ரை பிள்ளையளும் அழியப்போறீங்கள்..." எனக் கூறியவர் ஒரு கையால் நெஞ்சை இறுகப் பற்றியவண்ணம் கட்டிலிற் சாய்ந்தார்.

அவரின் அருகிலே நெருங்கிய சின்னையா அவரின் கைகளைத் தொட்டு "ஐயா ... ஐயா... கண்ணை முழிச்சுப் பாருங்கோ..."

பதட்டத்துடன் அவரை எழுப்பினான். பேச்சிழந்தவராக உணர்வற்றுக் கிடந்த விதானையாரின் மூக்கருகே குனிந்து பார்த்தவன் அச்சத்தோடு வெளியிலே ஓடிவந்து "சரசு ... சரசு... மணியத்தையும் கூட்டிக்கொண்டு ஒருக்கா ஓடி வா..." அவனது பதட்டமான தொனியைக் கேட்டவள் தனது வேலையை அப்படியே விட்டுவிட்டு "மணியம்! அப்பா ஐயா வீட்டில நிண்டு கூப்பிடுகிறார்; ஓடி வா..."

என்று பரபரப்பாகக் கூறியவண்ணம் விதானையாரின் வீட்டை அடைந்தாள்.

அங்கே கண்ட காட்சி அவளை நிலைகுலைய வைத்தது. கட்டிலிலே செயலற்றுக்கிடந்த விதானையாரின் உடலை அசைத்து அசைத்து "ஐயா, ஐயா; கண்களைத் திறந்து பாருங்கோ" எனச் சின்னையா அரற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு திகைத்தவள், விரைந்துசென்று அவரின் உடலைத் தொட்டுப் பார்த்தாள். அது குளிர்ந்து போயிருந்தது.

விதானையாரின் உயிர் பிரிந்துவிட்டதை உணர்ந்து கொண்டவள், கணவரிடமும் அங்கேவந்த மணியத்திடமும் விஷயத்தைக் கூறினாள்.

அடுத்து நடைபெறவேண்டிய காரியங்களிற் சின்னையா துரிதமாக ஈடுபட்டான். வாசுகிக்கும், பிள்ளைகளுக்கும் விதானையார் இறந்த செய்தியைத் தெரிவித்தான். வாசுகியும், பிள்ளைகளும் வருவதாகக் கூறினார்கள்.

அதற்கான ஏற்பாடுகளையும் செய்து அவர்கள் வரும்வரை மூன்று நாட்களுக்கு அவர் உடம்பை வைத்திருக்கக்கூடிய ஒழுங்குகளை அயலவர்களின் உதவியுடன் சின்னையா செய்து முடித்தான்.

தனக்குக் காணி எழுதவேண்டும் என்ற பிடிவாதத்தாலே தான் விதானையாரின் உயிர் போனது என்பதும்; வாசுகி அதற்கு மறுப்புத் தெரிவித்தமையே அவருக்குத் தாங்கமுடியாது மார்புவலி வரக் காரணமாய் அமைந்தது என்பதும் அவனைப் பெரிதும் வருத்தியது. அவனைத் திக்குமுக்காடச் செய்தது.

தங்களை அன்போடு ஆதரித்த விதானையாரை இழந்ததுடன் இதுவரை தாங்கள் வாழ்ந்த வீடு, காணியை விட்டு வெளியேற வேண்டியநிலை ஏற்படப் போகின்றது என்பதைப் புரிந்து கொண்டவன், தனது மனைவி பிள்ளைகளை அழைத்து விடயத்தைக் கூறினான்.

விதானையார் தனது மனைவி வாசுகியிடம் கூறிய விடயத்தையும் அதன் பின்னர் நடந்த சம்பவத்தையும் கூறினான்.

“ஐயோ என்ன சொல்லுறீங்கள் எங்களுக்குக் காணி தரமாட்டினமோ? நாங்கள் பிள்ளையளையும் கொண்டு எங்க போறது...?” தலையிலே கைவைத்து அரற்றத் தொடங்கினாள் சரசு.

வெளிநாட்டிலிருந்து விதானையாரின் மனைவியும் பிள்ளைகளும் வந்துவிட்டனர். மகன் கோபியும், மகள் சுகந்தியும் கதறிக் கதறி அழுதனர். வாசுகி கணவனது உடலைக் கண்டவுடன் மயங்கிச் சாய்ந்துவிட்டாள்.

சின்னையாவிற்குத் தான் கணவருடன் கதைத்த விடயம் தெரியாதென்று எண்ணியவள்; சின்னையாவின் குடும்பத்தவர்களிடம் முன்பு எவ்வாறு வேலை வாங்கினாளோ, அதேபோல் அதட்டி வேலை வாங்கினாள்.

விதானையாரின் உடல் தகனம் செய்யும்வரை அவர்களுக்கு உதவியாகவிருந்த சின்னையா; தனது பிள்ளைகளுடன் வீட்டிற்கு வந்துவிட்டான்.

மறுநாள், அவனது வீடு தேடி அவர்களுடைய ஊர்ப் புதிய விதானையும், விதானையாரின் மகன் கோபியும், ஊரிலுள்ள சில பெரியவர்களும் வந்தனர்.

சின்னையாவிடம், விதானையாரின் மகன் கோபி "சின்னையா இவ்வளவு காலமும் இந்தக் காணியில இருந்தனீங்கள்; அப்பாவுக்கும் உதவியாய் இருந்தனீங்கள்; இப்ப அப்பாவும் இல்லை. நாங்கள் காணி வீடெல்லாம் வித்துப்போட்டு, அம்மாவையும் கூட்டிக்கொண்டு போகப் போறம். இந்தக் காணியில நீங்கள் இருந்தா, நாங்கள் முழுக் காணியையும் கேட்கிறவைக்கு குடுக்கேலாது. நீங்கள் எழும்பினால்தான், நாங்கள் காணியை விக்கலாம்..." கூறியவன் அவர்களின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான்.

சின்னையாவின் முகம் இறுகியிருந்தது. தாங்க முடியாதவளாக "இப்ப திடீரெண்டு எங்களை எழும்பச்சொன்னா நாங்கள் எங்க போறது? ஐயா எங்களுக்கு காணி தாறதெண்டு சொன்னதாலதானே, நாங்கள் இங்க இருந்தனாங்கள்..." மேலே பேசமுடியாது விம்மி அழுதாள் சரசு.

அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கே வந்த சுகந்தி "காணியைத் தந்திரமாக வாங்கிறதுக்குத்தான் அப்பாவைப் பார்த்திருக்கிறீங்கள்போல. இப்ப காணி விக்கிற விலையில அப்பாவும் யோசிக்காமல் அம்மாவிற்றைக் காணி எழுதிக் குடுக்கவேணும் எண்டு சொல்லியிருக்கிறார். இவை அப்பாவைப் பார்த்ததுக்குக் கூலியா ஒரு இருபத்தையாயிரம் ரூபா குடுக்கலாம். அவையளைக் காணியைவிட்டு எழும்பச் சொல்லுங்கோ..." கூறிவிட்டுச் செல்லும் சுகந்தியை வெறிக்கப் பார்த்தாள் சரசு.

"நன்றி கெட்ட சென்மங்கள். உயிரோடை இருக்கேக்க தகப்பனை மதிக்காததுகள் இப்ப கதைக்குதுகள்..." அவளது வாய் முணுமுணுத்தது.

சின்னையா விதானையாரிடம், "ஐயா எங்களுக்கும் காசு வேண்டாம். நாங்கள் ஐயாவைப் பார்த்ததை எங்களின்ர கடமையா நினைக்கிறம். நாங்கள் நாளைக்கே வெளிக்கிடுகிறம். நீங்கள் காணியை யாருக்காவது வில்லுங்கோ..." சொல்லியவன் வீட்டிற்குள் நுழைந்தான்.

அன்றே வளலாயில் இருக்கும் தன் தங்கை சோதியிடமும், அவளின் கணவரிடமும் சென்று விடயத்தைக் கூறிய சின்னையாவிடம் :

"அண்ணை உடனே வெளிக்கிட்டு இங்க வாருங்கோ. இங்க எங்களின்ரை வீட்டில இப்ப சேர்ந்திருப்பம். பிறகு ஒரு வீடு கட்டலாம்" என்று கூறிய சோதியை மேலே பேசவிடாது குறிக்கிட்ட அவள் கணவர்:

"மச்சான்! இங்க தோட்டக் காணி பயிர் செய்யாமலே இருக்கு. அதில நீங்கள் தோட்டமும் செய்யலாம்; பிறகு அங்கேயே ஒரு வீடும் கட்டலாம்..." என அன்புடன் கூறியவரை நன்றியுடன் அணைத்துக் கொண்டார் சின்னையா.

அப்போது அங்கே வந்த அவரது தங்கையின் மகள் "அப்பா மாமாவுக்கு முதலில காணியை எழுதிக் குடுத்துப் போட்டுத் தோட்டம் செய்யவிடுங்கோ அல்லது இங்கையிருந்தும் அவையளை வெளிக்கிட்டு ஓட வைச்சிடதேங்கோ ..." நகைச்சுவையாக அவள் கூறியதும் சின்னையாவும் தங்கையின் கணவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

நடந்த சம்பவங்கள் அனைத்தையும் அசைபோட்ட சின்னையாவைத் தட்டி "மச்சாள் வீடு வந்திட்டுது. என்ன நித்திரையாப் போனீங்களே? எழும்புங்கோ..." என எழுப்பினாள் சரசு.

ஏமாற்றத்தால் மனம் சோர்ந்திருந்து புதிய நம்பிக்கையுடனும் எதிர்காலக் கனவுகளுடனும் தங்கையின் வீட்டிற்குள் காலடி எடுத்துவைத்த சின்னையாவையும், அவர் குடும்பத்தையும் அன்புடன் வரவேற்று அழைத்துச் சென்றனர் அவரின் தங்கையின் குடும்பத்தினர். அவர்களது நம்பிக்கைக்குப் பலம் சேர்ப்பதுபோல அருகிலிருந்த கோயில் மணி ஓங்கி ஒலித்தது. ●

# அன்பின் வலிமை

வழமை போல மாதா கோயில் மணி "டாங்... டாங்..." என நான்கு முறை அடித்து ஓய்ந்தது. திடுக்கிட்டு எழுந்த நிர்மலா தன் அருகே படுத்திருந்த மகன் முரளியின் உடலைப் பதற்றத்துடன் தொட்டுப் பார்க்கின்றாள். உடல் அனலாகக் கொதிக்கின்றது.

பரபரப்பாக எழுந்தவள் காய்ச்சலால் துவண்டு கிடக்கும் மகனின் முகத்திற்கு அருகிலே குனிகின்றாள். அவன் "அப்பா அப்பா" என மெல்ல முனகுவது கேட்கின்றது. "முரளி... முரளி..." என மெதுவாக அவனை அழைத்தவள் அவன் தலை முடியை அன்புடன் கோதினாள்.

இரவு முழுவதும் கண்விழித்து மகனின் அருகே இருந்தவள் உடல் அசதியினால் தூங்கிவிட்டாள். இரண்டு நாள்களாக மகன் முரளிக்கு காய்ச்சல். கையில் காசில்லாமல் கணவன் மாறன் திண்டாடுவது தெரிந்தும் "பிள்ளைக்குக் காய்ச்சல் விடுகுதில்லை உடம்பு அனலாய்க் கொதிக்குது. யாரிடமாவது காசு மாறிக்கொண்டு வாருங்கோ மருந்தெடுக்கவேணும்..." மனைவியின் நச்சரிப்பைப் பொறுக்கமாட்டாத மாறன் "யாரிடமாவது காசு மாறி வருகின்றேன்" என்று போனவன் இரவு முழுவதும் வீடு வந்து சேரவில்லை.

வயிற்றை ஏதோ பிராண்டுவது போல் இருக்கவே வயிற்றைத் தடவிப் பார்க்கின்றாள் நிர்மலா. ஆ... அவள் வயிற்றிலே வளரும் ஜீவனும் தன் பசியை வெளிப்படுத்துகிறதோ என்னவோ அப்பொழுதுதான் இரண்டு நாட்களாக தான் சாப்பிடாமல் வெறும் வயிற்றுடன் இருப்பது அவளுக்குப் புரிகின்றது. இன்று ஐந்து மாதக் கர்ப்பிணியான நிர்மலா அன்று தனது பெற்றோரைப் பிரிந்து மாறனோடு ஓடி வந்துவிட்டாள்.

தங்கள் வீட்டின் கார் சாரதியாக இருந்த மாறனை விரும்புகின்றாள். என்பதை அறிந்த அவளது தந்தை கிருஷ்ணமூர்த்தி பொங்கி எழுந்தார். அவளது மனதை மாற்றப் பெருமுயற்சி செய்தார். ஈற்றில் "குடும்பத்தின் மானத்தைக் கப்பலேத்த வந்த உந்த நாய் எக்கேடும் கெட்டுப் போகட்டும்" எனக்கூறி, தனது கௌரவம் பங்கப்பட்டதை உணர்ந்து ஒதுங்கிக் கொண்டார். பெரும் பணக்காரரான கிருஷ்ணமூர்த்தி மகளின் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரது அலட்சியம் அவர்களைத் தனிமைப்படுத்தியது.

நிர்மலாவை அழைத்துச்சென்ற மாறனை அன்புடன் வரவேற்றான் நண்பன் தியாகு. "மாறா எனக்குச் சொந்தமான வீடொன்று இருக்கு. அதில இப்போதைக்குத் தங்கலாம். அதோடை எனது வயலும் இருக்கு விதைக்கலாம்" என்றவன் அதனைச் செயற்படுத்தியும் விட்டான்.

காலம் உருண்டோடியது. மாறன் தம்பதியினருக்கு முரளி பிறந்தான். இருவரும் மகிழ்ச்சியின் உச்சிக்கே சென்றனர். குழந்தையையும், மனைவியையும் கண்கலங்காமல் பார்த்தான் மாறன். முரளிக்கு இரண்டு வயது முடிந்துவிட்டது. நிர்மலா மீண்டும் கர்ப்பமானாள். அவள் தனது பெற்றோரின் கோபத்தில் இருந்து மீளமுடியாது தவித்தாள்.

அன்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஆறு மணி இருக்கும் அவர்களின் வீட்டிற்குப் பரபரப்பாக வந்தான் தியாகு. "மாறன் இங்கு பிரச்சினைவரும் போலை இருக்கு. இங்க இருக்கிறது புத்திசாலித்தனமில்லை. நாங்கள் எங்கையாவது போவம்..." அவன் கூறி முடிப்பதற்கு முன் வானத்தில் விமானங்களின் இரைச்சல் காதைப்பிளந்தது.

வெடிச்சத்தங்களும் குண்டுகளின் ஓசையும் நான்கு பக்கங்களிலும் கேட்டன. மாறன், "நிர்மலா! பிள்ளைக்கும், உனக்கும் அவசியமான பொருள்களை ஒரு 'பாக்கி' ல எடு" எனக் கூறியவன் மகன் முரளியைத் தூக்கிக் கொண்டு நிர்மலா எடுத்துவந்த 'பாக்' கை கையில் வாங்கிக் கொண்டு தியாகுவுடன் வெளியேறினான்.

வீதி எங்கும் வெறிச்சோடிக் கிடந்தது. வெறுமையான வீடுகளும் தெருவிலே ஊளையிடும் நாய்களும் மரண பயத்தை ஏற்படுத்தின. அயலவர்கள் எல்லோரும் உயிர் தப்பினால் போதும் என்று அவ்வூரைவிட்டே போய்விட்டனர். தியாகுவின் மாமாவின் குடும்பம் புதுக்குடியிருப்பில் இருந்தது.

தற்காலிகமாக அங்கே சென்று, பின்னர் நிலைமையைப் பார்த்து வேறு எங்கேயாவது போகலாம் என முடிவு செய்தனர். அதன்படி புதுக்குடியிருப்பில் தியாகுவின் மாமாவின் வீட்டிற்கு அருகிலுள்ள சிறிய வீட்டில் மாறன் குடும்பத்தினர் தங்க வைக்கப்பட்டனர்.

நாட்கள் வாரங்களாயின. உக்கிரமான போர் நடைபெறுவதற்கான அறிகுறியாக வெடிச்சத்தங்களும், குண்டுச்சத்தங்களும் கிராமத்தை அதிரவைத்தன. "மாறன் மாமா வீட்டுக்காரரைப் பற்றிய செய்தி ஒன்றையும் அறிய முடியேல்ல. மகள் வீட்டுக்குப் போய் வாறமெண்டு குடும்பமாய்ப் போனவை நான் ஒருக்காப் போய் பார்த்துக் கொண்டு வாறன்..." என்று அவர்களைப் பார்க்கச் சென்ற தியாகுவையும் நான்கு நாள்களாகக் காணவில்லை. மாறன் குடும்பம் ஆதரவின்றிச் செய்வதறியாது திகைத்தது. கையிலிருந்த பணமும் கரைந்துவிட்டது. வீட்டில் அடுப்புப் புகைந்து இரண்டு நாட்களாகிவிட்டன. முரளிக்கும் காய்ச்சல், கர்ப்பிணியான மனைவியின் நிலை பரிதாபமாக இருந்தது. அவளது ஆலோசனைப்படியே வீட்டைவிட்டு வெளியேறினான் மாறன்.

படுக்கையில் புரண்டு படுத்த மகனின் தலையை வருடிவிட்டவள், தண்ணீரில் நனைத்து வந்த துணியால் தன் மகனின் உடலைத் துடைத்தாள். "அம்மா... சோடா" முரளி மெதுவாக முனகினான். "அப்பா சோடா வாங்கப் போட்டார். இப்ப வந்திடுவார். கொஞ்சநேரம் கண்ணை மூடிக்கொண்டு நித்திரை கொள்ளுங்கோ..." நிர்மலா மகனின் தலையை அன்புடன் கோதினாள்.

காய்ச்சலால் நாக்குவரண்டு சோடா கேட்கும் மகனுக்கு பனடோல் கூட குடுக்கிறதுக்கு இல்லை. "தெய்வமே இது என்ன சோதனையப்பா..." அந்தத்தாயின் மனம் துடித்தது.

தொடர்ந்து செல்கள் வீழ்ந்து வெடிக்கும் ஒலி காதைச் செவிடாக்கியது. விமானங்களின் இரைச்சல் ஒரு பக்கம் செய்வதறியாது திகைத்தாள் நிர்மலா. காசு மாற என்று போன மாறன் இரவு வீடு திரும்பவில்லை. அதுவேறு அவளின் பயத்தை அதிகரித்தது. மகனை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்புடன் வீட்டிற்கு அருகிலே மாறன் தற்பாதுகாப்பிற்காக அமைத்த பதுங்குக் குழிக்குள் மகனை மெதுவாகத் தூக்கிச் சென்று படுக்கவைத்தாள்.

இரண்டு நாள்களாகப் பட்டினி கிடந்த உடல், வயிற்றிலிருந்து ஏதோ பந்தாக உருண்டு வந்து நெஞ்சை அடைப்பது போல் இருந்தது. சமையலறைக்குச் சென்றவள், தண்ணீரை வார்த்துக் குடித்தாள். வாசலில் ஏதோ சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தாள் நிர்மலா.

பசிக்களையால் தள்ளாடியபடி வந்துகொண்டிருந்தான் மாறன். அவன் கையில் சோடா, பனடோல், நெஸ்ரோமோல்ட் டின் என்பன இருந்தன. "நிர்மலா இந்தா இதைக் கொண்டுபோய் ஒரு நல்ல ரீ போடு. முரளி எங்க... இப்ப காய்ச்சல் எப்படி இருக்கம்மா?" நான் இரவு வரேலாமப் போச்சு அங்க உயிரைக் கையில பிடிச்சுக்கொண்டு இருந்திட்டு வாறன். முதலிலை சோடாவை நீயும் குடிச்சு முரளிக்கும் குடு", மாறனின் சொற்கள் பாசத்துடன் ஒலித்தன. தன் மகனையும் மனைவியையும் காப்பாற்றுவதற்காக நிர்மலாவின் தந்தை கிருஷ்ணமூர்த்திக்கே தன் இரத்தத்தைக் கொடுத்து அதற்கான பணத்தைப் பெற்றுக்கொண்டவன் தன் மனைவியிடம் அதனைக் கூறவில்லை. இரத்ததானம் செய்து காசு வாங்கிய கதையைக் கர்ப்பிணியான தன் மனைவி அறிந்தால் மனமொடிந்து போய்விடுவாள் என்பது அவனுக்குத் தெரியும். ஒரு பெருமூச்சுடன் தன் மனைவி செல்லும் திசையைப் பார்த்தான் மாறன்.

நிர்மலாவின் மீதும் பிள்ளைகள் மீதும் கொண்டிருந்த அன்பின் உயர்வை அவளின் பெற்றோர் அறிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் அவர்கள் அவள் மீது அன்பையல்ல தமது கௌரவத்தின் வலிமையையே காட்டி நின்றனர். மாறன் நிர்மலாவின் தந்தைக்கு இரத்ததானம் செய்த செய்கையைக் கூறாமல் அவர் சுகவீனமாக இருக்கும் அந்த உண்மையைக் கூறியபோது நிர்மலாவின் கண்கள் கலங்கின. தனது பெற்றோரைக் காணவேண்டும் என்ற ஆவல் அவளிடத்தில் பிறந்தது. நோயுற்றுவாடும் தந்தை இருக்கும் இடத்தைத் தேடி அவள் தனது மகன் முரளியோடு புறப்பட்டாள். மாறன் தயங்கினான்.

அங்கே மகள் நிர்மலாவையும் பேரனையும் கண்ட கிருஷ்ணமூர்த்தி வருத்தம் நீங்கிப் பாயிலிருந்து எழுந்து உட்கார்ந்தார். அவரின் பார்வைகள் கௌரவத்தைக் களைந்து அன்பைக் காண மருமகன் மாறனைத் தேடின. நிர்மலாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர்...

வானத்தில் பறந்து குண்டெறிய விளைந்த விமானத்தின் இரைச்சலும் அப்போது அவர்களுக்குக் கேட்கவில்லை. ஐக்கியப்பட்ட குடும்ப பலம் அவர்களுக்கு மகிழ்வையும் ஒருவகைத் துணிவையும் தந்தது. ●

# கனவும் காலங்கள்

அடுப்பிலிருந்த கறியை இறக்கிவைத்த விசாலம் மணிக்கூட்டை எட்டிப் பார்க்கின்றாள். நேரம் 11 ஐக் காட்டியது. இப்போது பஸ்ஸைப் பிடித்தால்தான் நோயாளர்களைப் பார்வை யிடும் நேரத்திற்கு மருத்துவமனைக்குச் செல்லமுடியும்.

பரபரப்பாகசாப்பாட்டைப் பாத்திரத்திலே போட்டு, தண்ணீரையும் போத்தலிலே நிரப்பி, திலகாவிற்குத் தேவையான உடுப்புகளையும் கூடையிலே வைத்தாள். முகத்தைக் கழுவி உடுப்பை மாற்றிக் கொண்டு. வீட்டைப் பூட்டிச் சாவியை எடுத்தவள், வீதிக்கு விரைந்தாள்.

கால்கள் வீதியிலே விரைவாக நடந்தாலும் மனம் மகள் திலகாவை நினைத்தே துடித்தது. மூன்று நாட்களாகச் சுயநினை வின்றிப் படுக்கையிலிருந்தவள் இன்றுதான் கண்களைத் திறந்தாள். திலகாவை விட்டுவிலக மனமில்லாத போதிலும் அவளுக்கு ஏதாவது உணவு கொடுக்கும்படி வைத்தியர்கள் கூறியதனால் பக்கத்து வீட்டு பத்மாவைத் திலகாவுடன் விட்டுவிட்டு இடியப்பம் அவிப்பதற்காக வந்தாள் விசாலம்.

அவசரமவசரமாக இடியப்பமும், கறியொன்றையும் தயாரித்துப் பஸ்ஸைப் பிடிப்பதற்காக ஓட்டமும், நடையுமாக வந்தவள், தன் குடும்பத்தின் நிலையை நினைத்துக் கலங்கினாள். துன்பமும், துயரமும் தனக்கென்றே படைக்கப்பட்டது போன்ற ஏக்கம், ஏன் எனக்கு மட்டும் இப்படியான சோதனை. "நான் வாங்கி வந்த வரமே இது தானோ" எனத் தனக்குள்ளே பேசிக்கொண்டவள், பஸ் தரிக்கு மிடத்திற்குச் செல்ல யாழ் செல்லும் பஸ்சும் ஓரளவு நெரிசலில்லாது வரவும் சரியாக

இருந்தது. அப்பஸ்ஸில் சனநெருக்கடி குறைவாக இருந்தது. அவளுக்கு இருக்க இடம் கிடைத்தது. ஆசனத்தில் அமர்ந்தவளின் மனம் கடந்த காலத்தை நினைத்து சுற்றிச் சுழன்றது.

விசாலம் பிறந்தஇடம் கொக்குவில். சாதாரண கும்பத்தில் பிறந்தாலும் அழகும், பண்பும் நிறைந்தவளாக இருந்ததனால் அவளைத் திருமணம் செய்வதற்குப் பலர் போட்டியிட்டனர். மளிகைக் கடை ஒன்றின் உரிமையாளனான கேசவனைப் பெற்றோர்களின் விருப்பப்படி திருமணம் செய்தாள் விசாலம். இன்பமான அவர்களின் இல்லற வாழ்வின் சின்னமாக வந்து பிறந்தவள் தான் திலகா. தனது மனைவியையும், மகளையும் தன் இரு கண்களாகக் கருதி அன்புடன் அவர்களைப் பாதுகாத்தான் கேசவன். உறவினர்களே பொறாமை கொள்ளும் வண்ணம் அவர்களின் வாழ்க்கை விளங்கியதைக் கண்டு விசாலத்தின் பெற்றோர்கள் மகிழ்ந்தனர்.

இந்த மகிழ்ச்சி நீடிக்கவில்லை திடீரென இடம் பெயரவேண்டிய சூழ்நிலை. ஒருநாள் கடையிலிருந்து பரபரப்பாக வந்த கேசவன் "விசாலம் உடனடியாக எங்களெல்லாரையும் தென்மராட்சிப் பக்கம் போகட்டாம். பிறகு இரண்டு நாள் கழிச்சு இங்க வரட்டாம். நான் கடையை பூட்டிப்போட்டு வந்தனான். ஒரு வாகனத்தைப் பிடிச்சுக்கொண்டு கையில் சில முக்கியமான சாமான் களைக் கொண்டு போவம் பிறகு நிலமையைப் பாத்து வருவம்..." சொன்னவன் சிறிதும் தாமதிக்காது கையிலகப்பட்டதை எடுத்துக் கொண்டு, தன் குடும்பத்தையும் மாமன், மாமியையும் அழைத்துக் கொண்டு சாவகச்சேரிக்குப் புறப்பட்டான். கேசவனின் நண்பன் குருமூர்த்தியின் வீட்டிற்குச் சென்ற கேசவனது குடும்பத்தை அவர்கள் அன்புடன் வரவேற்றனர்.

சாவகச்சேரி நகரத்தின் மத்தியில் கடைகளுடன் சேர்த்து அமைக்கப்பட்ட மாடிவீட்டில் தங்களுடன் கேசவன் குடும்பத் தினரையும் தங்கவைத்தனர். இரண்டு நாட்கள் கழிந்த நிலையில் யாழ்ப்பாணநிலையைப் பார்த்துவர என, தெரிந்த ஓரிரு நண்பர்களுடன் கேசவன் சென்றுவிட விசாலம் மகள் திலகாவை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றாள், வீட்டிற்குச்சமீபமாக வைத்தியசாலை இருந்ததுடன் குழந்தை திலகா சளியினால் மூச்சுவிட சிரமப்பட்டதால் அவளை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றாள்.

திடீரெனக் கேட்ட குண்டினோசை புகை மண்டலத்திற்கு மத்தியில் குழந்தையை அணைத்துக் கொண்டு கால்போன போக்கில் ஓடினாள். சத்தங்கள் ஓய்ந்து அவள் வீட்டிற்குத் திரும்பியதும் கண்ட காட்சி அவளை நிலை குலையவைத்தது அந்த மாடிவீடு தரைமட்ட மாகி இருந்தது. அந்த வீட்டினுள் அவளது பெற்றோரும் நண்பர் குடும்பமும் புதையுண்டு போயினர். பிரமைபிடித்து சிலையாகிப் போனவள், கேசவன் வருகையை எதிர்நோக்கிக் காத்திருந்தாள். இரண்டு நாட்களாகியும் அவன் வராதது, அவளை நிலைகுலையச் செய்தது. மூன்றாவது நாள் கேசவனும் அவன் நண்பர்களும் தமது கடைகளைப் பார்க்கச் சென்றபோது கடைக்குச் சமீபமாக விழுந்த எறிகணைக்குப் பலியான செய்தி கிடைத்தது.

கையிலே குழந்தை இல்லாதுவிட்டால் அவளும் தன் கணவனுடனும், பெற்றோருடனும் போய்ச்சேர்ந்திருப்பாள். அவளும் அவள் கணவனும் உயிருக்குயிராகப் பேணி வளர்க்கும் செல்ல மகள் திலகாவிற்காக எதையும் தாங்கும் இதயத்தைத் தரும்படி இறைவனை வேண்டினாள். அவளுடைய எதிர்காலம் கேள்விக் குறியானது கடை தரைமட்டமாகியதுடன் அவர்கள் இருந்த வீடும் உருக்குலைந்து போனது. ஊருக்கு வந்தவள், தமது காணியில் சிறிய குடிசை ஒன்றை அமைத்து குழந்தை திலகாவுடன் வாழத் தொடங்கினாள்.

கணவனை இளவயதில் பறிகொடுத்த விசாலத்திற்கு திலகாவே உலகம். அவளை நன்றாகப் படிக்க வைக்கவேண்டும். அவள் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் தனது காலிலே நிற்க வேண்டும். அவள் ஏதாவது தொழில் பார்க்க வேண்டும் இதுவே விசாலத்தின் கனவு.

"திலகா என்னைப்போல நீ கஷ்டப்படக் கூடாது நல்லாப் படிச்சு ஒரு வேலை பார்த்தா யாரிட்டையும் கடமைப்படத் தேவையில்லை... உன்ரை காலில நிற்க வேணுமெண்டா நீ நல்லாப் படிக்க வேணும்".

விசாலம் மகளிடம் இதனை அடிக்கடி கூறுவாள்.

கணவனைப் பறிகொடுத்துவிட்டு உதவி செய்வாரெவருமில்லாமல் அநாதரவாக நின்றவளுக்கு இருந்த தன்னம்பிக்கையே அவளையும் அவள் குழந்தையையும் வாழ வைத்தது எனலாம். யாரிடமும் எந்த உதவியையும் பெற்றுக் கொள்ளாமல் முறுக்கு, மிக்சர் போன்ற பொருட்களைச் செய்து தெரிந்த கடைகளுக்குக் கொடுத்துத் தனது மகளை வளர்த்த விசாலம் உறுதியான மனதையுடைய நெருப்புப் போன்றவள்.

அவளது இத்தகைய இயல்புகளே இளவயது விதவையான அவளைச் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழச்செய்தது எனலாம். தன்னைப் போலக் கல்வி அறிவில்லாத பெண்ணாக இருக்காமல் மகள் திலகாவை ஒரு பட்டதாரியாக உருவாக்கவேண்டும் என்பதே அவளது இலட்சியம்- அதற்காகவே தன்னை வருத்தி உழைத்தாள் விசாலம்.

தந்தை இல்லாத தன் மகளுக்கு எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது என்பதில் எச்சரிக்கையாக இருந்தாள். மகளைத் தெரிந்தவர் களுடைய வீடுகளுக்கு அனுப்புவதையோ, நண்பிகளுடன் தொடர்பு கொள்ளுவதையோ அவள் விரும்புவதில்லை. மகளைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காக அவள் விதித்த கட்டுப்பாடுகள் திலகாவை வெறும் புத்தகப் பூச்சியாக மாற்றியதோடு பயந்த சுபாவத்தையும் உருவாக்கிவிட்டது.

**ப**ஸ்சுக்குள் அமர்ந்திருந்து கடந்த காலத்தை மீட்டுப் பார்த்தவள் இப்படிப் பூவாக வளர்த்த, தன் மகளின் இன்றைய நிலைக்குத், தானே காரணம் என எண்ணி மனங் கலங்கினாள். தனக்கிருந்த துணிவும், தன்னம்பிக்கையும் தன் மகளுக்கு இல்லாமல் போனதிற்கு, தான் அவளை உலகம் தெரியாதவளாக வளர்த்ததே காரணம் என எண்ணியபோது அவளின் உள்ளம் சுக்கு நூறாக உடைந்தது.

மகளுக்கு நினைவு திரும்பிவிட்டது என மகிழ்ந்தவளுக்கு அவளது செயல் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியது. "அம்மா எனக்குப் படிப்பு வேண்டாம். அம்மா அது கம்பஸ் இல்லையம்மா, காட்டுமிராண்டிக் கூட்டம்..." என அரற்றியவள் கண்களைப் பொத்தியவளாக "ஐயோ என்னால ஓட முடியாது எனக்கு மயக்கம் வருகுது நெஞ்செல்லாம் படபடக்குது. என்னை விடுங்கோ, நான் வீட்டை போறன்..." ஓயாமல் கதறும் மகளின் தலையைத் தடவி அவளைத் தூங்க வைக்கக் கடும் பிரயத்தனம் செய்ய வேண்டியதாயிற்று.

மூன்று நாட்களாக சுயநினைவில்லாமல் இருந்த திலகா, இன்று அதிகாலையில்தான் கண் திறந்தாள். இந்த மூன்று நாட்களும் விசாலம், பச்சைத் தண்ணிகூட வாயில் வைக்காமல் மகளருகிலேயே கண் விழித்து காவலிருந்தாள்.

திலகா கண் விழித்த மகிழ்ச்சியில் டொக்டரிடம் ஓடிச்சென்று கூறியவள், திரும்பவும் மகளின் அருகில் ஓடிவந்தாள். ஆனால்

திலகாவோ மிரண்டு மிரண்டு பார்த்ததுடன் "ஓட மாட்டேன்... என்னால முடியாது..." என அரற்றுவது கேட்டு அதிர்ச்சியுற்றாள்.

அப்போது தான் திலகாவுடன் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான பிரியா, யாரையோ பிடித்துக் கெஞ்சி தன் நண்பியின் நிலையைப் பார்ப்பதற்காக வந்தவள், அங்கே விசாலத்தின் தவிப்பையும், சுயநினைவு வந்தும் அச்சத்தில் அரற்றும் திலகாவையும் பார்த்ததும் பேச நாவெழாது திகைத்து நின்றாள். அவளைப் பார்த்த விசாலத்தால் அதைத் தாங்க முடியவில்லை.

"பிரியா என்னம்மா நடந்தது... என்ரை பிள்ளைக்கு கம்பசில என்ன நடந்தது... மயக்கம் போட்டு பிள்ளை விழுந்தது எண்டு தான் எனக்கு சொன்னவை... மூன்று நாளா பிள்ளை கண் முழிக்கேல்ல இண்டைக்குத்தான் கண் முழிச்சு... முழிச்சதும் இப்பிடி பிதற்றுதம்மா என்ன நடந்தது...?"

கண்களில் கண்ணீர் பெருக பிரியாவிடம் கேட்டாள் விசாலம்.

திலகாவின் இயல்பும், அவள் திறமையும், பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவமும் பிரியாவின் மனதிலே நிழல்படமாய் விரிந்தது.

இயல்பாகவே பயந்த சுபாவமுடையவள் திலகா. ஆண்களும், பெண்களும் இணைந்துகல்விகற்கும் பாடசாலையாக இருந்த போதிலும் திலகா எந்த ஒரு மாணவனுடனும் கதைத்ததில்லை. தானுண்டு தன் படிப்புண்டு என்று மட்டுமே இருப்பாள். அவளுடைய நண்பிகள் அவளைக் கேலி செய்தபோதிலும் திலகா மனம் தளராமல் படிப்பிலேயே குறிக்கோளாக இருந்தாள். அதன் பலனாக மிகச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றதுடன், மாவட்டத்தில் 7வது நிலையும் கிடைத்தது. அவளால் கல்லூரிக்கும் பெருமை கிடைத்தது.

பல்கலைக் கழகத்திற்கு முதன் முதலாகச் செல்வது அச்ச உணர்வை ஏற்படுத்தினாலும் அவளுடைய வகுப்பு நண்பிகளான பிரியா, ரேணுகா, லக்ஷிகா ஆகியோருக்கும் அனுமதி கிடைத்துள்ளமையால் அவர்களுடன் சேர்ந்து பல்கலைக்கழகத்திற்குச் செல்வதென தாயின் ஆலோசனையுடன் பல்கலைக்கழகத்திற்குச் சென்றாள் திலகா.

பல்கலைக்கழக நுழைவாயிலைத் தாண்டியதும் அவ்ளைப் போல அனுமதி பெற்ற ஆண்களும், பெண்களும் பலர் கூடியிருந்தனர். அவர்களைச் சூழ்ந்து நின்ற பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் - சீனியர்ஸ் மாணவர்களும், மாணவிகளும்

திலகாவையும் அவளுடைய நண்பிகளையும் கண்டதும் அவர்களைத் தமதருகே வரும்படி அழைத்தனர். மூவரும் அவர்களுக்கு அருகே தயங்கித் தயங்கி வந்தனர்.

அங்கே நின்ற இறுதியாண்டு மாணவர்களில் ஒருவன் திலகாவையும் நண்பிகளையும் பார்த்து "உங்கள் பெயர், பெற்றோர் பெயர், விலாசம், படித்த பாடசாலை பெயர் எல்லாத்தையும் இந்த பேப்பரில எழுதித் தாங்கோ..." எனக் கூற இன்னொரு மாணவன் பிரியாவிடம் "ஒரு காலை மடிச்சுக் கொண்டு ஒற்றைக் காலில நிண்டு தவம் செய்யிற மாதிரி போஸ் குடுபாப்பம்..." எனக் கூறினான்.

திலகாவும் அவள் நண்பிகளும் மிகுந்த அச்சத்தோடு அவன் கொடுத்த பேப்பரைக் கையில் வாங்கினர். பிரியா ஒரு மாதிரி காலை மடித்து ஒற்றைக் காலில் நின்றாள்.

பயந்து நடுங்கிய வண்ணம் அழுதுவிடுவாள் போலிருந்த திலகாவின் நிலையைப் பார்த்ததும் மாணவர்களுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கவேண்டும். அவளை மட்டும் தனியாகத் தம்மருகே அழைத்த மாணவர்கள் "இங்கே வாடி. ஏன் அழுகிற மாதிரி நிற்கிறாய்? ஏன் இங்க வந்தனி? வீட்டில இருந்திருக்கலாம் தானே. இப்ப அந்தக் கிறவுண்டைச் சுத்திப் பத்துத் தரம் ஓடி வா..." எனக் கூறினர்.

திலகாவிற்கு அச்சத்தால் மூச்சை அடைப்பது போலிருந்தது. இதுவரை யாரும் அவளிடம் இவ்வளவு கடுமையாக நடந்து கொண்டதில்லை. பயம், பதட்டம் கலந்த உணர்வுகளில் சிக்கித் தவித்தவளை அவளுடன் வந்த நண்பிகள் "திலகா அவங்கள் சொன்னபடி செய்யாமல் விட்டால் திரும்ப, திரும்ப தண்டனைகள் தந்து கொண்டிருப்பாங்கள். ஆனபடியா அவங்கள் சொன்னபடி கிறவுண்டைச் சுற்றி ஓடு..." எனக் கூறியதைக் கேட்டவள் கண்களில் கண்ணீர் மல்க கிறவுண்டைச் சுற்றி ஓடத் தொடங்கினாள்.

ஒருதரம் ஓடி முடிந்ததும் மெதுவாக நடக்கத் தொடங்கியவளை "ஓடு..." என்று அதட்டிய மாணவர்களின் குரல்கள் சேர்ந்து ஒலித்தன. அச்சத்துடனும், பதட்டத்துடனும் கிறவுண்டைச் சுற்றி ஓடத் தொடங்கினாள். காலை சாப்பிடாமல் அம்மா தந்த வெறும் ரீயை மட்டும் குடித்து விட்டு வந்த உடம்பு-பயம், பதட்டம் கலந்த உணர்வு எல்லாம் சேர்ந்து மூன்றாவது சுற்று ஓடும்போதே தலைசுற்றி மயக்கம் வருவது போல இருந்தாலும் மனதைத் திடப்படுத்திக் கொண்டு ஓடியவளின் உடம்பு காற்றிலே பறப்பது போலிருந்தது.

நாலாவது சுற்று ஓடத் தொடங்கியவள் சிறிது தூரம் தான் ஓடியிருப்பாள். கண்கள் இருட்டிக்கொண்டு வர தலை சுற்றி தரையிலே மயங்கிச்சாய்ந்தவளுக்கு அதன் பின் என்ன நடந்தது என்பது தெரியாது.

பல்கலைக்கழகத்தில் நடந்த சம்பவத்தைக் கூறிய பிரியா- மாணவர்கள், விரிவுரையாளர்கள், அவளை மருத்துவமனையில் அனுமதித்ததையும் விசாலத்திற்கும் அவர்களே அறிவித்ததையும் கூறினாள்.

கண்களைத் திறந்த திலகா "அம்மா, எனக்குப் படிக்கிற ஆசையே விட்டுப்போச்சம்மா. எதிர்கால நம்பிக்கையே அழிஞ்சு போச்சுதம்மா..."

முகத்தை கரங்களால் பொத்தியபடி கேவிக்கேவி அழும் திலகாவின் தலையை அன்புடன் தடவியவள் "திலகா நீ யோசிக்காதையம்மா. உனக்கு விருப்பமில்லையெண்டா நான் உன்னைக் கட்டாயப்படுத்தமாட்டன். எனக்கு நீதான் முக்கியம்... உன்ரை உடல் நலம் தான்ரா எனக்கு முக்கியம்..." அன்புடன் கூறிய தாயின் மடியில் தலையைச் சாய்த்துக் கொண்டாள் திலகா.

வார்ட்டில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் வந்திருக்கவேண்டும். பரபரப்பாக உறவினர்கள் வார்ட்டிற்க்குள் பிரவேசித்தனர். அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தவள் தன் கட்டிலை நெருங்கிக்கொண்டிருந்தவர்களைக் கண்டதும் அதிர்ச்சியுடன் கண்களை மூடிக்கொண்டாள். அவள் உடல் முழுவதும் வியர்வையால் தெப்பமாக நனைந்திருந்தது.

மகளது நிலையைப் பார்த்து அதிர்ச்சியடைந்த விசாலம் கட்டிலை நெருங்கி வந்த இளைஞர்களை ஏறிட்டு நோக்கினாள். அந்த இளைஞர்களின் முகத்தில் தெரிந்த சோகம், அவர்களின் கரங்களில் இருந்த பழங்கள், பிஸ்கட், நெஸ்ரோமோல்ட் ரின் நிறைந்த பொட்டலங்கள் அவர்கள் தமது செயலுக்கு வருந்தி திலகாவைப் பார்க்க வந்ததை புலப்படுத்தியது.

தாங்கள் செய்த பிழைக்காக வருந்தி நிற்கும் அவர்களின் செயல் அவளை வியப்படைய வைத்தது. டொக்டர் தனது அறையிலேயிருந்து அவர்கள் வருவதை அவதானித்தவர் எழுந்து திலகாவிற்கு அருகிலே வந்தார். வந்தவர், "தம்பியவை நீங்கள் தானா திலகாவை இந்த நிலைக்கு கொண்டு வந்த ஆக்கள் உங்களோட கதைக்க வேணும். ஒருக்கா

என்னுடைய அறைக்கு வாங்கோ...” கூறியவர் தன் அறையை நோக்கி நடந்தார்.

அவர் சென்றதன் பின்னால் அவரது அறைக்குச் சென்ற இளைஞர்கள் தலைகுனிந்து நின்றனர். அவர்கள் தமது செயலுக்கு வருந்துவது தெரிந்தது. அவர்களிடம் என்ன அறிவுரை கூறினாலும் ஏற்றுக்கொள்வர் என்பதைப் புரிந்துகொண்ட டொக்டர். “தம்பி றாக்கிங் செய்யிறதை நான் பிழையெண்டு சொல்லேல்ல. ஆனா அதுமற்றவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கிறதாகவோ, மனதைப் பாதிக்கிறதாகவோ இருக்கக்கூடாது. அந்தப் பிள்ளை யினுடைய குடும்ப நிலை உங்களுக்கு தெரியுமா? ஏழைக் குடும்பம். தாய் அந்தப் பிள்ளையை வளர்க்க, படிப்பிக்க எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பா, பிள்ளையின்ர எதிர்காலத்தையே பாழாக்கிப் போட்டீங்களே. நீங்கள் படிக்கிற மாணவர்கள் தானா? என்பதே எனக்குச் சந்தேகமாயிருக்கு...” டொக்டர் கூறியதைக் கேட்டுப்பதறியவர்கள்.

“சேர் நாங்கள் விட்ட பிழையை உணர்ந்திட்டம். எங்களை மன்னிச்சுக்கொள்ளுங்கோ. திலகாவிடம் நாங்கள் மன்னிப்புக் கேட்டு அவவை எப்படியும் கம்பசுக்கு வரச் சொல்லப் போறம் சேர் இனிமேல் இப்படியான றாக்கிங் எண்ட விளையாட்டில ஈடுபட மாட்டம்...” எனக் கூறியவர்கள் அவரிடம் விடைபெற்றனர்.

விசாலத்திற்கு அருகில் வந்தவர்கள் கையில் இருந்த பொருட்களைக் கட்டிலில் வைத்துவிட்டு “அம்மா எங்களை மன்னிச்சுக்கொள்ளுங்கோ... திலகா நீங்களும் எங்களை மன்னிக்க வேணும். நாங்கள் சும்மா விளையாட்டுக்குச் செய்த வேலை இவ்வளவு விபரீதமா வரும் எண்டு நினைக்கேல்ல. உங்களின்ர மென்மையான இயல்பையும், பின்னணியையும் அறியாமல் நாங்கள் பிழை விட்டிட்டம். எங்களை மன்னிக்கவேணும் ...” ஒரு இளைஞன் கூறி முடிப்பதற்கு முன் மற்றைய இளைஞர்களும்.

“அம்மா நாங்கள் இந்த மூண்டு நாளும் நிம்மதியில்லாமல் கடவுளை மட்டும் தான் வேண்டினாங்கள். இனிமேல் திலகாவை நாங்கள் எங்கள் சகோதரியாகப் பார்ப்பம் அம்மா...”

அச்சத்தால் உடல் படபடக்க கட்டிலில் கண் மூடிப் படுத்திருந்த திலகா ஆச்சரியத்துடன் கண்களைத் திறந்தாள். கண்களில் அன்புடன் தன் முகத்தைப் பார்த்த வண்ணம் நிற்கும் அந்த இளைஞர்களைப்

பார்த்ததும் அவர்கள் கரங்கள் அவளைப் பார்த்துக் குவிந்தன. பதிலுக்கு கரங் கூப்பிய திலகா "உங்களின்ர பரிசுத்தமான அன்பை நான் புரிஞ்சு கொண்டதோட என்ர தாழ்வு மனப்பான்மைக்கும் நான் வருந்துகிறன்..." திலகாவின் குரலில் அன்பும் பரிவும் கலந்து ஒலித்தன.

விசாலத்தின் மனதிலிருந்த சஞ்சலம் நீங்கி நிம்மதி பிறந்தது. மகளின் கரங்களை அன்புடன் பற்றி வேடிக்கையாக "திலகா கம்பஸ் பக்கம் இனி போகமாட்டியா அம்மா..." விசாலம் கேட்டு வாய் மூடுமுன் "அம்மா திங்கட்கிழமை கம்பசுக்கு போய் முதல் வேலையா இந்த அண்ணாவையை கிறவுண்டைச் சுத்தி ஓட வைக்கப் போறன். திலகாவின் மகிழ்ச்சி கலந்த கலகலப்பான குரல் எல்லோர் முகங்களிலும் சந்தோஷ அலைகளை ஏற்படுத்தியது. நோயாளர்களைப் பார்வையிடும் நேரம் முடிந்ததற்கான மணியோசை கேட்டதும் எல்லோரும் பரபரப்பாக வெளியேறினர். திலகாவிடம் விடை பெறுவதற்கு முன் அவளிடம்

"திலகா எல்லாவற்றையும் மறந்து கம்பசுக்கு வா அம்மா. நாங்கள் உன்னை எங்களின்ர சகோதரியா நினைக்கிறம். இனிமேல் இப்படியான விளையாட்டில ஈடுபடமாட்டம்" என உறுதியளித்து வெளியேறினர்.

திலகாவின் மனதில் நிம்மதியும், மகிழ்ச்சியும் மேலோங்கியது. எதிர்காலம் ஒளிமயமாகத் தெரிந்தது. தாயின் கனவு தனது எதிர்கால இலட்சியம் யாவையும் நிறைவேற்றுவேன் என்ற நம்பிக்கையே அவளுக்குப் புதிய பலத்தையளித்தது. அவளது நெஞ்சில் ஆயிரம் பட்டாம் பூச்சிகள் சிறகடித்துப் பறந்தன. •

# கல்லுக்குள் ஈரம்

பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படத் தயாரானது கிளிநொச்சி பஸ். யன்னலோரமாக சீற்றிலிருந்த சுகந்தி தலையை வெளியே நீட்டிப் பார்த்தாள். கோமதியை இன்னும் காணவில்லை. கையிலிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் 5.30 மணி. வழமையாகக் கோமதி வந்து சுகந்திக்கும் சீற் பிடித்து வைப்பாள். இன்று பஸ் புறப்படும் நேரமாகியும் கோமதி வராதது சுகந்திக்கு யோசனையாக இருந்தது.

5.30க்குப் புறப்படும் பஸ்ஸைத் தவறவிட்டால் கிளிநொச்சி சென்று அங்கிருந்து இராமநாதபுரத்திற்கும் செல்லும் பஸ்ஸைப் பிடிக்கமுடியாது. பாவம் கோமதி ரீச்சர் பஸ்சைத் தவறவிடப்போறாளே எனப் பதட்டத்துடன் வெளியே தலைநீட்டிப் பார்த்தாள் சுகந்தி.

தொலைவில் கோமதி தன் கணவரின் சைக்கிளிலிருந்து இறங்கி ஓடிவருவது தெரிந்தது. கண்டக்ரரிடம் "தம்பி கோமதி ரீச்சர் வாறா. கொஞ்சம் பாத்திட்டு எடுங்கோ" மகிழ்ச்சியுடன் கூறினாள் சுகந்தி.

"வழமையாக வாற ஆக்களைப் பாத்துத்தான் நாங்கள் பஸ் எடுப்பம். பயப்பிடாதேங்கோ..." கண்டக்ரர் புன்னகையுடன் கூறினான்.

வேர்க்க விறுவிறுக்க பஸ்சினுள் ஏறிய கோமதி, சுகந்தியின் அருகில் அமர்ந்துகொண்டாள்.

வழமையாக 5.30இற்குப் புறப்படும் பஸ்சில் அரசாங்க ஊழியர்களே பிரயாணம் செய்வது வழக்கம். அவர்களிற் பெரும்பாலும் ஆசிரியர்கள் பிரயாணம் செய்வதால், எல்லோரும் நன்கு பரிச்சயமானவர்கள் என்பதுடன் றைவர், கண்டக்ரருடனும் நன்கு பழகும் வாய்ப்பு

ஏற்படுவதால் அவர்களும் எல்லோரும் வருவதை ஓரளவு கவனித்தே பஸ்சை எடுப்பார்கள்.

கோமதி ரீச்சர் 5.15க்கு முன்னரே வந்துவிடுவது வழக்கம். அதனால் எல்லோரும் அவளைப்பார்ப்பது தெரிந்து சுகந்தி, கோமதியின் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள்.

கோமதியின் கண்கள் இரண்டும் சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. இரவு நித்திரையில்லாது இருந்திருக்கவேண்டும். கண்கள் கலங்கிச் சிவந்திருந்தன.

ஒரே கல்லூரியில் சுகந்தியும் அவளும் கற்பிப்பதால் சேர்ந்தே பிரயாணம் செய்வார்கள். கடந்த ஒருவருடமாக அவர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

இருவரும் நெருங்கிய நண்பிகளாதலால் கோமதியின் கண்கள் கலங்கியிருப்பதற்கான காரணத்தை அறிய அவளின் கரங்களைப்பற்றிய சுகந்தி "என்ன கோமதி? ஏன் லேற்...? கண்ணும் சிவந்திருக்கு. என்ன பிரச்சினை?" என்று கேட்டாள்.

"சுகந்தி பிள்ளைக்குச் சுகமில்லை. நல்ல காய்ச்சல். மருந்து எடுத்து இப்ப கொஞ்சம் விட்டிருக்கு. இரவிரவா நித்திரை இல்லை. லீவு எடுத்து நிற்கலாமெண்டா வாற சனிக்கிழமை தமிழ்த்தினவிழா. அதுக்குப் பிள்ளையளுக்கு டான்ஸ் பழக்கவேணும். அதுதான் லீவு எடுக்காம வாறன்."

வன்னிக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற இந்த ஒரு வருடத்திலும் அவள் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல. அவளைப் போன்றுதான் வன்னிக்கு இடமாற்றம் பெற்ற பல ஆசிரியைகள் ஊரிலே பிள்ளைகள், கணவர், நோயுற்ற பெற்றோர்களைப் பராமரிக்கும் பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாது ஆதங்கப்படுவதை அவள் கேட்டிருக்கின்றாள்.

பாடசாலையிலும் ஒழுங்காகக் கற்பிக்க முடியாமல் வீட்டு நினைவுகளில் மூழ்கிவிடும் ஆசிரியைகள். நேரம் பிந்தி வருவதனால் அதிபர்களின் கண்டனத்திற்கும், சக ஆசிரியர்களின் கேலிப் பேச்சுக்கும் ஆளாகும் ஆசிரியைகள் எனப் பல தரப்பினரும் பஸ்ஸிற்குள் தமது ஆதங்கங்களை வெளிப்படுத்துவது வழக்கம்.

கோமதியும், சுகந்தியும் கற்பிக்கும் பாடசாலை அதிபர் கண்டிப்பானவர் என்பதுடன்; அடிக்கடி லீவு எடுப்பதையோ, நேரம் பிந்தி வருவதையோ அவர் விரும்புவதில்லை.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக ஆசிரியர்கள் பல தியாகங்களைச் செய்யவேண்டும். கடமையிலே கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டும் என எதிர்பார்ப்பவர்; ஆசிரியர்கள் கலந்துரையாடலின் போது "நாங்கள் எல்லோரும் எங்களின்ர பிள்ளைகளின்ரை கல்வியில அக்கறை செலுத்தவேணும். இந்தப் பிள்ளையள் பல இன்னல்களை அனுபவிச்சபிள்ளையள் உங்களின்ரை பிள்ளைகளைப் போலதான் இந்தப் பிள்ளைகளையும் நீங்கள் நினைக்கவேணும். மேலதிக வகுப்புக்கள் எடுங்கோ. பரீட்சைப் பெறுபேறு நல்லதா வரவேணும்..."

அவரது கண்டிப்பால் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்வியில் அக்கறைகொண்டு கற்பித்தனர். இந்தநிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள்; பாடசாலைக்குப் பிந்தி வருவதையும், லீவு எடுப்பதையும் குறைக்கவேண்டும் எனவும் மேலதிக வகுப்புக்கள் எடுக்கவெண்டும் எனவும் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

அதிபரின் கண்டிப்பும் கலகலப்பாக ஆசிரியர்களுடன் பழகாத தன்மையும், ஆசிரியர்கள் மத்தியில் அவரைப் பற்றிப் பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்தது. ஒட்டுமொத்தமாக ஆசிரியர்கள் அவரைச் சிடுமூஞ்சி என்றே தமக்குள் கூறிகொள்வார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்னர் கோமதி வகுப்பறையில் இருந்த போது, வீட்டிலிருந்து அவசரமாக ரெலிபோன் வந்தது. அவளது மகன் கோபி மயங்கி விழுந்ததாகவும் மருத்துவமனைக்குக் கொண்டுபோய் மருந்தெடுத்ததாகவும் காய்ச்சல் கூடியே மயக்கம் வந்ததாகவும் அவள் கணவன் பாஸ்கர் கூறியதைக் கேட்டதும் அவளது உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கியது.

அவள் இன்று காலையில் பாடசாலைக்குப் புறப்படும்போது லேசாக அவனது உடல் சுடுவது தெரிந்தது. கணவனிடம் காய்ச்சல் கூடினால் மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும்படி கூறிவிட்டே வந்தாள்.

இப்போது கணவன் மகன் மயங்கியதாகக் கூறியதும் அவளால் தாங்கமுடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்திலே பாடசாலையைச் சுற்றி வந்த அதிபர் ஸ்ரீகாந்தன் அவள் ரெலிபோனில் கதைப்பதைக் கண்டுவிட்டார். அவளின் அருகிலே வேகமாக வந்த அவர் நிலைமையைப்புரிந்துகொள்ளாமல் "ரீச்சர்வகுப்பறையில்ரெலிபோன்

கதைக்க வேண்டாம் எண்டு எத்தனை தரம் சொல்லிப்போட்டன். நீங்கள் இப்படி நடந்தால் பிள்ளையளை எப்பிடித் திருத்திறது..." கோபமாகக் கூறிவிட்டுச் செல்லும் அவரிடம் உண்மையைச் சொல்ல உதடுகள் துடித்தாலும் பயத்திலும், பதட்டத்திலும் செய்வதறியாது திகைத்து நின்றாள் கோமதி.

துக்கம் மேலிட, கண்களில் கண்ணீர் துளிர்த்ததை மாணவர்கள் பார்க்காத வண்ணம் மெதுவாகத்துடைத்துக் கொண்டவள் தொடர்ந்து பாடத்தை நடாத்தி முடித்துவிட்டு, ஆசிரியர்கள் தங்குமிடத்திற்கு விரைந்தாள்.

அங்கேயுள்ள கதிரையில் அமர்ந்தவளுக்குத்துக்கம் தொண்டையை அடைத்தது. மகனின் சுகயீனம், அதிபர், மாணவர்களுக்கு முன்னால் தன்னைக் கண்டித்தது எல்லாம் சேர்ந்து அவளது கண்களில் கண்ணீரை வரவழைத்தது.

அவள் அருகிலே வந்த சுகந்தி அவளைத் தேற்றினாள். ஏனைய ஆசிரியர்களும் அவளுக்கு ஆறுதல் கூறினர்.

இரண்டு நாட்களுக்குமுன் நடந்த சம்பவத்திற்குபிறகு அவள் அதிபரின் முகத்தைப் பார்ப்பதற்கே அஞ்சினாள். இயல்பாகவே பயந்த சுபாவம் உள்ள கோமதி அதிர்ந்து பேசாதவள். அமைதியானவள். யாராவது கோபமாகப் பேசினால் அழுதுவிடும் இயல்புள்ளவள்.

கோமதியும் சுகந்தியும் பாடசாலைக்குள் நுழைந்தபோது வழமையாகக் காரியாலய வாசலில் நிற்கும் அதிபர் ஸ்ரீகாந்தனை அங்கே காணவில்லை. இருவரும் ஆச்சரியத்துடன் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

கோமதியின் அருகே மெல்லக் குனிந்த சுகந்தி "என்ன கோமதி சிடுமூஞ்சியை இண்டைக்குக் காணேலை. முழுவியளம் நல்லதுதான். இண்டைக்கு நிம்மதியா வேலை செய்யலாம்" எனக் கூறியவள் சுற்று முற்றும் பார்த்துவிட்டு வரவுப் பதிவேட்டில் கையொப்பமிட்டாள்.

கோமதி அச்சத்துடன் அதிபர் நிற்கின்றாரா என்பதைப் பார்த்துவிட்டு கையொப்பமிட்டுவிட்டு, வகுப்பறைகளுக்கு இருவரும் விரைந்தனர்.

பாடசாலையின் உட்புறத்தில், விளையாட்டு மைதானத்திற்கு முன் உள்ள மலைவேம்பு மரத்திற்குக்கீழே ஆசிரியர்கள் அனைவரும் கூடி நின்றனர். வழமையாகப் பாடசாலையில் அதிபர் நிற்கும்போது

இவ்வாறு யாரும் கூடிநின்று அரட்டை அடிப்பதில்லை. இன்று அவர்கள் கூடியிருப்பதற்கு ஏதோ காரணம் இருக்கவேண்டும் என்று எண்ணியவர்களாக இருவரும் அவ்விடத்திற்கு விரைந்தார்கள்.

அவர்களைக் கண்டதும் மார்க்கண்டு மாஸ்ரர் "ரீச்சர் உங்களுக்கு விஷயம் தெரியுமே எங்கன்ர பிறின்சிப்பல் பாத்ரூமுக்க வழுக்கி விழுந்திட்டாராம். தலையிலை காயமாம். கையிலும் நோவாம் ..." அவர் கூறி முடிப்பதற்குமுன் "என்ன சேர் காயம் பலமானதே. இப்ப ஆஸ்பத்திரிலையோ அல்லது வீட்டிலையோ..." கோமதி பதட்டதுடன் கேட்டாள்.

அதிபரிடம் அடிக்கடி பேச்சு வாங்கும் கோமதி இவ்வாறு அக்கறையாகக் கேட்டதும் சுகந்தி அவளை ஆச்சரியத்தோடு பார்த்தாள். "ரீச்சர் தலையில சின்னக்காயமாம். கைதான் நோக் கூட இருக்கிறதால எக்ஸ்றே எடுத்துப் பார்க்க யாழ்ப்பாணம் போகப் போறாராம். நாங்கள் இண்டைக்கு எல்லோரும் ஏதாவது வாகனம் ஒண்டைப் பிடிச்சுக் கொண்டு அவரைப் பார்க்கப் போவம் எண்டிருக்கிறம்..." கூறி முடித்தார் மார்க்கண்டு மாஸ்ரர்.

"நாங்க இரண்டுபேரும் நீங்கள் போகேக்க வாறம்" எனக் கூறிய கோமதியும் சுகந்தியும் அதிபரைப் போய்ப்பார்த்துவிட்டு யாழ்ப்பாண பஸ் எடுத்துப் போவதாக முடிவு செய்தனர்.

அன்று முழுவதும் அதிபருக்கு நடந்த சம்பவம் பற்றிய பேச்சாகவே இருந்தது. பாடசாலை 2 மணிக்கு விட்டதும் வான் ஒன்றிலே அதிபரைப் பார்க்கச் செல்வதாக முடிவாயிற்று.

கிளிநொச்சியிலே கரடிப்போக்குச் சந்தியில் அவரது வீடு இருப்பதனால் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய ஆசிரியர்களும் அவரைப் பார்த்து விட்டு போகலாம் என முடிவெடுத்தனர். அதற்காக வாகனம் ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டது.

பாடசாலை விட்டதும் இரண்டொருவரைத்தவிர ஏனைய ஆசிரியர்கள் அனைவரும் வாகனத்தில் ஏறிக் கொண்டனர்.

வாகனம் ஓடிக்கொண்டிருந்தது. ஒவ்வொரும் அதிபர் ஸ்ரீகாந்தனைப் பற்றித் தமக்குத் தெரிந்தவற்றைக் கூறினர். அவர் மனைவியை விட்டுப் பிரிந்திருப்பதாக ஆசிரியர் முகுந்தன் கூற மார்க்கண்டு மாஸ்ரர் "சேர் அவருக்கு இரண்டு பிள்ளையள் அவற்றை மகள் பிரச்சனேக்க செல் விழுந்து இறந்திட்டுதாம். மகனைக் காணேலையாம்..." மார்க்கண்டு

மாஸ்ரார் சொல்வதை இடைமறித்த பிறைசூடி மாஸ்ரார் "சேர் இரண்டு பிள்ளையளுமே செத்துப்போச்சாம்..." அதிபரின் துயர வாழ்க்கை எல்லோரையும் மௌனிக்க வைத்தது.

கிளிநொச்சிக்குச்சென்ற வாகனம் ஹ9 பாதைவழியாகக் கரடிப்போக்குச் சந்தியை அடைந்தது. சந்தியிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் பக்கமாகச் சிறிதுதூரம் சென்றதும் றோட்டின் கரையிலே அவரின் வீடு இருந்தது. மார்க்கண்டு மாஸ்ரார் யாரிடமோ அவரின் வீடு இருக்குமிடம் பற்றி விசாரித்து வந்தது நல்லதாகப் போய்விட்டது.

வாகனத்திலிருந்து இறங்கிய அனைவரும் கேற்றைத் திறந்து உள்ளே புகுந்தனர். கதவு உட்புறமாகத் தாழிடப்பட்டிருந்ததால் மார்க்கண்டு மாஸ்ரார் "சேர்... சேர்..." என அழைத்தார்.

அவர் அழைக்கும் சத்தத்தைக் கேட்டுக் கதவைத் திறந்த ஸ்ரீகாந்தன் தனது ஆசிரியர்கள் திரண்டு வந்திருப்பதைப் பார்த்ததும் திகைத்துவிட்டார். பரபரப்புடன் "வாங்கோ...வாங்கோ...எல்லாரும் உள்ளுக்கு வாங்கோ..." என்று அழைத்த அவரது முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. தங்கள் அதிபரின் சிரித்த முகத்தை இதுவரை பார்த்திராத ஆசிரியைகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அமைதியான ஆடம்பரமற்ற வீடு. சுத்தமாக இருந்தது.

தலையிலே ஏற்பட்ட அவரது சிறு காயத்திற்குக் கட்டுப் போடப்பட்டிருந்தது. கைகளுக்குப் பாண்டேஜ் சுற்றப்பட்டிருந்தது. பாடசாலையிலே பார்க்கின்ற அதிபருக்கும் இங்கே பார்க்கும் அதிபருக்கு மிடையில் எவ்வளவு வேறுபாடு.

எல்லோருடனும் சகஜமாகவும், அன்பாகவும் உரையாடிய அவர், எழுந்துசென்று தானே பிறிஜ்ஜைத் திறந்து சோடாவை எடுத்து, கிளாஸ்களிலே ஊற்றி, பிஸ்கெற்றுடன் எல்லோருக்கும் கொடுத்தவர்; ஆசிரியர்கள் அனைவரும் உள்ளே பார்ப்பதைக் கண்டு, "இதோ கொஞ்சநேரம் பொறுத்துக் கொள்ளுங்கோ. ஒரு நிமிஷத்தில வாறன்..." எனக் கூறி உள்ளே சென்றார்.

அவர் உள்ளே சென்று யாருடனோ உரையாடுவது வெளியே இருப்பவர்களின் காதுகளில் விழுந்தது. மெல்லிய குரலிலே ஒரு பெண்குரல். வரமாட்டன் என மறுப்பதும், "இல்லையில்ல வாங்கோ எங்கன்ர ரீச்சேஸ் உங்களைப் பார்க்கவேணும்" என வற்புறுத்துவதும் கேட்டது.

எல்லோரும் ஆச்சரியத்துடன் உள்ளே பார்க்க, அதிபருக்கு அருகில் ஊன்று கோலுடன் ஒரு காலில்லாது தாண்டிவரும் ஒரு பெண்ணையும், அந்தப் பெண்ணைக் கைத்தாங்கலாக அழைத்துவந்து கதிரையொன்றில் இருக்கச் செய்த ஸ்ரீகாந்தனையும் அதிர்ச்சியுடன் பார்த்தனர்.

கால்களில் ஒன்று முழங்காலுக்கு கீழாக இல்லை. அந்தப் பெண்ணில் முகத்தில் சாந்தியும், அமைதியும் நிலவியது. அதேநேரம் அந்த முகத்தில் ஆழ்ந்த சோகமும் அப்பியிருந்தது. அந்தப் பெண்; தங்கள் முன்னிலையில் வருவதற்குத் தயங்கியமைக்கான காரணத்தை, அனைவரும் உணர்ந்து கொண்டனர்.

அங்கே நிலவிய அமைதியைக் குலைத்த ஸ்ரீகாந்தன்“ இவ என்ரை மனிசி ஜானகி. இங்க நடந்த பிரச்சினையில இவவுக்கு ஒரு கால் இல்லாமல் போச்சு... எங்களுக்கு இரண்டு பிள்ளையள். ஒரு மகனும், ஒரு மகளும். இந்த பிரச்சினையில எங்கன்ர மகளையும் இழந்ததோட, மகனையும் தொலைச்சிட்டம். இவ்வளவு காலமும் தேடாத இடமில்லை. விசாரிக்காத ஆக்களில்லை... மனதைக் கல்லாக்கி வாழுறம். அதுதான் அவவுக்குக் கவலை...”

தழுதழுத்த குரலில் கூறியவர். “எனக்கு அம்மாவும் இருக்கிறா உள்ள வந்து பாருங்கோ...” என அழைத்தார். பேசமுடியாது மனங்கலங்கி இருந்த அனவரும் உள்ளே சென்றனர்.

படுத்த படுக்கையாகக் கட்டிலிலே ஸ்ரீகாந்தனின் தாயைக் கண்டனர். அவர்களை உள்ளே அழைத்துக் சென்றவர் “அம்மா உங்களைப்பார்க்க எங்கன்ர ரீச்சேஸ் வந்திருக்கினம்...’அவர் கூறியதைக் கேட்டதும் “வாங்கோ தம்பியைப் பார்க்க வந்தனீங்களே என்ர பிள்ளைதான் பாரிசவாதத்தில படுத்திருக்கிற என்னையும் பார்த்து, காலில்லாத ஜானகியையும் பார்த்து, வீட்டு வேலையும் செய்து வேலைக்கும் வாறவர். இண்டைக்கு கடவுளின்ர சோதனையோ என்னவோ என்ர பிள்ளைக்கும் இப்படி நடந்திட்டுது...” கூறிய அவரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.

தாயின் கண்ணீரை அன்புடன் துடைத்தவர் “அம்மா எனக்குச் சின்னக்காயம் கைநோமட்டும் கொஞ்சம் கடுமை. ஆனாலும் பெரிய பிரச்சினை இல்லையம்மா. எதுக்கும் ஒரு எக்ஸ்றே எடுத்துப்பார்ப்பமெண்டு யாழ்ப்பாணம் கொஸ்பிற்றலுக்குப்

போகப்போறன்..." தாயைச் சமாதானப் படுத்தியவர் அவர்களை அழைத்துக் கொண்டு வெளியே வந்தார்.

மார்க்கண்டு மாஸ்ரர் பொறுக்கமுடியாது "சேர் நீங்கள் ஏன் சேர் இவ்வளவு கஷ்டப்படுகிறீங்கள். ஒரு வேலையாளை வைச்சுப்பாக்கலாம் தானே..." அவரது கருத்தை எல்லோரும் ஆதரித்தனர்.

அவர்களின் கருத்துக்களை செவிமடுத்த ஸ்ரீகாந்தன் "நீங்கள் சொல்லிறது சரி ஆனா நான் பாக்கிற மாதிரி என்ர மனிசியையும் அம்மாவையும் ஒரு தரும் பாக்கமாட்டினம். இது என்ர கடமை எண்டு நான் செய்யிறன். இது எனக்கு மனச் சந்தோஷத்தையும் திருப்தியையும் தருகுது..." கூறி முடித்த அவரின் முகத்தில் அமைதியும் திருப்தியும் நிலவின.

அவரிடம் இருந்து விடை பெற்று எழுந்த போது ஸ்ரீகாந்தன்: "கோமதி ரீச்சர் உங்கன்ர கஷ்டம் எனக்குப் புரியுது. நானும் இதே போல கஷ்டங்களை அனுபவிச்சிருக்கிறன். நான் D.E. யோட கதைச்சிருக்கிறன். உங்களுக்கு கிளிநொச்சி ரவுணில ஏதாவது பள்ளிக்கூடம் போடச் சொல்லி. அவர் செய்துதாறன் எண்டு சொன்னவர்... நீங்கள் எல்லாரும் என்னை மதிச்சு என்னை பார்க்க வந்தது எனக்கு மகிழ்ச்சியா இருக்கு..."

ஸ்ரீகாந்தன் அவர்களை வாசல்வரை வந்து வழியனுப்பினார். அவரிடம் விடைபெற்ற அனைவரது இதயங்களும் கனத்திருந்தன. மனங் கலங்கி விடைபெற்ற அவர்களின் இதயங்களில் இமயமாக உயர்ந்து நின்றார் அதிபர் ஸ்ரீகாந்தன். அவரின் துன்பம் நிறைந்த வாழ்க்கையோடு ஒப்பிடுகையில் தமது கஷ்டங்களெல்லாம் கடுகாகத் தோன்ற, எதையும் இலகுவாக எடுத்து வாழ்க்கையில் எதிர் நீச்சலோடு வாழும் ஸ்ரீகாந்தனைப் போல வாழவேண்டும் என்ற வண்ணம் புதிய பலத்தையும், நம்பிக்கையையும் தர கோமதியும், சுகந்தியும் யாழ். செல்லும் பஸ்சைப் பிடிப்பதற்கு விரைந்தனர். ●

# தரையில் விழுந்த மீன்

நேரம் காலை சுமார் 8மணியிருக்கும். யாழ். போதனா வைத்திய சாலையின் 1 ஆம் வார்ட்டின்முன் போடப்பட்டிருந்த நீண்ட வாங்கில் அமர்ந்திருந்தேன். என்னைப்போல பல நோயாளர்களும் அந்த வாங்கில் வரிசையாக அமர்ந்திருக்கின்றார்கள். வெள்ளைப் புறாக்களாக சீருடையுடன்குறுக்கும் நெடுக்குமாக நடந்து, பரபரப்பாக இயங்கும் தாதியர்களையும் வெள்ளைக்கோட்டை மாட்டிக்கொண்டு ஒவ்வொரு நோயாளர்களின் பூர்வீகத்தைக் குறிப்பெடுக்கும் மருத்துவ மாணவர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த எனக்கு என் கையிலிருந்த எக்ஸ்ரே, ஈ.சி.ஜீ.றிப்போட்டுகள் நானும் ஒரு நோயாளி என்பதை நினைவூட்டியது.

அந்த றிப்போட் என்னை முழு நோயாளியாக்குமா? அல்லது ஒன்றும் வித்தியாசமில்லை, நோமல்தான். வீட்டிற்குப் போகலாம்என்று டொக்டரைச் சொல்லவைக்குமா? பரீட்சை முடிவை எதிர்பார்க்கும் மாணவனின் மனநிலையுடன் காத்திருந்தேன்.

"ஆரோக்கியம்! ஆரோக்கியம்! அழகுராணி! மரியமுத்து! மரிய புஸ்பம்! கோகிலா! வான்மதி! றஜனி! வார்ட் தாதியின் உரத்த குரல் அழைப்பு எனக்குப் பாடசாலையில் வரவு இடாப்புப் பதிவதற்கு மாணவர்களின் பெயர்களைச் சொல்லி அழைப்பதை நினைவூட்டுகிறது.

டொக்டரிடம் தம்மைப் பரிசோதிப்பதற்காக அவர்கள் தங்கியிருக்கும் அறையை நோக்கி வரிசையாகச் செல்லும் ஏனைய நோயாளர்களுடன் நானும் சேர்ந்துகொள்கின்றேன்.

உட்புறமாகப் போடப்பட்டிருந்த வாங்கிலில் எல்லோரும் அமருகின்றோம். ஒவ்வொருவராக டொக்டரிடம் பரிசோதனைக்காகச் செல்கின்றனர். எனக்கு அருகில் இருந்த பெண் என் கைகளிலே மெதுவாகச் சுரண்டி "உங்களுக்கு முன்னால் நீலச் சட்டையோடை இருக்கிற பிள்ளைக்குப் பக்கத்திலை பச்சைப் பாவாடை சட்டையோடை இருக்கிற பிள்ளையை வடிவாப் பாருங்கோ. பிறகு சொல்லுறன்" என் காதுக்கு அருகில் மெதுவாகக் கூறினார்.

இப்பொழுதுதான் அந்தப் பெண்மணி கூறிய பச்சைப் பாவாடை அணிந்த இளம் பெண்ணைப் பார்க்கின்றேன். பார்த்தவர்களை மீண்டும், மீண்டும் பார்க்கத் தூண்டும் அழகிய முகம். நீண்ட கருமையான கூந்தல். அதிகாலையிலே முழுகியிருக்கவேண்டும். கூந்தலின் நுனியிற் கோடலி முடிச்சு. பச்சைப் பாவாடையும், வெளிர்பச்சை நிறத்திற் சட்டையும் அணிந்திருந்த அந்த இளம்பெண்ணின் முகம் ஒரு சிறு குழந்தையின் முகத்தையே நினைவூட்டியது.

"ஏன் இந்தப் பெண்ணைப் பார்க்கும்படி என்னிடம் அந்த வயது முதிர்ந்த பெண் கூறியிருக்கவேண்டும்" என்று யோசித்தவண்ணம் மீண்டும் உன்னிப்பாக அந்தப் பெண்ணை நோக்குகின்றேன். ஒரு கணம் என் கண்களை நம்பமுடியவில்லை. ஓ...! அந்த முதியபெண் கூறிய காரணம் எனக்கு மெல்லப் புரிவதுபோல் இருந்தது.

தன் கையிலிருந்த றிப்போட்டுக்களைப் பார்ப்பதும் சிரிப்பதும், தனக்குள்ளே கதைத்துக்கொள்வதுமான செயற்பாடுகள், அந்த இளம்பெண் சாதாரண மன நிலையில் செயற்படவில்லை என்பதைப் புரியவைத்ததுடன், அந்தப் பெண்ணுக்கு என்ன நடந்திருக்கும் என அறியவேண்டும் என்ற ஆவலைத் தூண்டியது. பொதுவாக மற்றவர்களின் அந்தரங்கங்களை அலசுவது எனக்குப் பிடிக்காத விடயமாக இருந்தாலும் இந்த விடயத்தில் என் மனசு சுய கட்டுப் பாட்டை மீறியது மட்டும் உண்மை.

எனக்கு அருகில் இருந்தவர்கள் பரபரப்படைவதைக் கண்டு தலையைத் திருப்பிப் பார்க்கின்றேன். பொலிஸ் உத்தியோகத்தர் இருவர் டொக்டரின் அறைக்குள் நுழைந்ததைக் கண்டுதான் அங்கு இருந்த நோயாளிகள் பரபரப்படைந்தனர் என்பதைப் புரிந்துகொண்டேன். டொக்டரின் அறைக்குள் அந்த இளம்பெண்ணை அவர்கள் ஏதோ கேட்பதும், எவ்வித பயமுமின்றி அந்தப் பெண் அதே

வெகுளிச் சிரிப்புடன் பதிலளிப்பதும் விலகிய திரைச் சீலைக்குப் பின்னால் தெரிந்தது.

டொக்டர் என்னை அழைப்பதாக நர்ஸ் கூப்பிடவே; டொக்டரின் அறைக்குள் நுழைகின்றேன். எனது றிப்போட்டுக்களைப் பார்த்த டொக்டர் புன்னகையுடன் "பயப்படும்படியா உங்கண்ட றிப்போட்டிலை ஒண்டும் இல்லை. எல்லாம் நோமல். நீங்கள் வீட்டிற்குப் போகலாம். நான் எழுதித்தாற மருந்தை இரவிலை போடுங்கோ. சாப்பாட்டிலை கொஞ்சம் கொன்றோலா இருந்தாச் சரி..." அவர் கூறியதைக் கேட்டு நிம்மதியுடன் வார்ட்டை நோக்கி விரைகின்றேன்.

திடீரென என் மனதில் அந்த அழகிய இளம்பெண்ணின் கள்ளமில்லாத வெகுளிச் சிரிப்புடன் கூடிய முகம் வந்து, இனம் புரியாத பச்சாதாப உணர்ச்சியை ஏற்படுத்தியது. அந்த இளம் மொட்டிற்கு என்ன நடந்திருக்கும். அறியவேண்டும் என்ற ஆவல் உந்த, முன்பு அந்தப் பெண்ணைப் பார்க்கும்படி கூறிய எனது பக்கத்துக் கட்டிற் பெண்ணை அணுகினேன்.

அந்தப் பெண் கூறிய விடயங்கள் என்னை ஒரு கணம் நிலைகுலையச் செய்தன. சிறு வயதில் தாய் தந்தையரைப் பறிகொடுத்த அந்தப் பெண்ணான மஞ்சுளாவும், அவள் அண்ணன் சுதாகரும் பாட்டியின் பராமரிப்பிலே வாழ்ந்தார்கள். சிறு வயதிலிருந்தே குழந்தைத்தனமான இயல்புகளை உடையவளாக இருந்த மஞ்சுளாவைபெற்றோர்கள் இல்லாத காரணத்தினால் பாட்டியும் அண்ணன் சுதாகரும் அளவுக்கதிகமான செல்லம் கொடுத்து வளர்த்தார்கள். ஆனால், தாம் செல்லமாக வளர்த்தமையாலே தான் மஞ்சுளா வெகுளித்தனமாக இருப்பதாக எண்ணிவிட்டனர். ஆனால், பருவமடைந்த பின்னரும் அவளது வெகுளித்தனம் மாறாதிருக்கவே வைத்திய உதவியை நாடியும் எத்தகைய பலனும் கிடைக்கவில்லை. அவளது எதிர்காலம் பற்றிய பயம் இருவருக்கும் இருந்தது.

பாட்டியின் பாதுகாப்பில் மஞ்சுளா இருந்தாலும், வயது முதிர்ந்த நிலையில் அவரால் கண்ணுங்கருத்துமாகக் கவனிப்பதில் உள்ள இக்கட்டைச் சுதாகர் புரிந்துகொண்டாலும், சுதாகரால் ஒன்றும் செய்யமுடியவில்லை. கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் வேலைபார்க்கும் சுதாகரால் அடிக்கடி ஊருக்கு வரமுடிவதில்லை.

"பாட்டி எங்களின்ர முதலாளி நல்லவர். நான் எங்கன்ர வீட்டுநிலையை அவருக்குச் சொல்லியிருக்கிறன். ஆனா மஞ்சுவின்ர நிலையை ஒருவருக்கும் சொல்லேல்ல. நீங்கள் அவளை வலுக்கவனமா பாருங்கோ. நான் மூன்று மாதத்துக்கு ஒருக்கா வீட்டை வந்து போறன்..." சுதாகர் கூறியதுபோல மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஊருக்கு வந்து போனான்.

ஆனால், தன் தங்கையைப்பற்றி அடிக்கடி ரெலிபோனில் பாட்டியிடம் விசாரித்துக் கொள்வான்.

தன் முதலாளியைப் பற்றிப் பாட்டியிடம் அடிக்கடி பெருமையாகக் கூறும் சுதாகர்; அவர் ஐம்பது வயதைக் கடந்தவர் என்றும், இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை என்றும், இரக்க சிந்தனை உடையவர் என்றும் கூறியிருந்தான்.

சுமார் ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஒருநாள் சுதாகர் அவசரமாக ரெலிபோன் எடுத்தான். "பாட்டி எங்களின்ர முதலாளி ஊருக்கு வாறார். அவரிட்டை எங்களின்ர வீட்டு விலாசம் குடுத்திருக்கிறன்.

அவரிட்டை மஞ்சுவுக்கு உடுப்பு, அப்பிள், சொக்கிளேற் அனுப்பியிருக்கிறன். அவர் வீட்டில கொண்டுவந்து தருவார். அவரை வடிவாக் கவனிச்சால் தான் அவர் இங்கை என்னை ஊருக்கு அடிக்கடி வர விடுவார்."

சுதாகர் பாட்டியிடம் திரும்பத் திரும்ப வலியுறுத்தினான்.

அன்று வெள்ளிக்கிழமை. அருகிலுள்ள அம்மன் கோயிலுக்குப் பாட்டி போய்விட்டார். வீட்டிலே மஞ்சுளாவிற்குத் துணையாக பக்கத்துவீட்டு மல்லிகாவின் மகள் வித்யாவை விட்டுவிட்டுச் சென்றிருந்தார்.

சுதாகர் தன்னிடம் கொடுத்த அப்பிள், உடுப்புகள் என்பவற்றுடன், அவன் கொடுத்த முகவரியை விசாரித்து, தனது காரை அந்தச் சிறிய வீட்டின்முன் நிறுத்திவிட்டு, கிரிதரன் வீட்டின் கேற்றைத் திறந்தவர் "வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்... வீட்டில் யாருமில்லையா..." அவரது குரலைக் கேட்டு வெளியே வந்தாள் மஞ்சு. அலையெனப் புரளும் நீண்ட கூந்தலுடன் பேரழகின் பிறப்பிடமாய்த் தன் முன்னே ஓடிவரும் அந்த இளம் பெண்ணைப் பார்த்த கிரிதரன் ஒரு கணம் பிரமிப்பில் ஆழ்ந்துவிட்டார். 'சுதாகருக்கு இப்படி ஒரு அழகு மயில் தங்கையா?' எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறார் கிரிதரன்.

ஆனால் இந்தப் பெண்ணிடம் காணப்பட்ட அழகு அவரை பிரமிக்கச் செய்துவிட்டது.

அடுத்த கணம் அந்தப் பெண்ணின் செயல்கள் அவரை மிரள வைத்தன. சுதாகரின் பெயரைக் கூறி, தான் அவனுடைய முதலாளி என்பதைச் சொல்லி அறிமுகம் செய்தபோது 'கலகல' எனச் சிரித்த அந்த இளம்பெண் அவர் கைகளைப் பற்றி சுதாகர் கொடுத்தனுப்பிய பொருட்களை, வெடுக்கெனப் பறித்துக்கொண்டோடிய சம்பவம் அவர் மனதை நெருடியது.

வீட்டிற்கு வந்த கிரிதரனின் மனம் அந்த அழகிய பெண்ணைச் சுற்றியே வட்டமிட்டது. அவளது தோற்றத்திற்கும், அவளது செயலுக்கும் சம்பந்தமில்லாதிருந்தது; அவரின் மனதை உறுத்தியது. சுதாகர் தன் தங்கையைப்பற்றித் தன் முதலாளியிடம் எதுவுமே கூறவில்லை.

"வீட்டிலே பாட்டியும், தங்கையும் இருப்பார்கள்" என்றுமட்டுமே கூறியிருந்தான். மஞ்சுவுடன் நின்ற வித்தியா, பாட்டி கோயிலுக்குச் சென்று விட்டதாகக் கூறவே; கிரிதரன் அவளிடம் "தங்கச்சி... பாட்டி வந்தாச் சொல்லுங்கோ. சுதாகரின்ர முதலாளி வந்தவர் எண்டு. இன்னொரு நாள் நான் வாறனெண்டு சொல்லுங்கோ..." எனக் கூறியவர்; "அங்கு பாட்டி இருந்தாலாவது மஞ்சுபற்றி அறிந்திருக்கலாமே" என்று யோசித்தார்.

இதுவரைதன்மனைவியைத்தவிரயாரையும்மனதாலும்நினைக்காத கிரிதரனை மஞ்சுவின் அழகு சலனமடையச் செய்துவிட்டது. தன் கரங்களால் அவரது கைகளை பற்றியதனால் ஏற்பட்ட உணர்ச்சி அவர் மனதில் ஒருவித கிளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

அடுத்தநாள் சுதாகர் வீட்டிற்குச் சென்றவரை அன்புடன் வரவேற்ற பாட்டி, அவருக்குத் தன் மனதிலுள்ள பாரத்தைக் கொட்டிவிட்டார். "தம்பி உங்களைப் பற்றி சுதா நிறையச் சொல்லியிருக்கிறான். நான் வயதுபோன நிலையில இந்தப் பிள்ளையைப் பாதுகாக்கிறது வயித்தில நெருப்பைக் கட்டியிருக்கிற மாதிரி இருக்கு..." எனக் கூறியவர் மஞ்சுவின் வெகுளித்தன்மையையும் கூறிப் புலம்பினார். கிரிதரன்மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக மனம் திறந்து கதைத்தவர், அவர் கொழும்பிற்குச் செல்வதற்குமுன்னர் ஒரு தடவை வீட்டிற்குச் சாப்பிட வரவேண்டும் என அன்புக்கட்டளையிட்டார்.

அவரிடம் விடைபெற்ற கிரிதரனின் கண்கள் மஞ்சுவைத் தேடின. அவளுக்கென வாங்கிவந்த பிஸ்கட், சாக்லெட் என்பவற்றைக் கொடுப்பதற்கு அவளை அழைத்தார். "மஞ்சு இங்க வா... இந்த மாமா உனக்கு என்ன கொண்டு வந்திருக்கிறார் பார்... வா... வந்து அவரிட்டை வாங்கு..." பாட்டியின் அழைப்பைக் கேட்டு ஓடிவந்தவளின் கரங்களை - இறுகப்பற்றி; தான் வாங்கிவந்த பிஸ்கெட், சாக்லெட் என்பவற்றை வைத்தவர்; பாட்டிக்குத் தெரியாமல் அவள் கரங்களில் மெதுவாகச் சுரண்டினார். வெகுளிச்சிரிப்புடன் எதிர்ப்பில்லாமல் அவள் அவர் கொடுத்த பொருட்களைப் பெற்றுக்கொண்டது அவர் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

அதன் பின்னர் கொழும்பிற்குச் செல்வதற்கு முன்னர் ஒரு தடவை சாப்பாட்டிற்கும். மறுதடவை கொழும்பிற்குச் செல்லப்போவதைக் கூறவும் வந்தார். அந்தச்சந்தர்ப்பத்தில் பாட்டி வீட்டில் இருக்கவில்லை. அன்று மஞ்சுளாவிற்கு, தான் வாங்கிவந்த புதிய உடுப்பைக் கொடுத்தார். கிரிதரனுக்கு அவளது வெகுளித்தனம், தனிமை, வீட்டில் யாரும் இல்லாத அந்தச் சூழ்நிலை, அவளது பரிதாபநிலை என்பன எல்லாவற்றையும் மறந்து செயற்படவைத்துவிட்டது.

- கொழும்பிற்குத் திரும்பிய கிரிதரன்; சுதாகருடன் முன்னரிலும் அன்புடனும், நெருங்கியும் பழகினார். மஞ்சுவை நல்ல டாக்டரிடம் காட்டிக் குணப்படுத்தவேண்டும் என்றும் கூறினார். அவர் தன் குடும்பத்திற் காட்டிய அக்கறையில், சுதாகர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். அதன் பின்னர் இரு தடவைகள் யாழ்ப்பாணம் சென்று வந்த கிரிதரன் அதுபற்றி சுதாகரிடம் ஒன்றும் கூறவில்லை.

வழமையாக மூன்று மாதங்கள் முடிந்ததும் ஊருக்கு வரும் சுதாகர், இம்முறை நாலாவது மாதமே ஊருக்கு வர முடிந்தது.

வீடு இருண்டு கிடந்தது. பாட்டி அவனைக் கண்டதும் கதறி அழுதாள். 'பாட்டி! என்ன பாட்டி? ஏன் அழுகிறீங்கள்? மஞ்சு எங்க? சொல்லுங்கோ என்ன நடந்தது...?" அதட்டினான் சுதாகர்.

"சுதா! என்னத்தையடா சொல்லிறது? உன்ர தங்கச்சி... உன்ரை தங்கச்சி..." சொல்ல முடியாமல் தடுமாறினாள் பாட்டி.

"என்ன பாட்டி? எங்க மஞ்சு சொல்லுங்கோ...?" மீளவும் சுதா கேட்டான்.

பாட்டி கூறியதைக் கேட்டுத் தலையிலே கைவைத்து அப்படியே இருந்துவிட்டான் சுதாகர். “சுதா, மஞ்சு தலைசுத்து, வாந்தி எண்டு ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக்கொண்டு போனனான். அங்க சொல்லினம் அவள் கர்ப்பமாம். அவளுக்கு மாத சுகயீனம் ஒழுங்கில்லாததால எனக்கும் தெரியேல்ல. அவளுக்கும் இதுக்குக் காரணம் யாரெண்டு சொல்லேலாமல் சிரிச்சுக்கொண்டே இருக்கிறாள். அங்க அவை பொலிசுக்கும் அறிவிச்சுப் போட்டினம்... நாலு மாதமாச்சாம். இனி என்னடா செய்யிறது...?” பாட்டி கதறி அழுதாள்.

“பாட்டி! நாங்கள் கொழும்பில போய் இருப்பம். முதலாளி நல்லவர். எங்களுக்கு உதவி செய்பவர். மஞ்சுவை அங்கை கூட்டிக்கொண்டு போவம்” பாட்டிக்கு முதலாளியின்மீதே சந்தேகம். இருந்தாலும் எதைவைத்து நிரூபிப்பது? சுதாகரின் வேலை, அவன் முதலாளிமீது வைத்த நம்பிக்கை, எல்லாவற்றிற்கும் மேலாக மூன்று, ஜீவன்களும் வாழுவதற்கு ஆதாரமான தொழில். சுதாகருக்கு எப்படி இதனைக் கூறுவது? கிரிதரன்மீது குற்றம் சாட்டுவதற்கும் ஆதாரமில்லை. ‘பெரிய முதலாளியான அவரால் தன் பேரனுக்கும், பேர்த்திக்கும் ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடுமோ’ என்ற அச்சம் அவளை ஊமையாக்கிவிட்டது.

‘நாளை எப்படியும் மஞ்சுவை ஆஸ்பத்திரியிலிருந்து கொண்டு வாறதுக்குச் சுதாகர் பொலிஸ்காரர்களுடன் கதைக்கவேணும். அதுக்கு அவன் ஏதாவது செய்யவேண்டும்...’ என்று எண்ணியவளுக்கு, மஞ்சுவின் எதிர்காலம்பற்றிய கவலையே நெஞ்சில் பாரமாய் அழுத்தியது.

மஞ்சுவின் பரிதாபநிலையை எனக்குக் கூறிய என் பக்கத்துக் கட்டில் பெண்ணிடம் விடைபெற்ற என் மனம் நிலைகொள்ளாமல் தவித்தது. அந்த இளம் பெண்ணின் அழகிய முகமும் வெகுளிச் சிரிப்புமே என் நெஞ்சில் நிறைந்திருந்தன. கனத்த இதயத்துடன் அங்கிருந்து நகர்ந்த நான், வீடு நோக்கி நடந்தேன். ●



இராஜினிதேவியின் கதைகளில் மனித உறவுகளின் அடிச்சரடான அன்பின் நெகிழ்ச்சி, சக மனிதன் மீதான நேசம், நலிந்தவர்களுக்கு உதவும் பண்பு, வசதி படைத்த வர்க்கத்தினரது வரட்டுக் கௌரவம், அதனடியான வக்கிர விகசிப்பு எனப் பல விஷயங்கள் பரவலாக விரவிவருகின்றன. இந்த அம்சம் இவரது கதைகளை உள்ளடக்க ரீதியாக வலிமை மிக்கவையாக ஆக்கியுள்ளது.

இவர் யாழ். கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார். உயர்வகுப்பு மாணவர்களை நெறிப் படுத்தி பயிற்றுவிப்பதோடு நில்லாமல், பல்வேறு தேசிய கலை இலக்கியப் போட்டிகளிலும் - சிறுகதை, கவிதை, கட்டுரை, இலக்கிய விமர்சனம் - கலந்து கொண்டு பல சிறப்புக்களைப் பெற்றுள்ளார். அவரது பன்முக ஆற்றலை வெளிப்படுத்தும் முயற்சிகள் தொடர எனது வாழ்த்துகள்.

ISBN 955444000-5

Harikanan (Pvt.) Ltd., Jaffna.